அணியறுபது

உ

அணியறுபது

மூலமும் — உரையும்

ஆசிரியர்
செகவீரபாண்டியனார்

மதுரை
வாசுகி அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றன.
1964

All Rights Reserved.

உரிமை

எழிலொளி இனிதொளிர் இந்த நூலினைப்
பொழில்வழி மதுநுகர் பொறிவண் டென்னவுள்
விழிவழி நுகர்பவர்க் குரிமை மேவியே
கழிமகிழ் வுடனிது காண வந்தது.

விலை ரூ 3.

திருவள்ளுவர் நிலையம், 127. மேல மாசி வீதி, மதுரை.

ஜெகவீரபாண்டியனார்

முகவுரை

அழகு எவரையும் உவகையுறச் செய்கிறது. எல்லாரும் யாண்டும் அழகை விழைந்து வியந்து உவந்து காண்கின்றனர். காதுக்கு இசைபோல் கண்ணுக்கு அழகு நசையை ஊட்டி விடுகிறது.

உருவக் காட்சியில் மருவி வருகிற இனிய பொலிவையே அழகுஎன அறிந்து மனிதர் மகிழ்ந்து வருகின்றனர். இளமை நலம் வளமையாய் வளர்ந்து வரும் அளவு அழகு அங்கே கிழமையாய்க் கிளர்ந்து தெளிவாத் துலங்கி வருகிறது.

காந்தம் இரும்பைக் கவர்ந்து கொள்ளுவதுபோல் மாந்தரை அழகு விரைந்து கவர்ந்து கொள்கிறது.

எழில் ஏர் கவின் குழகு கோலம் சொக்கு நோக்கு யாணர் சாயல் வனப்பு வண்ணம் என இன்னவாறு அழகுக்கு ஐம்பது பெயர்கள் தோன்றி யுள்ளன. யாவும் காரணக் குறிகள் உடையன. கருதி யுணர்பவர் எவரும் காரணங்களைப் பூரண மாகத் தெரிந்து தெளிந்து வியந்து கொள்கின்றனர்.

அதிசய அழகன் எனக் கடவுளையே அழகு மொழிகளால் துதிசெய்து வருகின்றனர்: "விடை மேல் அழகர்; மதிசூடும் எழிலர்; சொக்கேசர்; அழகேசர்" என ஈசனை இவ்வாறு போற்றியுள்ளனர்.

செவ்வேள் என்பது முருகப்பெருமானுக்கு உரிமையாய் அமைந்துள்ள பேர். சிவந்த சோதித் திருமேனியும், என்றும் மாருத இனிய இளமையும், இணையேதும் இல்லாத பேரெழிலும் உடையவன் ஆதலால் இவ்வாறு அப்பெருமானுக்குப் பெயர் இயைந்து பெருமை பெற்றுளது. வேள் என்னும் சொல் விருப்பம்; விழைவு என்னும் பொருள்களை யுடையது. வேள் = மன்மதன். அவ்வேளும் விழைந்து எவ்வேளையும் வியந்து நோக்கும் அழகன் என்பது **செவ்வேள்** என்னும் பெயரால் தெரிய நின்றது.

ஆயிரம் கோடி காமர் அழகெலாம்
திரண்டு ஒன்ருகி
மேயின எனினும் சேவ்வேள் விமலமாம்
சரணம் தன்னில்
தூயநல் எழிலுக்கு ஆற்ருது; என்றிடின்,
இணைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார்
வகுக்க வல்லார்? (கந்தபுராணம)

முருகப்பெருமானது அற்புத அழகைக் குறித்து வந்துள்ள இதனை இங்கே ஓர்ந்து உணர்ந்து உண்மையைத் தேர்ந்து கொள்ள வேண்டும்.

உலகப் பிறப்புகள் எவற்றினும் மனிதப் பிறப்பு பெறுதற்கு அரியது. அவ்வாறு பெற்றுவரினும் அழகிய உருவங்களை உற்று வருதல் மிகவும் அரிது. உருவ அழகை மருவி வருவது அரிய புண்ணியப் பேருய்ப் பெருகி யுளது.

உருவு திருவூட்டும் என்பது முதுமொழி.

உருவின் மிக்கதோர் உடம்பது
பெறுதலும் அரிதே. (சீவகசிந்தாமணி, 2752)

அழகு ஓர் அரிய பெரிய பேறு என்பதை இதனால் நன்கு அறிந்து கொள்கின்றோம்.

ஆடவரினும் பெண்களிடமே அழகு வளமாய் வாய்ந்துளது. இயற்கை அழகை இனமா எய்தியிருப்பினும் செயற்கை அழகுகளை எவ்வழியும் அவர் வளமாச் செய்து கொள்ளுகின்றனர்.

பொன்மணிகளால் ஆன ஆபரணங்களை அவர் விழைந்து அணிந்து கொள்வதால் அணிகலன்கள் என அவை பெயர் பெறலாயின.

மண்ணுக்குப் பூசிப்பார்;

பெண்ணுக்குப் பூட்டிப்பார்!

என்பது நாட்டில் வழங்கி வருகிற பழமொழி.

பூடணங்களுக்கும் மகளிர்களுக்கும் உள்ள உறவுரிமைகளை இதனால் உணர்ந்து கொள்கின்றோம்.

இழைகளும் குழைகளும் இன்ன முன்னமே
மழைபொரு கண்ணிணை மடந்தை மாரொடும்
பழகிய எனினும்இப் பாவை தோன்றலால்
அழகுஎனும் அவையும்ஓர் அழகு பெற்றவே.
(இராமாயணம்: 1-11-34)

காது அணி கழுத்து அணி மூக்கு அணி கை அணி கால் அணி விரல் அணி முதலிய அரிய அணிகலன்கள் எல்லாம் இதுவரை மங்கையர்க்கு அழகு செய்து வந்தன: இப்பொழுது சீதாதேவியின்

திருமேனியை மருவி அந்த அணிகளே அழகு மிகப் பெற்றன என இந்த அழகிய கவி விழுமிய அழகை நயமா விளக்கியுளது. கவியின் சுவையைக் கருதி யுணர்பவர் அரிய பல உண்மைகளை நெறிமுறையே அறிந்து கொள்வர்.

உருவ அழகுடன் கற்பு முதலிய அற்புத எழில் களும் நிறைந்துள்ள அதிசய அழகி ஆதலால் காவி யத்தில் இவ்வாறு எவ்வகையாரும் வியந்து மகிழச் சீவிய ஓவியமாய் விளங்கி நிற்கிருர்.

அழியா அழகு உடையான்.

அணி பறித்து அழகு செய்யும் அணங்கு.

இராம காவியத்தின் தலைவனும் தலைவியும் ஆகிய இராமபிரானும் சானகிதேவியும் இவ்வகை யில் எவ்வழியும் எழில் ஒளிகளாய் நிலவியுள்ளனர். அழகு எத்தகைய மகிமை வாய்ந்தது என்பதை இவற்ருல் உய்த்து உணர்ந்து கொள்ளலாம்.

உடல் அழகு உயிர் அழகு என அழகு இருவகை நிலைகளில் மருவியுளது. முன்னதினும் பின்னதே உண்மையான உயர் பேரழகாம். இந்த மேலான அழகையே இந்நூல் சீராட்டிப் பாராட்டி யுள்ளது.

கண்ணுக்கு அருள் அணி;

கைக்கு ஈதலே அணி;

பெண்ணுக்குக் கற்பு ஒன்றே பேரணி.

இன்னவாருன அழகுகள் இதில் அணிஅணியாய் வந்து ஆன்ம எழில்களை விளக்கி யுள்ளன.

Handsome is that handsome does. (Goldsmith)

நல்லதைச் செய்வதே நல்ல அழகாகும்
அல்லது அழகன்று அயல்.

What is beautiful is good and who is good will soon also be beautiful. (Sapphó)

நன்மையே நல்ல அழகு; நலமுடையார்
உண்மை அழகா யுளர்.

Beauty without grace is the hook without the bait. (Emerson)

தண்ணளி இல்லா அழகை எவருமே
எண்ணார் மதியார் எதிர்.

Beauty is truth, truth beauty—that is all
Ye know on earth, and all ye need to know.
(Keats)

சத்தியமே என்றும் தனிஎழில்; எல்லாரும்
உய்த்துணர வேண்டும் இதை.

She was good as she was fair,
None, none on earth above her! (Samuel Rogers)

அழகும் குணமும் அமைந்த அவள்போல்
எவரும் உலகில் இலர்.

The beauty of things was born before eyes.
[R. Jeffers]

உருவ அழகோ ஒளிர்கண்கள் முன்னே
மருவி யுளது மதி.

அழகைக் குறித்து வந்துள்ள இந்த ஆங்கிலக் கருத்துக்கள் ஈங்கு நன்கு ஊன்றி உணர்ந்து கொள்ள வுரியன.

மேலோர் பெரியோர் என உயர்ந்து வந்துள்ளவர் எவரும் இனிய குண நலன்களாலேயே யாண்டும் சிறந்து விளங்கி யிருக்கின்றனர். பான்மை இழந்தால் மேன்மை ஒழிந்து போகிறது.

அகுணஸ்ய ரூபம் ஹதம்.

குணம் இல்லாதவனது உருவ அழகு பாழ்.

குண ஹீநுநி சுந்தரரூபமு செடுநு.

குணம் அற்றவனின் அழகிய வடிவம் கெடும்.

ஆரியம், தெலுங்கு முதலிய மொழிகளும் அழகையும் குணத்தையும் இவ்வாறு சீர்தூக்கி நோக்கி நேரே அளந்து மொழிந்துள்ளன.

பெறலரிய பெரும்பேருகப் பெற்று வந்துள்ள இந்த மனிதப் பிறவிக்கு உரிய பெரிய அழகு எது? மீண்டும் பிறவித் துயரங்கள் நேராமல் தெளிந்து பேரின்ப நிலையைப் பெறுவதே யாம்.

அடுத்த எப்பிறவியும் அடையாமல் செய்து கொள்வதே எடுத்த இப்பிறவிக்கு அழகு. இந்த அதிசய ஆனந்தப்பேற்றை அடைய வுரிய வழிகளை இந்த அழகு நூல் ஓரளவு விழி தெரிய விளக்கி விழுமிய நிலையில் விளங்கியுளது.

திருவள்ளுவர் நிலையம், இங்ஙனம்,
மதுரை.
10—11—1964 செகவீரபாண்டியன்.

இந் நூலின் சால்பு.

அணிஎன அமைந்தஇந் நூலை ஆய்ந்துளம்
துணிவுடன் அழகனுய்த் துலங்கி வாழுக!
பிணியற உயிர்களைப் பேணி அன்புடன்
பணிபல புரிகநீ படியும் இன்பமே.

நூலின் பயன்.

அரிய ஞான அழகுகள் யாவுமே
பிரிய மான மொழிகளில் பேணியே
தெரிய வந்துள நூலிதைத் தேர்ந்தவர்
உரிய சால்புடன் ஓங்கி விளங்குவார்.

அணியறுபது.

கடவுள் வாழ்த்து.

ஆழிசூழ் ஞாலம் அணிபெற் றினிதோங்க
ஊழி முதல்வன் உளமகிழ—வாழியென
வேதங்கள் ஏத்த விரைமயிலூர் வேளமல
பாதங்கள் எம்முடைய பற்று. (1)

இதன் பொருள்

ஆழ்ந்த கடல் சூழ்ந்த இவ்வுலகம் ஒளி பெற்று எழில் மிகுந்து விளங்க, ஊழி முதல்வனை சிவ பரம்பொருள் உளம் உவந்து மகிழ, இருக்கு முதலிய வேதங்கள் வியந்து புகழ்ந்து போற்ற, அதிசய வேகம் உடைய அழகிய நீல மயிலை வான வீதியில் ஞான ஒளிவீச மான வீரமா ஊர்ந்து அருளிய செவ்வேளின் திருவடி மலர்களே எனது உள்ளம் பற்றி யுள்ள உறுதித் துணைகள் என்க.

உலகப் பற்று ஒழியவும் உண்மைப் பற்று உறுதியாய்த் தெளியவும் உரிய வழி தெரிய வந்தது. பற்ற உரியவனைப் பற்றுவதே உற்ற பயனும்.

ஓங்க, மகிழ, ஏத்த, ஊர்கின்ற வேள் என்க. உலகமும் பரமனும் மறைகளும் மகிழ்ச்சி மீதூர்ந்து வர மயில் மீது ஊர்ந்து வந்துள்ள அரிய பெரிய அமலனை உரிமையா ஈங்கு அறிய நேர்ந்துள்ளோம்.

ஆழ்ந்து பரந்து விரிந்து நிறைந்துள்ள நீர்ப் பெருக்கை நிலையாக உடையது ஆதலால் கடலுக்கு **ஆழி** என்று ஒரு பேர் அமைந்தது. நிலமண்டலத்தைச் சலமண்டலம் சூழ்ந்திருப்பது அதன் நிலைமை தலைமைகளை நேரே நன்கு துலக்கி நின்றது.

ஐந்து பூதங்களும் காரண காரிய முறையே கலந்து நிற்கின்றன. அந்த நீர்மை சீர்மைகள் இந்த வாறு சிந்திக்க வந்தன.

யுகாந்த காலத்திலும் யாதும் நிலைகுலையாமல் தனிமுதல் தலைவனாய் நிலவி நிற்றலால் **ஊழிமுதல்வன்** என ஈசன் ஒளி பெற்றுள்ளான்.

வானும் வையமும் ஏதங்கள் நீங்கி இன்பமுற்று வாழும்படி மயில் ஊர்ந்தமையால் அயில்வேல் அமலனை **வேதங்கள்** ஏத்த நேர்ந்தன. அவல நீக்கமும் ஆனந்த ஆக்கமும் அதிசய ஆர்வங்களை விளைத்தன. அதனால் துதி செய்து போற்றின.

விரை மயில் என்றது அதன் விசித்திர வேகத்தையும், உக்கிர வீர பராக்கிரம நிலையையும், உறுதியுண்மைகளையும் உய்த்து உணர.

போரில் மூண்டு நீண்ட வீரோடு போராடிய சூரபன்மன் முடிவில் மயிலும் சேவலுமாய் நேரே மாறினன். மாறவே சேவலைக் கொடியாக ஏந்தி மயிலை வாகனமாக் கொண்டு முருகப் பெருமான் உலகம் உவந்து வாழ நலமா ஊர்ந்தருளினர்.

நூற்றெட்டு யுகமாக ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆண்டு வந்த அசுர வேந்தன் யாண்டும் மாண்டு

படாமல் நித்திய சிரஞ்சீவியாய்ச் செவ்வேளை எவ் வேளையும் அன்புடன் தாங்கி இன்பம் மிகப் பெற்றுள்ளான். ஆய அப்பேறு அறிய வந்தது.

தீயவை புரிந்தார் ஏனும்
குமரவேள் திருமுன் உற்றால்
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ?
அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான். (1)

சீர்திகழ் குமர மூர்த்தி
செறிவிழி கொண்ட தொல்லை
ஊர்தியின் இருக்கை நீங்கி
உணர்வுகொண்டு ஒழுகி நின்ற
சூர்திகழ் மஞ்ஞை ஏறிச்
சுமக்குதி எம்மை என்னப்
பார்திசை வானம் முற்றும்
பரிஎன நடாத்தல் உற்றான். (2)

தடக்கடல் உடைய மேருத்
தடவரை இடிய மற்றைப்
படித்தலம் வெடிப்பச் செந்தீப்
பதைபதைத்து ஒடுங்கச் சூறை
துடித்திட அண்ட கூடம்
துளக்குறக் கலாபம் வீசி
இடித்தொகை புரள ஆர்த்திட்டு
ஏகிற்றுத் தோகை மஞ்ஞை. (3)

வெயில்விடும் அநந்த கோடி
வெய்யவர் திரண்டு ஒன்ருகிப்
புயல்தவழ் கடவுள் வானிற்
போந்திடு தன்மை யேபோல்
அயிலினை உடைய செவ்வேள்
மரகதத்து அழகு சான்ற
மயிலிடை வைகி ஊர்ந்தான்
மாகமும் திசைகள் முற்றும். (4)

(கந்தபுராணம்)

அமரர் இடர் தீர்த்த குமாரக் கடவுள் மயில் வாகனப் பெருமாளைக் காட்சி தந்துள்ள மாட்சிமை இங்கே கண்டு வியந்து உவந்து களிக்கின்ருேம்.

உததியிடை கடவுமரகதவருண குலதுரக
உபலளித கனகரத சதகோடி சூரியர்கள்
உதயம்என அதிகவித கலபகக மயிலின்மிசை
உகமுடிவின் இருளகல ஒருசோதி வீசுவதும்:

(சீர்பாத வகுப்பு)

வடவரை ஓரா யிரமுறை தோறும்
வருங்கொடி மினல்எனவே
வாள்தரு கவர்நா நீள விதிர்த்திடு
மாசுண ராசனையே
கடகரி எட்டும் சென்னி கவிழ்த்துக்
கால்கள் மடித்திடவெம்
கடுவே கத்துடன் ஓடிக் குத்திக்
கதிர்செறி புஞ்சம்என
படமுடி தாழ எடுத்து தறிப்பர
தத்தின் நடித்திடும்ஓர்
பருமயில் கடவும் பவளக் குன்றே
பால சமுத்திரமே

உடலுறும் உயிர்கட் கினிதருள் அமுதம்
உருட்டுக சிறுதேரே
உமையொரு பாகற்கு அருமைக் குமரன்
உருட்டுக சிறுதேரே.
(திருப்போரூர்ச் சந்நிதிமுறை)

பாகம் ஒருபெண் குடியிருக்கும்
பரமன் அணியிற் பரித்தமணி
நாகம் நுழைவுற்று உடல்சுருண்டு
கிடந்து நகுவெண் தலைப்புழையில்
போக மெல்லத் தலைநீட்டிப்
பார்த்து வாங்கப் போகும்ஒரு
தோகை மயில்வா கனப்பெருமாள்
துணைத்தாட் கமலம் தொழுதிடுவாம்.
(பிரபுலிங்க லீலை)

மயிலின் அதிசய ஆற்றல்களை இவை துதி செய்துள்ளன. கவிகளில் கனிந்துள்ள சுவைகளைக் கருதி யுணர்பவர் உள்ளம் உருகி மகிழ்வர்.

நூறு கோடி சூரியர்கள் ஏக காலத்தில் நீலக் கடல் மேல் உதயம் ஆயது போல் கோல மயில் மேல் **முருகக் கடவுள்** எழுந்தருளி விளங்குகிறார். அந்த அற்புதக் காட்சியை அருணகிரிநாதர் யோகக் காட்சியில் கண்டு களித்திருக்கிறார். அவ்வுண்மையை ஈண்டு உறுதியா உணர்ந்து கொள்கிறோம்.

சதகோடி சூரியர்கள் உதயம் என மயிலின் மிசை ஒரு சோதி வீசுவது எனப் பரவசமாய்ப் பாடியிருப்பது நாடியறிய வுரியது. கடவுளின் காட்சி கலியருளும் மாட்சியாய்த் துதி கொண்டுள்ளது.

பிறவித் துயரங்களை நீக்கிப் பேரின்பம் அருள வல்ல பெருமான் திருவடிகள் இங்கே உரிமையுடன் உணர வந்தன. உண்மையை ஓர்வது உய்தி யுறுவதாம்.

வணக்கம்.

தந்தையே தாயே தனிப்பரனே என்றுன்னை
வந்தித்துப் பாடும் வகையடக்கி—உந்து
திரையாடு செந்தில் சிவனே! இதனை
உரையாடு கின்றேன் உவந்து. (2)

இ—ள்.

செந்திலம்பதியில் எழுந்தருளி யுள்ள இன்ப மயமான பரம் பொருளே, தந்தையே! தாயே! தனிமுதலே! என்று சிந்தை உருகி உன்னை எந்த வேளையும் துதிக்கும் துதிகளை அடக்கிக்கொண்டு இந்த நூலை உலக நலம் கருதி இயற்றுகின்றேன்.

அடக்கி ஆடுகின்றேன் என்றது, பாடுகின்ற பனுவலின் மேன்மையும் பாடும் புலவனது பான்மை யும் நாடி உணர வந்தது.

நூலறிவுக்கு உரிய பெரிய பயன் வாலறிவனைக் கருதி உருகித் தொழுது துதித்து உழுவலன்புடன் உள்ளம் தூய்மையாய் ஒழுகி வருவதே யாம்.

உலக உயிர்களுக்கு உறுதி நலன்களை உணர்த்துவது இறைவனுக்குச் செய்யும் பணியே ஆதலால் இந்த அணி நூலை ஆக்கி யுள்ளேன்.

ஆக்கியோன் குறிக்கோளும், ஆக்கிய நூலின் அமைதியும் இதனால் இனிது அறிய லாகும்.

வையம் நலமுறச் செய்யும் எவ்வகையான செயலும் தெய்வ வழிபாடே. சீவ இதம் தேவ மதம்.

வருபொருள்

அணியறுப திந்நூல் அளித்தேன் உலகம்
அணியுறுமென் றெண்ணி யதற்கு—மணியறுப
தாயிரம்தந் தின்பம் அருளினுய் மால்வெள்ளைத்
தாயறிந் தின்பமுறத் தான். (3)

இ—ள்.

அணி அறுபது என்னும் பேரினையுடைய இந்த அழகிய நூலை உலக மாந்தர் உவந்து பயின்று உயர்ந்து திகழ்வர் என்று கருதி அளித்தேன்: இதற்கு அறுபதினுயிரம் அரிய மணிகளைக் கலா தெய்வம் மகிழ்ந் தருள முருகப் பெருமான் விழைந்து அருளினுர். பெற்ற பேறுகள் மற்றவரும் அறியப் பேச நேர்ந்தன.

இந்நூலை இயற்றியதனுல் எய்தியுள்ள பலனை இ∴து உணர்த்தியுளது. இந்த இனிய நூலை ஓதி யுணர்ந்து ஒழுகி வருபவர் விழுமிய மேன்மைகளை மேவி விளங்குவர் என்பது விளங்கி நின்றது.

பொன் மணிகளால் ஆய அணிகள் உடலுக்கு அழகு செய்யும்; எண்ணம் உணர்வுகளால் ஆய இந்த அணிகள் உயிர்க்கு இனிய அழகு அருளும்.

சீவர்கள் மேன்மையாய்ச் சிறந்து வாழும் வழிகளை இந்நூல் எழிலுற விளக்கி யிருக்கிறது. அவ்வுண்மையை அணி என்னும் சொல் இனிது துலக்கியுளது. வாழ்வு அழகுறின் மனிதன் மாண்புறுகிருன்.

இனிய குண நலன்களாகிய அரிய அணிகலன்கள் இந்நூலுள் ஒளி நிறைந்துள்ளன. உரிமையுடன் அணிந்து கொள்பவர் உயர்ந்து திகழ்வர். மனிதன் உள்ளே குணம் ஏறிவர அவனுடைய வாழ்வுகள் உலகில் மணம் ஏறி மாண்பு சுரந்து வருகின்றன.

அழகு அதிசய உயர்வை அருளுகிறது.

சிறப்புப் பாயிரம்.

நெஞ்சினிக்க வாயினிக்க நேர்ந்த செவியினிக்கச்
செஞ்சொல் அமிர்தம் திரட்டியே—கஞ்சமலர்
அன்னை மகிழ அணிதந்தான் பாண்டியனும்
மன்னர் பெருமான் மகிழ்ந்து. (4)

இ—ள்.

அரிய அறிவின் சுவைகள் இதில் மருவியுள்ள மருமம் அறிய வந்தது. தன்னை உண்டவரை அமிர்தம் நெடிது வாழச் செய்தல் போல் தன்னை உணர்ந்தவரை உயர்ந்து ஒளி மிகுந்து வாழச் செய்யும் சிறந்த மதுர மொழிகளால் இந்நூல் அமைந்துள்ளது. அந்த உண்மையை உரைகள் உணர்த்தி உறுதி கூர்ந்து நிற்கின்றன.

கஞ்சமலர் அன்னை = சரசுவதி தேவி.

கல்வியறிவின் அதிதேவதை ஆகிய இத்தாய் நல்ல உணர்வொளிகள் உள்ள நூல்கள் வெளிவரின் பெருமகிழ்வு கொள்வள் ஆதலால் அந்த உவகை நிலை ஈண்டு உரிமையாய் உணர வந்தது.

நெஞ்சு இனிக்க என்றது உணருந்தோறும் உள்ளம் உவந்து உயர்ந்து சிறந்து வருதலை.

வாய் இனிக்க என்றது வாசிக்குந் தோறும் மகிழ்ச்சி மீதூர்ந்து மாட்சியுற்று நிற்றலே.

செவி இனிக்க என்றது கேட்கும் தோறும் இன்புறுதலே. சுவை நுகர்வுகள் தெரிய வந்தன.

கேட்ட செவி நினைத்த மனம் சொன்னவாய் இன்னும் என்று கிடைக்கும் என்று தேட்டமுறும்படி நூல் கிளர்ந்து வந்துள்ளமை தெளிந்து கொள்ள வந்தது. உண்மை தெளிவது உணர்வின் ஒளியாம்.

மாந்தருக்கு மேலான சாந்திகளை நூலறிவு சால்புடன் அருளுகிறது. உலக இருள்களை நீக்கி வெளியே இதம் செய்கிற வான ஒளிகளினும், ஞான ஒளி உயிர்களின் மருள்களை ஒழித்து உள்ளே உறுதி நலன்களை இனிது விளக்கி உய்தி புரிகிறது.

ஆதவர்கள் ஆயிரம்பேர் அகிலமெலாம்
ஒளிவீசி அருமை யாக
மீதெழுந்து வந்தாலும், வெண்திங்கள்
சதகோடி விளங்கி னாலும்,
ஓதியுணர் கலைஞான ஒளிநிறைந்த
உரவோன்போல் உயிர்கள் உள்ளே
தீதவமாய்ச் செறிந்திருக்கும் மடமையிருள்
ஒழிக்குமோ? தெளிக தேர்ந்தே!

மருளான இருள்களை நீக்கி மனிதர்களுக்கு இன்பம் அருளுகிற தெருள் ஒளி இங்கே தெரிய வந்துளது. மெய்யுணர்வை யருளி உயிர்களுக்கு உய்தி புரிகிற நூல்கள் தெய்வ ஒளிகளாய் ஓங்கி எவ்வழியும் சிறந்து திகழ்கின்றன.

நூல்

1. கண்ணுக் கருள்அணியாம் கைக்கீத லேஅணியாம்
பெண்ணுக்குக் கற்பொன்றே பேரணியாம்—மண்ணுக்கு
நீதி ஒழுக்கம் நிறையறிவோ டஞ்சாமை
ஆதியுடை வேந்தே அணி. (க)

இ–ள்.

கருணை கண்ணுக்கு அழகு; ஈகை கைக்கு அழகு; கற்பு பெண்ணுக்கு அழகு; அரசன் மண்ணுக்கு அழகு; நீதி ஒழுக்கம் நிறை அறிவு அஞ்சாமை முதலிய அரிய நீர்மைகள் அரசனுக்கு அழகு என்க.

அணி = அழகு; அலங்காரம்; ஆபரணம்; பெருமை; நன்மை. இன்னவாறு பல பொருள்களை அணி என்னும் சொல் குறித்து வருகிறது.

அணியப்படுவது; அண்ணி யிருப்பது அணி என வந்தது. காரணக்குறி கருதி யுணர வுரியது.

மணி பொன் முதலியவைகளாலாய அணிகளை மகளிரும் ஆடவரும் அணிந்து வருதல் வழக்கமாய் வந்துளது. மனித வளர்ச்சி இதனால் விளங்குகிறது.

தம்மை அணிந்து கொண்டவர்க்கு அழகு செய்து வருதலால் ஆபரணங்கள் அணிகள் என நேர்ந்தன. காட்சியளவில் அணி மாட்சி தருகிறது.

அழகு என்பது கண்டவர் விரும்பி மதிக்கும் இனிமை. விழைந்து நோக்கி வியந்து மகிழ்ந்து வர வியனாய் வாய்ந்தது அழகு என அமைந்தது.

வெளிப் படையாய்த் தெரிய வருகிற உருவ அழகினும் உண்மையான உயிர் அழகு உயர் நிலை யுடையது. அவ்வகையான செவ்விய அழகையே இந்த நூல் சிந்தை தெளிய நன்கு விளக்கியுளது.

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணிஅன்றோ பீடு நடை. (குறள் 1014) [றேல்

சான்றோர்க்கு நாணுடைமையே நல்ல அணி; அ∴து இல்லையேல் அவரது பெருமித நடை பெரிய பிணியாம் என நாயனார் இவ்வாறு குறித்துள்ளார்.

இத்தகைய உத்தம அணிகளே இப் புத்தகத்தில் வித்தக விவேகமாய் உய்த்துணர வந்துள்ளன.

மனிதனுடைய உறுப்புக்களுள் கண் மிகவும் தலைமையுடையது. அதற்கு உரிய அணி பிரியமுடன் முதன்மையாய்த் தெரிய வந்தது.

அருள் என்பது எவ்வுயிர்க்கும் இரங்கி யருளும் இனிய நீர்மை. இது தனி மகிமை வாய்ந்தது.

பிற உயிர்கள் துயருறக் கண்ட பொழுது எந்த மனிதன் உள்ளம் இயல்பாய் உருகி மறுகுகிறதோ அந்த மனிதன் சிறந்த மேலோனாய் உயர்ந்து நிற்கிறான். தண்ணளி புண்ணிய ஒளியா யுளது.

உயர்வான மேன்மைக்கு அடையாளம், உயிர்கள்பால் இரங்கி எவ்வழியும் இதம் புரிந்து வருவதே. பூத தயையே புனித மா தவம்.

அறுகம்புல் நோக மிதியார்; அயலார் மறுக ஒரு சொல் உரையார் எனப் பெரியார் இயல்புகள் இவ்வாறு உயர்வாய்த் தெரிய வந்துள்ளன.

ஓர் அறிவு உயிர்களிடத்தும் பேரருள் புரிந்து வரு பவர் தெய்வத் திருவருளை அடைந்தவராகின்றார்.

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன்; பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்;
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேருறக் கண்டுளம் துடித்தேன்;
ஈடில் மானிகளாய் ஏழைகள் ஆய்நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.
(அருட்பா)

இராமலிங்க அடிகளிடம் அமைந்திருந்த அருள் நீர்மையை இதனால் இனிதே அறிந்து கொள்கிறோம்.

எவ்வுயிரும் என்உயிர்போல் எண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே!

இறைவனை நோக்கித் தாயுமானவர் இவ்வாறு அருள் நலனை அருளுமாறு வேண்டி யிருக்கிறார்.

தண்ணளியாளர்கள் புண்ணிய சீலர்களாய்த் திகழ்ந்து எண்ணரிய நலன்களை எய்துகின்றனர்.

தன் கண்ணில் கருணை கனிந்துவரின் அந்த மனி தனிடம் தனியே மகிமை சுரந்து வருகிறது. ஆகவே அருள் கண்ணுக்கு அணி என வந்தது.

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃதின்றேல்
புண்என்று உணரப் படும். (குறள் 575)

இரங்கி யருளும் இரக்கமே கண்ணிற்கு அணி கலம்; அந்த அருள் இல்லையேல் அது புண்ணே என்

னும் இது ஈண்டு எண்ணியுணர வுரியது. கண்ணோடிக் காணும் காட்சியில் தோன்றும் மாட்சியான கருணை **கண்ணோட்டம்** என வந்தது.

கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்; காமுற்ற
பெண்ணுக் கணிகலம் நாணுடைமை; - நண்ணும்
மறுமைக் கணிகலம் கல்விஇம் மூன்றும்
குறியுடையார் கண்ணே யுள. (திரிகடுகம் 52)

பண்ணுக்கு வாம்பரித்தேர் ஆதபனும்
 பணிந்துபசு பதியை நோக்கி
மண்ணுக்குத் தவம்புரியும் தனஞ்சயற்குக்
 கோடையினும் மதியம் போன்றான்
எண்ணுக்கு வரும்புவனம் யாவினுக்கும்
 கண்ணவான் இவனே அன்றோ
கண்ணுக்குப் புனைமணிப்பூண் கண்ணோட்டம்
 என்பதெல்லாம் கருணை அன்றோ?
(பாரதம், அருச்சுனன் தவம் 43)

கண்ணுக்கு இனிய அணிகளை இவை காட்டியுள்ளன. கருணை தோய்ந்ததே கண் ஆகின்றது.

இமயமலைச் சாரலில் நின்று சிவபெருமானைக் கருதி அருச்சுனன் அருந்தவம் புரிந்தான். அவன் மீது அருள்புரிந்து சூரியனும் குளிர்ந்திருந்தான். எல்லா உலகங்களுக்கும் கண்ணுயுள்ள அவன் இவன் பால் கண்ணோடிக் கருணை புரிந்துள்ளான். அவ்வுண்மையை ஈண்டு உணர்ந்து உவந்து கொள்கிறோம்.

கண்ணோட்டம் என்பது கருணையே; அதுவே கண்ணுக்கு உரிய இனிய அணிகலம் என்று குறித்திருப்பது இங்கே கூர்ந்து ஓர்ந்து சிந்திக்கவுரியது.

கருணை தோய்ந்த கண்ணே கண்; அது போல் ஈகை வாய்ந்த கையே கை. ஈதலைக் கைக்கு அணி என்றது அதனால் விளைந்து வருகிற விழுமிய பலன்களை வியந்து. தருபவன் தருமன் ஆகிறான்.

தான் வருந்தி ஈட்டிய பொருளைப் பிறரும் அருந்தி மகிழும்படி கொடுத்து வருபவன் கொடையாளி யாகிறான். ஆகவே அவன் புகழும் புண்ணியங்களும் உடையனா யுயர்கிறான். உயரவே இம்மையும் மறுமையும் அவனுக்குத் தனியுரிமைகளாய் இன்ப நலன்களை இனிது அருளுகின்றன.

ஈகையுறு கையே இறைகோல் இனிதேந்தி
ஓகையுற நாளும் உலகாளும்—ஈகையிலாப்
புன்கை புலைக்கை புழைக்கை உலக்கைஎன
மங்கி யிழியும் மருண்டு.

பிற உயிர்கள் உவந்து வர உதவி புரிந்து வந்தவன் பின்பு இந்த உலகம் முழுதையும் ஆளும் தலைவனாய் உயர்ந்து திகழ்கிறான். அவ்வாறு உதவாதவன் எங்கும் எவ்வகையிலும் உதவாதவனாய் மங்கி இழிந்து கழிந்து ஒழிந்து போகின்றான்.

ஈயாதவன் உலோபி என யாவராலும் இழிவாக எண்ணி எங்கும் எள்ளி இகழப்படுகின்றான்.

ஈபவன் வள்ளல் என எல்லாராலும் உவந்து புகழ்ந்து யாண்டும் போற்றப் பெறுகின்றான்.

மின்னும் தமனியமும் வெற்றிரும்பும் ஓரினமாப்
பொன்னின் பெயர்படைத்தால் போலாதே - கொன்னே
ஒளிப்பாரும் மக்களாய் ஒல்லுவ தாங்கே
அளிப்பாரும் மக்களா மாறு. (பெரும்பொருள்)

வள்ளல் மாற்றுயர்ந்த தங்கம்; உலோபி துருப் படித்த இரும்பு என இது குறித்துளது. ஈகை தன்னை யுடையானை உயர்த்தித் தேவனுக்கிப் பொன்னுலகில் வாழச் செய்கிறது; உலோபம் தன்னைத் தொட்டவனைக் கெட்டவனுக்கித் தாழ்த்தி ஆழ்த்தி நரகத்தில் வீழ்த்தி விடுகிறது.

ஈந்து உயர்க; ஈயாமல் இழிந்து போகாதே.

அருள் ஈந்த கண்ணும்; பொருள் ஈந்த கையும் தெய்வத்திருவருள் எய்தி உய்வைப் பெறுகின்றன.

கற்பு பெண்ணுக்கு அணி என்றது அதன் அற்புத நிலைகளை எல்லாம் ஆய்ந்து அறிந்து தெளிய.

நெறி திறம்பாத நிறையுடைமை பெண்மைக்குப் பெருமகிமைகளை நேரே அருளி வருகின்றது.

தான் மணந்து கொண்ட கணவன் ஒருவனிடமே உரிமையான காதலுடையவள்; வேறு எந்த ஆடவரையும் சிந்தை யாலும் தீண்டாத செம்மை உள்ளம் உள்ளவளே பதிவிரதை; உத்தமி; கற்புடையாள் என ஒளி மிகப் பெற்று உயர்ந்துள்ளாள்.

உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று.
(தொல்காப்பியம்

உண்மையான பெண்மைக்குக் கண்ணும் உயிரும் எவை? நாணமும் கற்புமேயாம் என இஃது உணர்த்தி யுளது. **செயிர்தீர் காட்சி** என்றது, கற்பை அவர் கருதிக் காத்து வருகிற உறுதி யுண்மைகளை நன்கு ஓர்ந்து உணர வந்தது.

கற்புறு சிந்தை மாதர் கணவரை அன்றி வேறுஓர்
இற்புறத் தவரை நாடார் யாங்களும் இன்ப வாழ்வும்
தற்பொறி யாக நல்கும் தலைவ நின் அலது ஓர்தெய்வம்
பொற்புறக் கருதோம் கண்டாய் பூரணானந்த வாழ்வே.
(தாயுமானவர்)

தன்பதியையே கருதி ஒழுகும் கற்பினள்போல் பரமபதியே! உன்னையே கருதி உருகி வருகிறேன் எனத் தாயுமானவர் இவ்வாறு இறைவனை நோக்கிப் பாடியிருக்கிறார். உண்மையான பத்திக்கு உத்தம பத்தினியை ஒப்புக்காட்டி யுள்ளார். கற்பு என்றால் என்ன? அதனை யுடையவர் எப்படி யிருப்பர்? என்பதை இங்கே ஓரளவு அறிந்து கொள்கின்றோம்.

கற்பு அற்புதத் திரு; அதிசய மகிமை யுடையது; அதனை உரிமையா மருவி யுள்ளவரை வையமும் வானமும் பெருமையாப் போற்றி வரும்.

நாடும் ஊரும் நனிபுகழ்ந்து ஏத்தலும்
பீடு றும்மழை பெய்யெனப் பெய்தலும்
கூட லாற்றவர் நல்லது கூறுங்கால்
பாடு சால்மிகு பத்தினிக்கு ஆவதே. (வளையாபதி)

கற்பு மேய கனங்குழை மாதரைப்
பெற்று ளோர்தம் மரபும் பெருந்தவக்
கற்பி னுட்கொண்ட காதலன் ஆருயிர்ச்
சுற்றம் யாவும் துறக்கத்தின் எய்துமால்.
(காசிகாண்டம்)

கற்புடைமையால் விளைந்து வருகிற அதிசய மேன்மைகளை இவை துதி செய்து துலக்கி யுள்ளன. பொருள்களின் குறிப்புகளையும் சிறப்புகளையும் கூர்ந்து ஓர்ந்து தேர்ந்து கொள்ள வேண்டும்.

கற்பு ஒன்றே என்றதில் ஏகாரம் அதன் ஏற்றத்தைத் தேற்றமா விளக்கி நின்றது. ஆருயிரின் பேரணியான அதனால் புண்ணியங்கள் பொலிந்து திகழ்கின்றன: எண்ணரிய நலன்கள் விளைந்து வருகின்றன; விண்ணவரும் வியந்து தொழுகின்றனர்.

கற்பினுக்கு அரசினைப் பெண்மைக் காப்பினைப்
பொற்பினுக்கு அழகினைப் புகழின் வாழ்க்கையைத்
தற்பிரிந்து அருள்புரி தருமம் போலியை
அற்பினத் தலைவனும் அமைய நோக்கினான்.
(இராமா: மீட்சி 60)

பெண்மைக்கு உண்மை நிலையமான சீதையை இது இவ்வாறு குறித்துள்ளது. குறிப்புகள் கூர்ந்து ஓர்ந்து சிந்திக்கத் தக்கன.

உலக மாந்தரை நீதியாப் பாதுகாத்தற்குத் தலைமை தாங்கியுள்ளவன் வேந்தன் என நேர்ந்தான். உண்ணும் உணவாலும் பருகும் நீராலும் மனிதர் வாழ்ந்து வரினும் அந்த வாழ்வு இடையூறின்றி இனிது நடந்து வருவது அரசனது நீதியான ஆட்சி முறையாலே யாம்.

நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்.
(புறம் 186)

உலகிற்கு அரசன் உயிர் என்று **மோசிகீரனார்** என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் கூறியுள்ளார்.

நெல்லுயிர் மாந்தர்க் கெல்லாம்
நீருயிர் இரண்டும் செப்பின்
புல்லுயிர் புகைந்து பொங்கு
முழங்கழல் இலங்கு வாட்கை

மல்லலங் களிற்று மாலை
வெண்குடை மன்னர் கண்டாய்
நல்லுயிர் ஞாலம் தன்னுள்
நாமவேல் நம்பி என்றான்.
(சீவகசிந்தாமணி 2908)

தேவர்தம் உலகினும் தீமை செய்துழல்
மாவலி அவுணர்கள் வைகு நாட்டினும்
ஏவெவை உலகம் என்று இசைக்கும் அன்னவை
காவல்செய் தலைவரை இன்மை கண்டிலம். (1)

முறைதெரிந்து ஒருவகை முடிய நோக்குறின்
மறையவன் வகுத்தன மண்ணில் வானிடை
நிறைபெருந் தன்மையின் நிற்ப செல்வன
இறைகளை இல்லன யாவை காண்கிலம். (2)

வள்ளுறு வயிரவாள் அரசில் வையகம்
நள்ளுறு கதிரிலாப் பகலும் நாளொடும்
தெள்ளுறு மதியிலா இரவும் தேவுடன்
உள்ளுறை உயிரிலா உடலும் ஒக்குமே. (3)
(இராமா: 2-10)

அரசன் உலகினுக்கு உயிர்; எந்த உலகமும் தனக்கு உரிமையான ஒரு தலைவனை உடையதே; மன்னன் இல்லையானால் மாநிலம் மறுகி யுழலும்; சூரியன் இல்லாத பகலும், சந்திரன் இல்லாத இரவும், உயிர் இல்லாத உடலும், அரசு இல்லாத நாடும் அவலம் அடையும் என்று வேதமுனிவர்கள் இவ்வாறு ஓதியுள்ளனர். இவற்றை ஈண்டு ஓர்ந்து உணர்ந்து உண்மை நிலைகளைத் தேர்ந்து அரசின் பெருமைகளைத் தெளிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு உரிமை தோய்ந்துள்ளமையால் மண்ணுலகிற்கு மன்னன் அணி என நேர்ந்தான். வையம் காக்கவுரிய வேந்தன் செய்ய நீதி முதலியவைகளால் சிறந்து திகழ்கிருன். ஆகவே அவை அவனுக்கு அணிகள் என அமைந்தன.

பூபதி மகிபதி பார்த்திபன் என அரசனுக்கு நேர்ந்துள்ள பெயர்கள் அவனுடைய நிலைமை தலைமை நீர்மைகளை வார்த்துக் காட்டி யுள்ளன.

உரிய குணநலன்கள் மருவி வரும் அளவே அரசனது ஆட்சி மாட்சியடைந்து உயர்ந்து வருகிறது,

நீதி = யாதும் கோடாமல் நெறிமுறை புரிதல்.

ஒழுக்கம் = உள்ளம் தூயனுய் ஒழுகி வருதல்.

நிறை = எதையும் சீர் தூக்கிச் செம்மை செய்தல்.

அறிவு = கலை நிலைகளைத் தேர்ந்து தெளிதல்.

அஞ்சாமை = நெஞ்சம் தளராமல் நெறியே நிற்றல்.

இத்தகைய தன்மைகள் தோய்ந்துவரின் அந்த வேந்தன் எத்தகைய நிலைகளிலும் சிறந்து உத்தமனுய் உயர்ந்து ஒளிமிகுந்து விளங்குவான்.

அரசியல்பு.

அண்டசரா சரங்களெல்லாம் ஆதரவாக்
காத்தருளல் அரிய ஆற்றல்
கொண்டபரா பரனுக்கே தனியுரிமை;
கோவேந்தர் என்பார் ஈண்டிம்
மண்டலத்தைப் புரந்தெங்கும் மனுநீதி
புரிந்துவரின் மகிமை வாய்ந்து
விண்டலமும் புகழ்ந்துவர விமலனருள்
சுரந்துவர விளங்கி நிற்பார். (1)

நீராழி சூழ்ந்துள்ள நிலவலயத்து
உயிர்களெலாம் துயர்கள் இன்றிச்
சீராக வாழ்ந்துவரத் தேர்வேந்தர்
சேர்ந்துவந்தார் செங்கோல் ஏந்திப்
பாராளும் உரிமையினைப் பரம்பரையாப்
பற்றிநின்ருர் பண்பு நீதி
நேராரும் நேராத வீரமுதல்
நீர்மையெலாம் நேர்ந்து நின்றே. (2)

பெற்றதந்தை பிள்ளைகளைப் பேணிவரும்
பெற்றிஎனப் பெருநீர் வையத்து
உற்றவுயர் மக்கள்எலாம் உரிமையுடன்
எவ்வழியும் உவந்து வாழப்
பற்றியவெண் குடைகவித்து முடிசூடிப்
பரிவோடு பேணி யாரும்
கொற்றவன்என்று ஏத்திவரக் கோமுறைகள்
புரிந்துவரின் குலவேந் தாவார். (3)

கல்வியெலாம் கற்றவராய்க் கற்றவரைக்
கண்ணுகக் கருதி நாளும்
நல்வினைகள் எவ்வழியும் செவ்வையா
நடந்துவர நாடி நோக்கிப்
புல்வினைகள் எவரிடமும் எவ்வகையும்
யாண்டுமே புகாமல் போக்கிப்
பல்வழியும் ஒளியேறிப் பரவிவரப்
பார்காப்பார் பண்பார் வேந்தர். (4)

காட்சியினில் எளியவனாய்க் கலைநிலையில்
ஒளியவனாய்க் கருமம் காணும்
நீட்சியினில் நெடியவனாய் நேரலர்முன்
நேரலனாய் நீதி நேர்மை

ஆட்சியினில் அதிசயனாய் ஆய்வுரையில்
அரியவனாய் அமர்ந்து செங்கோல்
ஓச்சிவரின் அவன்மாட்சி உலகமெலாம்
ஒளிவீசி உலாவு மன்றே. (5)

மன்னரின் மாட்சிகளை விளக்கி வந்துள்ள இவை யாவும் ஈண்டு எண்ணி உணர வுரியன. நாட்டை நலமா ஆள வுரியவர் பல வகை நிலைகளிலும் உயர்ந்து இனிமையும் வலிமையும் திறமையும் தெளிவும் உடையராய் அமையின் அங்கே மாந்தர் உவந்து சிறந்து உயர்ந்து நன்கு வாழ்ந்து வருவர்.

இன்னவாறே பிறவும் வரைய நேரின் உரை மிகவும் விரியும்; ஆதலால் இனிமேல் சுருக்கமாய் வரும். வரினும் யாவும் யூகித்து உணர்ந்து கொள்ள வேண்டும். மதியூகம் மகிமைகளை அருளி வரும்.

௨. மனத்துக் கணிதூய்மை வாய்க்கணி வாய்மை
தனத்துக் கணியே தருமம்—வனத்துக்கு
மாதவர்கள் வாழ்வதணி மாதவர்க்கு ஞானமே
ஆதர வான அணி. (௨)

இ—ள்.

தூய்மை மனத்துக்கு அணி; வாய்மை வாய்க்கு அணி; தருமம் தனத்துக்கு அணி; மாதவர்கள் வனத்துக்கு அணி; ஞானம் மாதவர்க்கு அணி என்க.

மனம் முதலியன இனமா அறிய வந்தன.

தூசி தோயாதது தூய்மை ஆயது. சித்தசுத்தி அதிசய மகிமை யுடையது. எல்லா நன்மைகளும் அதனால் விரைந்து விளைந்து வருகின்றன.

உயிர்க்குக் கண்ணு யுள்ளது உள்ளம். அதை மாசு படியாமல் பாதுகாத்து வருபவன் மகானுய்த் தேசு மிகுந்து சிறந்து வருகிருன்.

கண்ணுடியில் அழுக்குப் படிந்தால் எந்த ஒளியும் அதில் தோன்ருது. மனத்தில் அழுக்குப் படிந்தால் எல்லா நன்மைகளேயும் அது இழந்து விடுகிறது. அகத்தில் அழுக்கு அற்ற போதுதான் மனிதன் இகத்தில் மகத்துவம் மிகப் பெறுகிருன்.

கற்றதம் கல்வியுங் கடவுட் பூசையும்
நற்றவம் இயற்றலும் நவையில் தானமும்
மற்றுள அறங்களும் மனத்தின் பால்அழுக்கு
அற்றவர்க் கேபயன் அளிக்கும் என்பரால்.
(காசிகண்டம்)

மனத்தூய்மை எத்தகைய மகிமை யுடையது! எவ்வளவு பாக்கியங்கள் நிறைந்தது! என்பதை இதனுல் இனிது அறிந்து கொள்கிருேம்.

மனம் புனிதம் ஆனுல் அந்த மனிதன் தெய்வம் ஆகிருன். உய்தி யாவும் உளவாகின்றன.

சத்தியத்தால் வாய் புனிதம் உறுகிறது; தருமத்தால் செல்வம் சிறப்படைகிறது; அரிய தவசிகளால் வனம் வனப்பு மிகுகிறது; தத்துவ ஞானத்தால் அருந்தவர்கள் சிறந்து திகழ்கின்றனர். தூய்மை முதலியன தோய்ந்து மனிதர் உயர்ந்து கொள்ள வேண்டும். சித்த சுத்தி தெய்வீக சத்தியாய்ச் சிறந்து திகழ்கிறது. இந்த அதிசய நிலேயைப் பெற்றவனே உலகம் துதி செய்து தொழுது வருகிறது. சிந்தை தெளியவே சீவன் சிவனுகிருன்.

8. தந்தைதாய் பேணல் தனயர்க் கினியஅணி
மைந்தர்க்குக் கல்வியே மாட்சியணி—செந்தமிழை
ஓர்ந்து பயிலல் உணர்வுக் கணிஉயிர்க்கோ
ஆர்ந்தவுயர் சீலம் அணி. (அ)

இ—ள்.

தாய் தந்தையரை உள்ளம் உவந்து போற்றி வருதல் பிள்ளைகளுக்கு அழகு; அந்த மைந்தர்க்குக் கல்வியே நல்ல அழகு; செவ்விய தமிழ் மொழியை ஓர்ந்து பயின்று தேர்ந்துவரின் உணர்வுக்கு அழகு; நிறைந்த ஒழுக்கம் உயிர்க்கு அழகு என்க.

பெற்றோரைப் பேணுத பிள்ளைகள் பிழை படிந்து இழிகின்றனர். கல்வியைக் கல்லாத மக்கள் புல்லராய்ப் புலையுறுகின்றனர். அரிய பல அறிவு நலன்கள் இனிய தமிழ் மொழியில் எவ்வழியும் பெருகி யுள்ளன. அந்த உண்மையை உணர்ந்து பயின்று உயர்ந்து கொள்ளாதவர் இழிந்தவராய்க் கழிந்து ஒழிந்து போகின்றனர்.

நீதி முறைகளில் யாதும் வழுவாமல் நெறியே ஒழுகிவருவது ஒழுக்கம் என வந்தது. இந்த ஒழுக்கம் உயிர்க்கு உயிராய் ஒளி மிகச் செய்கிறது. விழுமிய இந்த ஒளியை இழந்தால் அந்த உயிர் பழி படிந்து பாழாயிழிந்து கழிகிறது.

பழி படியாமல் வாழ்வதே விழுமிய வாழ்வாம். வாழ்வு என்பது என்ன? உயிர் உடலோடு கூடி ஒழுகி வருவது. அது விழுமிய நிலைகளைத் தழுவி வரின் இருமையும் பெருமையாய் இன்பமுறுகிறது.

உரிய கடமைகளைப் பிரியமுடன் செய்து, பருவம் தவருமல் கலைகளைப் பயின்று தெளிந்து, தாய்மொழியை வாய்மொழி அளவில் பேசுவதோடு நில்லாமல் அதில் பொதிந்துள்ள உணர்வொளிகளை ஓர்ந்து தேர்ந்து, சால்பு நிறைந்து சீலம் தோய்ந்து செம்மையாய் வாழ்ந்து வருபவரே சிறந்த மேலோராய் எவ்வழியும் உயர்ந்து திகழ்கின்றனர்.

4. கற்ருர்க் கொழுக்கமே காமரணி கல்லாமல்
உற்ருர்க் கணியுயர் நூற் கேள்வியே—பெற்ருர்க்குப்
பேரணிதம் மக்கள் பெருவாழ்வே மற்றவர்க்குச்
சீரணியன் ஞர்பணியே தேர். (சு)

இ—ள்.

நூல்களைக் கற்றவர்க்கு நல்ல ஒழுக்கமே அழகு; அவ்வாறு கல்லாதவர்க்கு உயர்ந்தார் வாய்க் கேள்வியே அழகு; தம்பிள்ளைகளைப் பெருமையா வாழச் செய்வதே பெற்றவர்க்கு அழகு; தம்மைப் பெற்ற தாய் தந்தையர்க்குப் பணிபுரிவதே மக்களுக்கு அழகு என்க. உரிய கடமைகள் உணர வந்தன.

ஒழுக்கம் என்பது நெறி முறையே நீதியாய் ஒழுகி வரும் நீர்மை. மனிதனை இது மகிமைப் படுத்தி வருகிறது. கல்வியறிவு எவ்வளவு சிறந்ததாயிருந்தாலும் ஒழுக்கம் இல்லையாஞல் அவன் இழிக்கப்படுகிருன். ஒழுக்கம் தோய்ந்த அளவே எவரும் விழுப்ப முடையராய் உயர்ந்து திகழ்கின்ருர்.

கேள்வி என்பது மேலோர் கூறுகிற அறிவுரைகளை ஆர்வத்தோடு கேட்பது. செவிவழியே எளிதே

கற்கும் தெளிவான கல்வியாய் ஒளி தருதலால் கல்லாதவரும் இதனால் நல்ல பலனை அடைகின்றனர்.

கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர்—தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.
(நாலடியார் 139)

பாதிரிப் பூவைச் சேர்ந்த மண்பானைத் தண்ணீரும் நல்ல மணம் பெறும்; அதுபோல் கல்லாதவரும் நல்லவரைச் சேர்ந்து ஒழுகின் அவர் கூறும் அறிவுரைகளைக் கேட்டு உயர்வுறுவர் என இது உணர்த்தியுளது. நல்லவர் வாய்மொழி நலம்பல தருகிறது.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். (குறள் 416)

கேள்வியால் எவ்வளவு மேன்மைகள் விளைந்து வரும் என்பதை இதனால் அறிந்து கொள்கிறோம். கல்லாதவரையும் கற்றவராக உயர்த்தியருளுதலால் கேள்வி அவர்க்கு நல்ல அணி என வந்தது.

தாய் தந்தையர்க்குப் பணிபுரிவதே சேயர்க்கு அணி என்றது அதனால் அவர் மாண்புறுதல் கருதி. தக்க நன்றியறிவுடன் ஈன்றோர்க்கு மக்கள் இதம் புரிந்து வரும் அளவே சான்றோர் என வான் தோய் புகழுடன் அவர் விளங்கி வருவர். தம்மை மக்கள் எனப் பெற்றவர் மனம் மகிழ்ந்து வரப் பணிபுரியாது ஒழியின் மாக்கள் என அவர் இழிய நேர்கின்றார். தாயரின் பணியே சேயரின் அணி.

ஊழி அளவும்நீ ஊழியங்கள் செய்தாலும்
தாழுமே தாய்முன் தணிந்து.

(அரும்பொருளமுதம்)

இளமையில் ஒரு நாழிகை நேரம் தாய் உன்னைப் பேணி யருளியமைக்கு ஊழி காலம் நீ ஊழியங்கள் செய்தாலும் அதற்கு ஈடாகா என்னும் இது ஈண்டு எண்ணி யுணர்ந்து மக்கள் இனிது தெரிய வுரியது.

---

5. சொல்லுக் கணியினிமை தூய்மையே செய்கையணி
மல்லுக் கணிமாறு வன்மையே—வில்லுக்கு
மாட்டும் குறிபிழையா மாண்பே அணிமதிக்குக்
காட்டும் தெளிவணியே காண். (ரு)

இ—ள்.

இனிமை சொல்லுக்கு அணி; தூய்மை செயலுக்கு அணி; வன்மை மல்லுக்கு அணி; குறிதவருமை வில்லுக்கு அணி; தெளிவு மதிக்கு அணி என்க.

வாயிலிருந்து வெளியே வருகிற சொல் நல்லதானல் அந்த மனிதன் நல்லவனுகிருன்; தீயதானல் தீயவனுகிருன். தான் நன்மை அடைய விரும்புகிற ஒருவன் தீமையான வார்த்தைகளை யாண்டும் பேசலாகாது. இனிமையான சொல் தனி மகிமைகளை அருளி வருதலால் அந்த மனிதன் எவ்வழியும் செவ்வியனுய்ச் சிறந்து உயர்ந்து திகழ்கின்ருன்.

நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று. (குறள் 641)

நல்ல சொல்லைப் பேசி வருகிற நாவையுடையவன் எல்லா மேன்மைகளையும் எளிதே அடைந்து

கொள்ளுகிருன்; நாவின் நலம் போல் பூவில் உயர்ந்த நலம் யாதும் இல்லை என இது குறித்துள்ளது.

நாவின் நுனியில் நயமிருக்கின் பூமாதும்
நாவினிய நல்லோரும் நண்ணுவார்—நாவினுனி
ஆங்கடினம் ஆகில் அத்திருவும் சேராள்முன்
ஆங்கே வருமரணம் ஆம். (நீதிசாரம் 17)

இனிய நாவால் வருகிற உயர்ந்த இன்ப நலன்களும், இன்னு நாவால் எய்துகிற கொடிய துன்பப் புலைகளும் இதில் நன்கு தெரிய வந்துள்ளன.

செயல் தூய்மை யாஞல் அது புண்ணியமாய்ப் பொலிந்து வருகிறது. அதனுல் எண்ணரிய நன்மைகளை மனிதன் எளிதே அடைந்து கொள்ளுகிருன்.

எதையும் கூர்ந்து ஓர்ந்து விரைந்து தெளிந்து கொள்வதே அறிவுக்கு அழகாம். குறி பிழையாமல் நேரே சரியாக எய்வதே வில்லாளிக்கு அழகாம். மாருத போர் ஆற்றலே மல்லாளிக்கு மாட்சியாம்.

இனிமை புனிதம் வன்மை குறிப்பு தெளிவு என்னும் இவை சொல் முதலியவைகளில் முறையே தோய்ந்து வரின் உயர் பயன்கள் வாய்ந்து வரும்.

---

6. நெஞ்சுக் கணிஎன்றும் நேர்மையே நேர்ந்தபொறி
அஞ்சுக் கணியடக்கம் ஆகுமே—விஞ்சியசீர்
வீரர்க் கணிதோலா வென்றியே வெல்லாத
நீரர்க் கணிசாவே நேர். (சு)

இ—ள்.

நேர்மை நெஞ்சுக்கு அழகு; அடக்கம் ஐம்பொறிகளுக்கு அழகு; வெற்றி பெறுவதே வீரர்க்கு அழகு; வெல்லாவிடின் வீவதே தீரர்க்கு அழகு என்க.

கள்ளம் கபடுகள் தோயாத உள்ளமே நல்ல தாய் நலம் பல தருகிறது. வஞ்சம் படியின் அந்த நெஞ்சம் நஞ்சம் படிந்ததாய் நாசமே யடையும்.

செம்மையான நீர்மை யுடையதே நேர்மை. இந்தச் சீர்மை செறிந்துள்ள நெஞ்சம் எவ்வழியும் சிறந்து வருதலால் இதற்கு அது அழகு என அமைந்தது. மனம் செம்மையானல் மகான் ஆகிருன்.

கண் காது முதலிய அறிகருவிகள் ஐந்தும் பொறிகள் என வந்தன. இவை வெறி கொண்டு திரியாமல் அடங்கி யிருந்தால் அந்த மனிதன் அதிசய மகிமைகளை நன்கு அடைந்து கொள்கிருன்.

மெய்வாய்கண் மூக்குச் செவிஎனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக்—கைவாய்க்
கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்
விலங்காது வீடு பெறும். (நாலடி 59)

பொறி ஐந்தும் அடக்கினவன் பேரின்ப வீடு பெறுவான் என இது குறித்துள்ளது. நெறி நின்று பொறிகள் ஐந்தும் வென்றவரே அதிசய வீரராய் உலகம் துதி செய்து தொழுது வர விளங்குகின்ருர்.

நேர்மையும் அடக்கமும் வீரமும் மானமும் மனிதருக்குப் பேரழகுகள் புரிகின்றன; பேரின்பங்கள் தருகின்றன. அவற்றை நன்கு பேணி உயர்க.

உள்ளச் செம்மை உயர்ந்தநல் இன்பங்கள்
வெள்ளம் என்ன விரைந்தருள் செய்யுமே;
கள்ளப் புன்மை கடிய துயர்களே
அள்ளி ஈயும் அறிந்து தெளிகவே.

இதனை உள்ளி யுணர்ந்து உய்தி பெறுக.

7. உற்ற முகத்துக் கொளிர்கண் அணிஉறவாப்
பெற்ற துணைக்கன்பு பேரணியாம்—கற்ற
கலைக்கணி சொல்வன்மை காரிகையார் தங்கள்
நிலைக்கணி நாணம் நினை. (எ)

இ—ள்.

கண், முகத்துக்கு அழகு; அன்பு, துணைவர்க்கு அழகு; சொல் வன்மை, கலைக்கு அழகு; நாணம், பெண்களுக்கு நல்ல அழகு என்க.

ஒளிர்கண் = கூர்மையான பார்வை யுடையது.

உடலுருவில் முதன்மையாய் நிற்பது முகம். அதில் எழில் உயர்ந்து விளங்குவது ஒளி மிகுந்த கண். அந்த விழி நலமா யிருப்பின் எல்லாம் இன்பமாம்; இல்லையானல் யாவும் இழிவாம்.

கண்ணில் யாக்கையும் திங்களில் கங்குலும் கண்போல்
அண்ணல் மந்திரி இல்அரசாட்சியும் அருளில்
திண்ணில் நெஞ்சமும் புலவரில் அவையும்ஒண் தீம்பால்
வண்ண வாய்இள மக்களில் வாழ்வும்ஒப் பாமால்.
(சீகாளத்திப்புராணம்)

கண் இல்லாத உடல், சந்திரன் இல்லாத இரவு, மந்திரி இல்லாத அரசாட்சி, அருள் இல்லாத நெஞ்சம், புலவர் இல்லாத சபை, புதல்வர் இல்லாத வாழ்வு புலையாம் என இது குறித்துளது. கண்ணை முதலில் வைத்தது ஈண்டு எண்ணி உணரவுரியது.

துணை என்றது உடன் பிறந்த துணைவரையும், உரிமையாயுற்ற மனைவியையும், உறவாய்த் தொடர்ந்த நண்பரையும் ஒருங்கே குறித்து நின்றது.

உள்ளன்பும் உழுவலன்பும் உழையன்பும் முறையே உரிமையாய் மருவி யுள்ளன. அந்த அன்பின் அளவே துணைவரின் அழகும். உள்ளம் கனிந்து வர உரிமை சுரந்து இனிமை நிறைந்து வரும்.

நிறைந்த கல்வியின் நிலைமை சிறந்த சொல் வன்மையால் வெளியே தெளிவாய்த் தெரிய வ்ருகிறது; வரவே அதற்கு இது அணி என வந்தது.

இணருழ்த்தும் நாறு மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார். (குறள் 650)

தாம் கற்றதைப் பிறர் உணர்ந்து மகிழச் சொல்ல இயலாதவர் மணம் இல்லாத மலர் போல் மதிப்பிழந்து படுவர் என இஃது உணர்த்தியுளது.

எத்துணைய ஆயினும் கல்வி யிடமறிந்து
உய்த்துணர் வில்லெனின் இல்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை இன்றெனின் என்னாகும்? அஃதுண்டேல்
பொன்மலர் நாற்றம் உடைத்து. (நீதிநெறி 5)

சொல் வன்மை இல்லையானால் கல்வி யறிவு புல்லிதாம்; அதனையுடைய கல்வியே மணம் உடைய பொன் மலர் போல் மாண்பு மிகுந்து யாண்டும் மதிப்புடன் விளங்கும் என இது விளக்கி யுளது.

நினை என்றது நாணத்தின் தகைமைகளை நாடியுணர. பெண்மைக்கு உண்மை உயிர் அறிய வந்தது.

பயிர்களை வேலி காத்தல் போல் உயிர்களை நாணுடைமை காத்து வருகிறது. **கண்ணுக்கு இமை; பெண்ணுக்கு நாணம்** என்பது முதுமொழி.

நாணமே பெண்மையின் நல்ல பேரணி;
நாணமே ஆண்மையை நன்கு காப்பது;
நாணமே மேன்மைகள் நல்கி நிற்பது;
நாணமே புகழறம் நன்மை யாவுமே.

நாணத்தின் மாட்சிகளையும் ஆட்சிகளையும் இதனால் நன்கு அறிந்து கொள்கின்றோம்.

---

8. இல்லுக் கணிமனைவி இன்மனைக்கு நன்புதல்வர்
அல்லுக் கணிமதியம் ஆகுமே—செல்லுக்கு
மாரி வழங்கலணி மாருத வண்மைக்கு
வாரி வழங்க லணி. (அ)

இ-ள்.

மனைக்கு மனைவி அணி; அந்த மனைவிக்கு நல்ல புதல்வர் அணி; இரவுக்குச் சந்திரன் அணி; மேகத்துக்கு எவ்வழியும் மழை பெய்தல் அணி; வள்ளலுக்கு அள்ளிக் கொடுத்தல் அணி என்க.

மனிதர் மன்னி வாழும் இடம் மனை என வந்தது. அந்த மனைக்குத் தனியுரிமையானவள் மனைவி என நேர்ந்தாள். இல்லாள் என்று மனைவிக்குப் பெயர். இல்லை ஆள்பவள் என்பதை அது விளக்கியுளது. கணவன் பெயரால் இதைச் சொல்ல நேரின் இல்லான் என வரும். வரவே வறியன் எனப் பொருள் பட்டு மாறுபாடாம். ஆவதை ஆய்ந்து அறிக.

இல்லாள் எனும்பெயரே இல்லுக்கு உயிர்என்னச்
சொல்லால் உணர்த்தும் துணிவுகாண்-இல்லானென்று
உன்பெயரால் சொல்லினே ஊனமுறும் ஓர்ந்தவளை
அன்புசெய்து பேணல் அறம். (தருமதீபிகை 52)

வீட்டுக்கு உரிய அழகை இது விளக்கியுளது. இந்தப் பாட்டில் படிந்துள்ள பண்புகளையும் அன்பு நிலைகளையும் நன்கு சிந்தித்துக் கொள்ளுக.

எந்த வீட்டில் எந்த நாட்டில் பெண்கள் இனியராய்ப் புனிதராய் மனம் மகிழ்ந்து வாழ்ந்து வருகின்றனரோ, அந்த வீடும் அந்த நாடும் அதிசய வளங்களுடையனவாய்த் துதிகொண்டு துலங்கி வரும்.

தண்மதி வானத்தை விளக்கி வருகிறது; நன்மக்கள் தம் குலத்தை விளக்கி வருகின்றனர். நன் புதல்வர் என்றது புன்புதல்வரைப் புறத்தே விலக்க வந்தது. பிறந்தவர்கள் எல்லாரும் பிள்ளைகள் அல்லர்; சிறந்த குண நலன்கள் வாய்ந்தவரே உயர்ந்த மக்களாய் எங்கும் ஒளிமிகுந்து உள்ளனர்.

செல்=மேகம். எங்கும் பரந்து சென்று மழை பொழிவது என்னும் காரணத்தைக் கருதிக் காண நேர்ந்தது. மாரிபோல் கைம்மாறு கருதாமல் வள்ளல்கள் வாரி வழங்குவது இயல்பு ஆதலால் ஈண்டு இனமாய் இணைந்து அவர் எண்ணி யுணர வந்தனர்.

உள்ளி உள்ளவெல் லாம்உவந் தீயும்அவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே.

(இராமா; ஆற்று 6)

பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்;
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டுஈண்டு உலகுபுரப் பதுவே.

(புறம் 107)

வாரி வழங்கும் வள்ளல்களும் மாரி வழங்கும் மேகங்களும் இவ்வாறு ஏகமாய்த் தெரிய வந்துள்ளனர். நீர்மை நிறையச் சீர்மை நிறைகிறது.

---

9. வேதியர்க்குச் சீலமணி வேந்தர்க்கு வீரமணி
மாதவர்க்குச் சாந்தமருள் வாய்மையணி—தூதர்
தமக்கணிசொல் வன்மை தறுகண்மை தூய்மை
அமர்க்கணிவில் வீரர் அமைவு. (௯)

இ—ள்.

ஒழுக்கம் வேதியர்க்கு அழகு; வீரம் வேந்தர்க்கு அழகு; சாந்தம் அருள் சத்தியம் மாதவர்க்கு அழகு; சொல்வன்மை தீரம் தூய்மை தூதர்க்கு அழகு; வில் வீரர் போருக்குச் சீரிய அழகு என்க.

சீலம்=நல்ல ஒழுக்கம்; தரும நீர்மை.

வேதத்தை ஓதி உணர்ந்தவர் வேதியர். உலக மக்கள் ஏதம் உறாமல் இனிது வாழ்ந்து வரப் போதனை புரிய உரியவர் ஆதலால் சீலமுடைமை அவர்க்குச் சிறப்பாகத் தெரிய வந்தது.

எல்லாரையும் அடக்கி ஆள உரியவர் ஆதலால் அரசர்க்கு வீரம் அதிசய அழகா அமைந்தது. மானமும் வீரமும் மன்னர் பேரணிகளாய் மருவி யுள்ளன. அவ்வுண்மைகளை உலக சரித்திரங்கள் உணர்த்தி நிற்கின்றன. **வீரம்** என்பது விழுமிய நிலையது.

எவருடைய உள்ளங்களில் உண்மையும் கருணையும் தோய்ந்து வருகின்றனவோ அவர் ஒளி மிகப் பெற்று உயர்ந்து வருகிறார்; சித்தசாந்தி அவருக்கு

இயல்பா யமைகிறது. அரிய மாதவராய் அதிசய மேன்மைகளை அவர் அடைந்து கொள்ளுகின்றார்.

வேற்று வேந்தரிடம் அஞ்சாமல் சென்று உறுதி யுண்மைகளை நேரே தீரமாய்க் கூறி எந்த வகையி லும் யாதும் சிந்தை தளராமல் ஆண்டகைமையுடன் மீண்டு வருபவனே தூய தூதுவன் ஆகின்றான்.

இலங்கை வேந்தனிடம் அங்கதன் தூது சென் றிருந்தான். பெரிய அரசபதவியைத் தருவதாக ஆசைகாட்டி இவ் வீரனை அவ்வரசன் வசப்படுத்த முயன்றான். அவனது ஊதிய வார்த்தையைக் கேட் டதும் இராம தூதன் ஆர்த்துச் சிரித்தான். அதிசய வீறோடு பார்த்து நேரே பதில் உரைத்தான்.

இராவணன் சொன்னது

அந்நரர் இன்று நாளை அழிவதற்கு ஐயம் இல்லை;
உன்அரசு உனக்குத் தந்தேன் ஆளுதி ஊழி காலம்
பொன்னரி சுமந்த பீடத்து இமையவர் போற்றி செய்ய
மன்னவன் ஆக யானே சூட்டுவன் மகுடம் என்றான்.

அங்கதன் இசைத்தது

அங்கதன் அதனைக் கேளா
அங்கையோடு அங்கை தாக்கித்
துங்கவன் தோளும் மார்பும்
இலங்கையும் துளங்க நக்கான்;
இங்குநின் றார்கட் கெல்லாம்
இறுதியே என்ப துன்னி
நுங்கள்பால் நின்றும் எம்பால்
போந்தனன் உம்பி என்றான்: (1)

வாய்வரத் தக்க சொல்லி
என்னையுன் வசம்செய் வாயேல்
ஆய்தரத் தக்க தன்றே
தூதுவந்து அரசது ஆள்கை;
நீதரக் கொள்வேன் யானே?
இதற்கினி நிகர்வே றெண்ணின்
நாய்தரக் கொள்ளும் சீயம்
நல்லர சென்று நக்கான். (2)
(இராமா: அங்கதன் தூது)

அங்கதனுடைய தறுகண்மை தூய்மை சொல் வன்மைகள் இங்கே துலங்கி யுள்ளன. உண்மை களை ஊன்றி நோக்கி உறுதியை உணர்ந்துகொள்க.

வில்வீரத்தை இங்கே விதந்து குறித்தது. அரிய ஒரு கலையாய் அது மருவியுள்ளமை கருதி. தனு வேதம் என்று வேதத்துள் ஒரு பிரிவாக இச்சிலை யின் கலை உயர் நிலையில் சிறந்துளது.

---

10 குடிகளைக் காத்தருளல் கோனணி கோன்சொற்
படிநடத்தல் அன்னோர் பணியாம்—மடியில்
இழியாமை மக்கட் கினிய அணி யார்க்கும்
பழியாமை யே அணியாம் பண்பு. (ய)

இ-ள்.

குடிசனங்களை இனிது பாதுகாத்தல் அரசனுக்கு அழகு; அம்மன்னவன் சொல்லியபடி நடத்தல் அன்னவர்க்கு அழகு; சோம்பாமல் முயலுதல் மக் களுக்கு அழகு; யாரையும் யாதும் பழியாத பண்பு எல்லார்க்கும் யாண்டும் நல்ல அழகாம் என்க.

தன் நாட்டில் உள்ள மாந்தர் சுகமாய் வாழ்ந்து வர ஓர்ந்து பேணி வருவதே வேந்தன் கடமையாம்; அதை ஆற்றிவரும் அளவு அவன் ஏற்றம் மிகப் பெறுகிறன். குடி மகிழச்சியே கோனின் உயர்ச்சி.

மன்னுயிர் அனைத்தும் தன்னுயிர் என்ன
மகிழ்வொடு தாங்கியா ரேனும்
இன்னலுற் றயர்ந்தோம் எனக்கலுழ்ந் திடில்தன்
இருவிழி நீரினை உகுப்பான்;
அன்னவெந் துயரை நீக்குமுன் தான்ஒன்று
அயின்றிடான் துயின்றிடான் எவரும்;
நன்னகர் எங்கும் உளன்எனப் பகர
நாடொறும் இயங்குவோன் கோனே.

கோனின் குண நீர்மைகளை இதில் கூர்ந்து ஓர்ந்து கொள்பவர் உள்ளம் வியந்து மகிழ்வர்.

இன்னவாறு பேணி வருகிற மன்னனை மக்கள் என்னவாறு போற்றி வர வேண்டும்! அவனுடைய ஆதரவான நீர்மை சீர்மைகளை அறிய நேர்ந்தவர் எவ்வழியும் பிரியமாய் அவனைத் தொழுது வாழ நேர்வர். மக்கள் வாழ்வு மகிபனல் உயர்கிறது.

நம்மனை மைந்தர் கிரகவாழ் வெல்லாம்
நரபதி யால்; அவன் இலனேல்,
அம்மனை தீயர் கைவசம் ஆவள்;
அருநிதி கொள்ளையாம்; நாளும்
வெம்மையோடு ஒருவர் ஒருவரை உண்பார்;
மேலவர் அசடரால் மெலிவார்;
அம்மாசு தெல்லாம் உணர்ந்து அரசு ஆணைக்கு
அமைதல் நற்குடிகளின் இயல்பே.

(நீதிநூல்)

நல்ல குடிகளின் தன்மை நன்மைகளை இது நன்கு காட்டியுள்ளது. வேந்தர்க்கு அணியும், மாந்தர்க்கு அழகும் ஈங்கு ஓர்ந்து உணர்ந்து கொள்ள வந்தன. மன்னுயிர் உயர மன்னன் உயர்கிருன்.

சோம்பல் மனிதரைத் தீம்பராக்கிக் கெடுத்து விடும்: சோம்பாத முயற்சி எல்லா உயர்ச்சிகளையும் இயல்பாக் கொடுத்தருளும் ஆதலால் மடியின்மை மனிதருக்கு இனிய அணி என அமைந்தது.

மடி = உள்ளம் மடிந்து ஊக்கம் ஒடிந்துள்ள ஊனநிலை. இந்த ஈனம் இல்லாதவர் மான மனிதராய் மாண்பு சுரந்து மகிமை யுறுகின்றனர்.

பிறரைப் பழித்துப் பேசுவது பெரிய பிழை. பழி கூறுபவர் எவ்வழியும இழிவே அடைகின்றனர். ஒரு மனிதன் உயர்ந்த பெருந்தகையாளன் என்பதற்குச் சிறந்த அடையாளம் யாது? எனின், யாரையும் பழியாத விழுமிய மேன்மையே.

கோனின் நீர்மை, குடியின் சீர்மை, மடியுருத மாண்பு, பழியுரையாத பண்பு இங்கே தெளிவுற வந்தன. விழுமிய பான்மை எழுமையும் மேன்மை.

---

11. கொல்லாமை யேஅறத்தின் கூரணி; கோதுபுறம்
சொல்லாமை யேசிறப்பின் சூழணி;—நில்லாமை
உள்ளலே உண்மை உணர்வுக் கணிபுகழ்க்கு
வள்ளலே வாய்த்த அணி. (கக)

இ–ள்.

எவ்வுயிரையும் கொல்லாமையே அறத்திற்கு

அழகு; புறங் கூருமையே உயர்ந்த சிறப்புக்கு அழகு; நிலையில்லாத நிலைமைகளை நினைதலே மெய் யுணர்வுக்கு அழகு; கொடை வள்ளலே புகழ் மொழிக்கு உரிமையான அழகு என்க.

உயிரினங்கள் யாவும் இன்பத்தையே விரும்பு கின்றன; துன்பத்தை அஞ்சுகின்றன. ஆகவே எவ் வுயிர்க்கும் யாண்டும் இதம் செய்வது புண்ணியம்; இடர் செய்வது பாவம். பாவங்களுள் கொலை மிக வும் கொடியது. புண்ணியங்களுள் தலை சிறந்தது கொல்லாத அருள் நீர்மையே. ஏகாரம் அதன் உன்னத உயர்வை நன்னயமா விளக்கி நின்றது.

புறம் சொல்லல் என்பது காணுத இடத்தில் பிறரை இகழ்ந்து பேசுதல். இது நீசமான ஒரு ஈனநிலை. இதனைத் தழுவினவர் ஈனராய் இழிவர்.

புறங்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும். (குறள் 183)

புறம் கூறி ஒருவன் புலையாய் வாழ்தலினும் விரைந்து செத்து ஒழிவது நல்லது என நாயனர் இவ்வாறு உள்ளம் கொதித்து இரங்கி உரைத்துள் ளார். இதனல் அந்தப் பேச்சு எவ்வளவு நீசம்! எத் துணைப் பாவம்! எத்தகைய துயரம்! என்பதை உய்த்து உணர்ந்துகொள்ளலாம்.

அவன் உயிர்வாழ்ந்திருந்தால் மேலும் மேலும் புலையே பேசி நரகதுயரங்களை நாளும் நீளமா ஈட்டி நாசமுறுவன் ஆதலால் **சாதல் ஆக்கம்** என்ருர். சீவர்கள் துயர் உருமல் உயர்வாய் உய்ய வேண்டும்

என்றே தேவர் எவ்வழியும் கருணையோடு போதித்து வருகிறார். அந்த வரவில் இந்தவாறு கூற நேர்ந்தார்.

ஒருவன் உயர்ந்த குடியில் பிறந்த பெருந்தகை என்பதற்குச் சிறந்த அடையாளம் யாரையும் இகழ்ந்து கூறுமையே யாம். ஆகவே **சிறப்பின் சூழ் அணி** என ஈண்டு இது கூற வந்தது.

நிலை யுள்ளது, நிலை இல்லது என்னும் நிலைமை களை நினைந்து தெளிந்து கொள்வதே உண்மையான உயர்ந்த விவேகமாம். இந்த மெய்யறிவு உய்தியை அருளுதலால் இதனை அடைந்தவர் அதிசய இன்பம் அடைகிறார்; அடையாதவர் கடையா யிழிகின்றார். நித்திய அநித்தியங்களை அறிபவர் நித்தராகிறார்.

சென்றது காலம்; சிதைந்தது இளமைநலம்;
நின்றது சாவுஎன்று நினைந்துருகி—மன்றில்
நடிக்கின்ற பால்வண்ணர் நாமம்எண்ணு மாந்தர்
படிக்கின்ற நூல்எல்லாம் பாழ்.

ஒரு மன்னன் இவ்வாறு மறுகி உரைத்துள்ளான். உரையுள் உணர்வுறுதி ஒளி வீசியுளது.

நீரில் குமிழி இளமை; நிறைசெல்வம்
நீரில் சுருட்டு நெடுந்திரைகள்;—நீரில்
எழுத்தாகும் யாக்கை; நமரங்காள்! என்னே
வழுத்தாதது எம்பிரான் மன்று? (நீதிநெறி)

நிலையாமை நிலைகளை நினைந்து நிலையாயுள்ளதைத் தழுவி உய்யும்படி உலகமக்களுக்கு இவ்வாறு பெரியோர்கள் உறுதிநலனை அருளியுள்ளனர்.

உண்மை உணர்வுக்கு அழகு உணர வந்தது.

எல்லாரும் உள்ளம் உவந்து புகழ்வது வள்ளல் கலையே. ஆகவே புகழ்க்கு அணி என்று அவர் ஈண்டு ஏற்றமாய்ப் போற்ற வந்தனர்.

---

12 ஆர்ந்த துறவிக் கணியவா வின்மையே
நேர்ந்துமனை வாழ்வார்க் கணிநிதியே -சார்ந்த
விருந்துக் கணிவிரைந்து மீளலே மேலாம்
மருந்துக் கணிபிணிமாய் வாம். (கஉ)

இ-ள்

ஆசை யாதும் இல்லாமையே துறவிக்கு அழகு; இல்லற வாழ்வுடையார்க்குச் செல்வமே அழகு; விரைந்து மீண்டு போதலே விருந்தினர்க்கு அழகு; நோயை விரைவில் நீக்குவதே மருந்துக்கு அழகு என்க. அவா = ஆவலான நசை.

உலக நசைகளை அறவே துறந்தவர் துறவி என நேர்ந்தார். அகப்பற்று புறப்பற்று எனப் பற்றுகள் இருவகையின. இவை யாவும் அற்றவரே முற்றத் துறந்தமுனிவர்எனத் தனிமகிமைதோய்ந்துள்ளனர்.

ஆசை சிறிது பற்றினும் அது நீசம் உற்றதாம்.

ஆசைஎனும் பெருங்காற்றூடு இலவம்பஞ்சு
எனவும்மனது அலையும் காலம்
மோசம்வரும்; இதனாலே கற்றதும்கேட்
டதும்தூர்ந்து முத்திக் கான
நேசமும்நல் வாசமும்போய்ப் புலன்நாயின்
கொடுமைபற்றி நிற்பர் அந்தோ!
தேசுபழுத்து அருள்பழுத்த பராபரமே!
நிராசையின்றேல் தெய்வம் உண்டோ?

(தாயுமானவர்)

ஆசையின் அவல நிலைகளைத் தாயுமானவர் இவ்வாறு கவலையோடு காட்டியுள்ளார். ஆசை அறின் மனிதன் ஈசனை அடைகிறான்; அது படியின் நீசனு யிழிந்து நிலை குலைந்து அழிகிறான்.

நிராசை இன்றேல் தெய்வம் உண்டோ? இந்தக் கேள்வியை யாவரும் நாளும் தம்முள் உசாவி நன்கு சிந்தித்து வர வேண்டும். பிறவித் துயரங்களுக்கெல் லாம் மூலகாரணம் ஆசையே என்பதை அறிய நேரின் அவர் அரிய பெரியராய் உய்ய நேர்கின்றார். உலக வாழ்வுகள் யாவும் பொருளால் நடந்து வருத லால் நிதி மனைவாழ்வார்க்கு அணி என வந்தது. உண்மையான உயிர் வாழ்வுக்கு அணி எது? என்பதை ஈண்டு ஊன்றி உணர்ந்து கொள்ள வேண்டும். வந்த விருந்தினரை ஆதரித்து உணவூட்டி உபசரித்தல் இல்வாழ்வார் கடமை. விருந்தினர் கடமை என்ன? விரைந்து வெளியேறிப் போவதே.

ஒரு பொழுதுதான் விருந்து; மறு பொழுது இருந்து அருந்த நேரின் அது விருந்து ஆகாது.

The first day, a guest; the second, a burden; the third, a pest. (Laboulaye)

முதல் நாள் விருந்து; மறுநாள் சுமையே; மூன் றாம் நாள் இருந்தால் அது ஒரு கொடிய தொத்து நோயே என இது வித்தகமாய்க் குறித்துள்ளது.

விருந்து முதல்நாள்; மறுநாள் சுமையே;
பெருந்துயரம் ஆகும் பிறகு—விருந்திதனை
ஓர்ந்துணர்ந்து நீங்கின் உயர்வாம்; உணர்ந்திலனேல்
ஆர்ந்த பழியாம் அது.

பிணியை விரைந்து நீக்குவதே சிறந்த மருந்துக்கு அழகு. ஆனவரையும் எவரையும் சாராமால் தன்மானமாய் முயன்று தனி ஆண்மையுடன் இனிது வாழ்வதே உயர்ந்த மனித வாழ்வாம்.

---

13. தானைக் கணியமைந்த தந்திரிஅத் தந்திரிக்கு
மானத் தறுகண்மை மாணணி—யானைக்கு
வேந்தமர்ந்து மீது விளங்கலணி அவ்வேந்துக்
கேந்துமுடி இன்னணியா மே. (கங)

இ-ள்.

சேனைத் தலைவன் சேனைக்கு அழகு; அந்தச் சேனாதிபதிக்குத் திண்ணிய வீரம் அழகு; மன்னனைத்தாங்கி வருவது மதயானைக்கு அழகு; அந்த வேந்தனுக்கு வியனான மணிமுடி அழகு என்க.

தந்திரம்=படை. தந்திரி=படைத்தலைவன்.

படைகள் பலவாய்த் திரண்டு எவ்வளவு வலிகளையுடையன வாயினும் தக்க தலைவன் இல்லையானால் அவை நிலைகுலைந்து சிதைந்து போம்.

தளபதி இல்லாத தளம்
கரையில்லாத குளம் என்பது பழமொழி.

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல். (குறள், 770)

சேனைத் தலைவர் இல்லையானால் சேனைகள் சீரழிந்துபோம் என நாயனார் இவ்வாறு கூறியுள்ளார். தானைக்கு உயிர் நிலை தெரிய வந்தது.

துரியோதனனுடைய படைகளுக்குத் தலைமைத் தளபதியாய் நின்று அடலாண்மையுடன் வீடுமர் அமராற்றி வந்தார். பத்தாம் நாள் போரில் அவர் மாண்டுபட்டார். அப்பொழுது அந்தப் படைகளின் நிலை பரிதாபமாயது.

மதியிலா விசும்பும், செவ்வி மணமிலா மலரும், தெண்ணீர்
நதியிலா நாடும் தக்க நரம்பிலா நாத யாழும்
நிதியிலா வாழ்வும் மிக்க நினைவிலா நெஞ்சும் வேத
விதியிலா மகமும் போன்ற வீடுமன் இலாத சேனை (பாரதம்)

வீரத்தளபதியான வீடுமனை இழந்தபோது அச் சேனைகள் அடைந்த நிலையை இக் கவி சுவையாகக் காட்டியுள்ளது. இதில் குறித்துள்ள ஏழு உவமைகளின் குறிப்புகளையும் கூர்ந்து ஓர்ந்து வீரத் தலைமையைத் தேர்ந்து கொள்ள வேண்டும்.

விலங்கினங்களுள் யானை மிகவும் பெரியது. அதன் மேல் மனிதருள் தலை சிறந்துள்ள அரசன் அலங்காரமாய் ஏறிவரின் அது ஒரு சீரிய காட்சியாய்ச் சிறந்து விளங்கி வரும்.

மணி மகுடம் மன்னனுக்கு மாட்சியான அணி. குடிமகிழ்ந்து வரக் கோல் ஓச்சி வருபவனே முடி மன்னன் என்னும் பெயருக்கு உரியவன் ஆகிறான்.

---

14. நாட்டுக்கு நல்லவரே நல்லஅணி; நாடிவரு
தேட்டுக்குச் சேயரே செய்யஅணி;-பாட்டுக்
கிசையும் கருத்தும் இனியஅணி; யார்க்கும்
வசையுறு வாழ்வே அணி. (கச)

இ-ள்.

நல்லோரே நாட்டுக்கு நல்ல அழகு; சேயரே தேட்டுக்குச் சிறந்த அழகு; இசையும் கருத்தும்

பாட்டுக்கு இனிய அழகு; வசையுறாத வாழ்வே யாவர்க்கும் அரிய பெரிய அழகு என்க.

நல்லார் என்றது நல்ல குணநலன்களையுடைய மேலோரை. அறிவு ஒழுக்கம் அருள் பொறை வாய்மை முதலிய நல்ல நீர்மைகள் நிறைந்த பெரியோர்களைப் பெற்றுள்ள நாடே அரிய பெரிய மகிமைகளை அடைந்து எவ்வழியும் சிறந்து வருகிறது.

நாடாகு ஒன்றோ காடுஆகு ஒன்றோ
அவலாகு ஒன்றோ மிசையாகு ஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே! (புறம், 187)

ஓ நிலனே! நீ நாடாயிருந்தாலும், காடாயிருந்தாலும், பள்ளமா யிருந்தாலும், மேடாயிருந்தாலும் எங்கே நல்ல ஆண்மக்கள் உள்ளனரோ அங்கே நீ நல்லவளாயிருக்கின்றாய்! எந்த இடத்தில் நன்மக்கள் இல்லையோ அந்த இடத்தே நீ புன்மையாயுள்ளாய் என்று ஔவையார் இவ்வாறு பூமிதேவியை நோக்கி உரிமையோடு நேம நிலை தெரியப் பேசி யிருக்கிறார்.

அவல் = பள்ளம். மிசை = மேடு.

தம்பால் வாழும் மக்களின் நல்ல நீர்மைகளைப் பொறுத்தே ஊரும் நாடும் உயர் மதிப்படையும் என்பதை இதனால் உணர்ந்து கொள்கிறோம். இராம பிரான் போன கானகம் வானகமாய் விளங்கியது.

நல்லவர் சிலர் இருந்தாலும் அந்த நாடு எல்லா வகையிலும் உயர்ந்து எங்கும் நலம் பல தருகிறது.

நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழிஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்

நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை. (மூதுரை, 10)

நல்லவர்கள் நெல்லுப் பயிர்களைப்போல் நலமாய் உள்ளனர். பொல்லாதவர்கள் புல்லிய களைகளைப் போல் புலையா யிருக்கின்றனர். வையமும் வானமும் நல்லவர்களையே உரிமையா உவந்து உதவி புரிந்து வருகின்றன. அந்த உண்மையை இதில் நுண்மையா ஓர்ந்து தேர்ந்து கொள்கிறோம்.

ஒருவன் முயன்று ஈட்டிய பொருளுக்கு அவனுடைய மக்களே தக்க பாதுகாப்பாளராகின்றனர். ஆகவே தேட்டுக்குச் சேயர் அணி என வந்தனர். தேட்டு=தேடித் தொகுத்த செல்வம்.

கொள்ளி இல்லாத சொத்து, பிள்ளை இல்லாத சம்பாத்தியம் என எள்ளி இகழப்படுதலால் சந்திக்கும் சம்பத்துக்கும் உள்ள உறவுரிமைகளை உணரலாகும்.

உயர்ந்த கருத்துக்கள் உள்ளே நிறைந்திருப்பதே சிறந்த கவியாம். இனிய இசையோடு பாடுவது பாட்டுக்குப் புறத்தே திகழும் அழகாம்; அரிய பொருள்கள் அகத்தில் அமைந்துள்ளது அகத்தின் அழகாம்.

உரிய அழகுகளை ஓர்ந்து உணர்ந்து பெரிய மனிதனைத் தேர்ந்து கொள்க. இனிய இயல்புகள் தோய்ந்து வரும்அளவே அரிய மகிமைகள் வாய்ந்து வருகின்றன.

பழிபடியாமல் வாழ்ந்து வருவதே புகழுடைய வாழ்வாம். இந்த வாழ்வை எவரும் வியந்து நோக்கி

உவந்து புகழ்ந்து வருவர் ஆதலால் வஞ்சயின்மை இதற்கு உயர்ந்த சிறந்த அணி என வந்தது.

---

15. அற்றவர்க்கு ஞானமணி ஆழிசூழ் ஞாலநிலை
உற்றவர்க்கு மானம் உயரணி—முற்ற
உடையார்க் கணிபணிவே ஒன்றுமிலார்க்கெண்மை
படையாமை யேஅணியாம் பண்பு. (கரு)

இ-ள்.

உலகப் பற்று அற்ற துறவிகளுக்கு ஞானம் அழகு; உலக வாழ்வில் உற்ற மக்களுக்கு மானமே உயர்ந்த அழகு; செல்வம் நிறையவுடையவர்க்குப் பணிவுடைமையே சிறந்த அழகு; இல்லாதவர்க்கு எளிமை யுருமையே நல்ல அழகு என்க.

அவரவர்களுடைய நிலைமைக்கு உரிய தகைமைகள் வகைமையாய்த் தெரிய வந்தன. ஞானம் என்பது எது? அறியவுரியதை உரிமையா அறிவது.

உண்மையான பரம்பொருளுக்கும் உயிருக்கும் உள்ள உறவுரிமைகளை உணர்ந்து தெளிந்து உய்தி காண்பவர்கள் மெய்ஞ்ஞானிகளாய் விளங்குகின்றனர். இந்த ஞான ஒளியை நலமாப் பெற்றவரே யாவும் துறந்தவருள் அதிசய நிலையில் துதி கொண்டு நிற்கின்றார். ஞானம் தோய்ந்த துறவு வானம் தோய்ந்த ஒளியாய் வயங்கி வருதலால் இதற்கு அது அழகு என அமைந்தது.

ஈன நிலையில் இழியாமல் எவ்வழியும் செவ்வியராய்ச் சிறந்து நிற்கும் சீர்மை மானம் என வந்தது. இதைப் பேணி வரும் அளவே மனிதர் பெருமை பெற்று யாண்டும் உயர்ந்து வருகின்றனர்.

இம்மையும் நன்றும் இயல்நெறியும் கைவிடாது
உம்மையும் நல்ல பயத்தலால்—செம்மையின்
நானம் கமழும் கதுப்பினுய்! நன்றேகாண்
மானம் உடையார் மதிப்பு. (நாலடி, 294)

தன்னையுடையார்க்கு இம்மையும் மறுமையும் மானம் மகிமை தரும் என இது உணர்த்தியுளது. இந்த அரிய நீர்மையை உரிமையுடன் பேணி வருபவர் பெரிய குல வீரராய்க் காண வருகின்ருர்.

செல்வம் செருக்கை விளைக்கும் இயல்பினது. அதனை மிகுதியாக உடையவர் தகுதியாய் அடங்கி யிருப்பது அரிது. செல்வர் பணிவுடையராய்ப் பண்பு படிந்திருப்பின் எல்லாரும் அன்பு மீதூர்ந்து அவரை மதித்துப் போற்றுவர். பணிவு என்னும் பண்பு அவர்க்கு ஓர் அரிய பெரிய இன்ப அணி.

எல்லார்க்கும் நன்ரும் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. (குறள், 125)

பணிவுடைமை எவர்க்கும் நல்லதே; ஆயினும் செல்வரிடம் அது அமையநேரின் பெரிய ஒரு தெய்வ சம்பத்தை அவர் உரிமையாய்ப் பெற்றவராவார் என்னும் இது ஈண்டு உய்த்து உணர வுரியது.

எண்மை=எளிய தன்மை.

பொருள் இல்லாமையால் அல்லல் அடைய நேர்ந்தாலும் உள்ளம் தளராமல் எவ்வழியும் செவ்வையாய் ஊக்கி நிற்க நேரின் அந்த நிலைமை தலைமையான மதிப்பை யாண்டும் நலமாய் அருளும்.

திருத்தன்னை நீப்பினும் தெய்வம் செறினும்
உருத்த மனத்தோடு உயர்வுள்ளின் அல்லால்
அருத்தம் செறிக்கும் அறிவிலார் பின்சென்று
எருத்திறைஞ்சி நில்லாதாம் மேல். (நாலடி, 304)

சிறந்த மேலோருடைய சீர்மையை இது வரைந்து காட்டியுள்ளது. வறுமையுறினும் சிறுமை அடையநேரார்; யாண்டும் மானமும் மதிப்பும் பேணியே வாழ்வார். பான்மை படிந்துவர மேன்மை விளையும்.

ஞானமும், மானமும், பணிவுடைமையும், பண்பும் மக்களுக்கு அணிகலன்களாய் அழகு செய்து வருகின்றன. அந்தப் பான்மைகள் தோய்ந்து மேன்மைகளை யடைந்து எவ்வழியும் செவ்வியராய் வாழ்க.

---

16. கேட்கும் செவிக்கணிகோள் கேளாமை;
[கேழ்கிளரும்
தோட்குச் சிறந்தஅணி தோலாமை;—தாட்கணி
தாவென் றொருவனிடம் சாராமை; தன்வாய்க்கு
நாவென்றி யேயணியாம் நன்கு. (கசு)

இ-ள்.

ஒருவனுடைய செவிகளுக்கு அழகு கோள் உரைகளைக் கேளாமை; தோள்களுக்கு அழகு தோல்வி நேராமை; தாள்களுக்கு அழகு தா என்று எவரிடமும் சாராமை; வாய்க்கு அழகு யாண்டும் வழுவாமல் என்றும் வெல்ல வுரிய நல்ல சொல்லே என்க.

கோள் என்பது பிறரைக் குறித்துப் பிழையாகப் பழித்துச் சொல்வது. கொளுவிக் கொள்ளும்படி

கூறுவது கோள் என வந்தது. பழியான கோளைக் கேட்பதால் உள்ளம் கெடும்; அதனால் இழிவே நேரும். பாழான அந்தக் கோள் வாயனை யாதும் அணுக ஒட்டாமல் அகற்றி விடுவதே நல்லது.

வாள் செய்யும் கொலையைவிடக் கோள் செய்யும் புலை கொடியது. கண் எதிரே நீட்டுகிற வாளுக்குத் தப்பி விடலாம்; காணுமல் மூட்டுகிற கோளுக்குத் தப்ப முடியாது. கோளன் கொடிய கொலை பாதகன்; நெடிய நீசப் பாவி ஆகிருன்.

தேளும் கொடும்பாம்பும் தீண்டிமிதித் தாலன்றி
வாளாமெய் தீண்டி வருத்தாவே—கோளார்ந்த
புல்லியரோ வீணே புனிதர்க்கும் பொய்ப்பழிமேல்
சொல்லி விளைப்பர் துயர். (தருமதீபிகை, 142)

தேளினும் பாம்பினும் கோளர் தீயர் என இது குறித்துளது. தேளைத் தொட்டால் கொட்டும்; பாம்பை மிதித்தால் கடிக்கும். யாதொரு இடரும் செய்யாத நல்லவருக்கும் பொல்லாத புலைகளைக் கூறிக் கோளர் கொடிய கேடுகளை விளைத்து விடுவர் ஆதலால் இந்த நீசப் பாம்புகள் நாட்டுக்குத் தீய நாசங்களேயாம். தீய நெஞ்சரைத் தீயினும் அஞ்சுக.

கொடியவிடப் பாம்பினுமே கோளன் கொடியன்;
கொடியஅது தீண்டினரைக் கொல்லும்—கொடியஇவன்
வாயொருவன் காதோரம் வைக்குமுன்னே ஐயகோ!
மாயுமே மற்றையவன். (தருமதீபிகை, 143)

இதில் குறித்துள்ள குறிப்புகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்பவர் கோளரின் கொடிய நீச நிலைகளை

உணர்ந்து கொள்வர். பொல்லாத வாளினும் புலே யான கோள் கொடியது; ஆகவே கோளர் எவ்வளவு கொடிய கொலே பாதகர் என்பது தெளிவாம்.

யாண்டும் தோல்வியுருமல் எவ்வழியும் வெற்றி பெற்று வருவதே ஒருவன் உற்ற தோள்வன்மைக்கு மேன்மை. இராமனும் வீமனும் விசயனும் இந்த வழியில் சிறந்துள்ளனர். அந்த உண்மைகளே நூல்கள் துலக்கியுள்ளன.

இரந்து வாழப் பிறரிடம் விழைந்து செல்வது பிழையான பெரிய இழிவு; அவ்வாறு போகாமல் ஆனவரையும் முயன்று வாழ்பவனே மானமும் மதிப்பும் உடையனுய் எங்கும் உயர்ந்து வருகிறுன்.

தாளாண்மையே தாளுக்கு அழகு. அதைவிட்டு விலகி வீணே இரக்க நேரின் ஈனமே விளேயும். ஈ என இரந்தான் ஈ என இழிந்தான்.

சினக்கதிர்வேல் கண்மடவாய்! செல்வர்பால் சென்றுஈ
எனக்கென்னும் இம்மாற்றம் கண்டாய்—தனக்குரிய
தானம் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானம் துடைப்பதோர் வாள். (நளவெண்பா)

தாஎன்று நீஒன்றைத் தான்கேட்டாய்! அப்பொழுதே
வாஎன்ற சொல்லும்போம்; மானம்போம்—போஎன்று
கூறும் கொடுமொழியும் கூடுமே; யாதுறினும்
ஏருதே யாண்டும் இரவு. (தருமதீபிகை)

இவை ஈண்டு எண்ணி யுணர வுரியன. இரந்து வாழ நேர்வதினும் இறந்துபோவது நல்லது. மானம் அழியாத வாழ்வே புனித மான மனித வாழ்வாம்.

சொல்லும் சொல்லால் மனிதனது உள்ளநிலை உணர வருகிறது. தன் சொல் யாண்டும் மேன்மையுடையதாய் விளங்கிவர வழங்கி வருபவனே மேலோனாய்த் துலங்கி வருகிருன்.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து. (குறள், 645)

மனிதன் எவ்வாறு பேசிவர வேண்டும் என்பதைத் தேவர் இவ்வாறு செவ்வையாய்ப் பேசியிருக்கிருர். வாயிலிருந்து வெளிவருகிற மொழி எவ்வழியும் இனிதாய் ஒளி மிகுந்து வரவேண்டும்.

கோள் மொழி கேளாதே; தோள்வலி தாழாதே; இரந்து வீழாதே; இழிவுற மொழியாதே.

---

17. மூக்குக் கணிபொடியை மோவாமை; மூதுரைகொள்
வாக்குக் கணிபடிறு வாயாமை;—நோக்கிற்குக்
கூர்ந்து குறிப்பறிந்து கொள்ளலணி; உள்ளத்துக்கு
ஆர்ந்த அமைதி அணி. (கஎ)

இ-ள்.

பொடியை முகராமை மூக்குக்கு அணி; படிறு படியாமை வாக்குக்கு அணி; குறிப்பறிந்து கொள்ளுதல் நோக்குக்கு அணி; உயர்ந்த அமைதி உள்ளத்துக்கு நல்ல அணி என்க.

மூக்கு வாக்கு நோக்கு உள்ளம் ஈண்டு உணர வந்தன. நான்கும் பாங்கு படிந்து வர ஒழுகி வருக.

மனிதனுடைய உறுப்புக்கள் சிறப்பாக அமைந்துள்ளன. உடல் வாழ்க்கைக்கு இதத்தையும்,

உயிர்க்குச் சுகத்தையும், நாடி நயந்து கொள்ளவே அவயவங்கள் கூடி யிருக்கின்றன. அங்கங்களைப் பழுதாப் பங்கப்படுத்தாமல் பாதுகாத்து வருபவரே நயமாய்ப் பயனடைந்து வருகின்றனர். உரிய கருவிகள் உயிர் வாழ்வின் அரிய துணைகளாய் அமைந்துள்ளன. அவற்றை இனிது பேணுக.

தூய வாழ்வு வாழ நேர்ந்தவர் தீய பழக்கங்களைப் பழகார். புகையிலை, பொடி, சுருட்டு, முதலியன மருளான மயக்கப் புலைகள். தம்மை ஒருமுறை தொட்டவரை அவை ஒட்டிப் பற்றிக் கொள்ளும்.

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

என்பது பழமொழி. இளமையில் பழகியது சாகும் வரையும் விடாமல் பிடித்துக் கொள்கிறது. பொடியை ஒருமுறை முகர்ந்தவன் பின்பு என்றும் பொடியனாய் நின்று விடுகிறான். எல்லாவற்றையும் துறந்த துறவிகளும்கூட மூக்குப் பொடியைத் துறக்கமுடியாமல் மடியில் சுமந்து மருமமாய் மருவி மகிழ்கின்றனர். விட்டவரையும் விடாமல் வீழ்த்தும்.

பொன்னைவிட்டேன், பொருளைவிட்டேன், பூமிமுதல்
யாவையுமே போக விட்டேன்;
மின்னைவிட்ட மனைவியையும் மேலான
மக்களையும் வெறுத்து விட்டேன்;
தன்னைவிட்டேன் என்றிருக்கும் துறவியரும்
பொடியைமடி தழுவித் தாங்கி
உன்னைவிட்டால் உயிர்விடுவேன் என்றிருப்பார்
பொடியே! உன் பொடிதான் என்னே?

(இந்தியத்தாய் நிலை, 296)

பொடியை விடமுடியாமல் துறவியரும் துயருறு வதை இதனுல் அறிந்து கொள்கிறேம். கெட்ட தொடர்பு கேடாய் ஒட்டிக் கெடுத்து விடுகிறது.

மூக்கிலே பொடிஏற மூளையிலே மிடிஏறும்;
வாக்கிலே பொய்ஏற வாழ்க்கையிலே புலைஏறும்;
நோக்கிலே பிழைகளைநேர் நோக்காமல் மனம்போன
போக்கிலே போவதெல்லாம் பொல்லாத புரையாமே.

படிறு=வஞ்சம்; பொய். படிறு படியாமல் வாக்கைப் பாதுகாத்து வருபவர் ஆக்கம் பல அடைந்து கொள்வர். வாய்மையே தூய்மையாம்.

புறத்தே காணுகிற காட்சியாலும் வாய்மொழி களாலும் ஒருவனுடைய உண்மை நிலைகளை ஓர்ந்து தேர்ந்து கொள்வது குறிப்பு அறிதலாம். இந்த அறிவு மெய்யானது; மேலான சிறப்புமிகவுடையது.

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல். (குறள், 702)

புறக்குறிப்பால் அகத்தின் இயல்புகளைத் தெளி வாக உணர்பவனைத் தெய்வமாகப் பேணிக்கொள்ள வேண்டும் எனத் தேவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமைதி என்பது ஆருயிர்க்குப் பேரமிர்தம். அரிய யோகிகளும் பெரிய ஞானிகளும் பெறவுரிய பேரின்ப நிலை சித்த சாந்தியே. புலையான பொறி வெறிகள் நீங்கித் தலையான மெய்யறிவு சார்ந்தவ ரிடமே நிலையான சாந்தி நிலை நிலவ நேர்கிறது.

யான்எனது என்பதின்றி எவ்வகைப் பொருளும் விட்டான்
தான்எனச் சரிக்கின்றுன்யார்? அவனையே அடையும்சாந்தி

ஈனமது அடையார் இத்தை அடைந்தவர்; இறக்கும் அப்போதும்
ஏனும் ஈது அடைவார் என்னை எய்துவார் பிறவி எய்தார்.
(பரமார்த்த தரிசனம்)

சும்மா இருக்கச் சுகம்சுகம் என்று சுருதிஎல்லாம்
அம்மா நிரந்தரம் சொல்லவும் கேட்டும் அறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையும் தப்பிஎன் பேதைமையால்
வெம்மாயக் காட்டில் அலைந்தேன் இதுஎன் விதிவசமே.
[தாயுமானவர்]

இன்றுவருமோ நாளைக் கேவருமோ அல்லதுமற்று
என்றுவருமோ அறியேன் என்கோவே! - துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம். (இராமலிங்கர்)

சித்த சாந்தி எத்தகைய மகிமையுடையது! யார் அதனை அடைய வுரியவர்? அடைந்தவர் எப்படி இருப்பர்? என்பதை ஈண்டு அறிந்து கொள்கிறோம்.

---

18. பல்லுக் கணிவெண்மை; பார்வைக் கணிகூர்மை;
சொல்லுக் கணிதூய்மை தோய்ந்துவரல்;- இல்லுக்கு
நல்ல மனைவியணி; நன்மக்கள் அம்மனைக்குச்
செல்ல அணிகள் தெளி. (கஅ)

இ-ள்.

வெண்மை பல்லுக்கு அழகு; கூர்மை பார்வைக்கு அழகு; தூய்மை சொல்லுக்கு அழகு; நல்ல மனைவி இல்லுக்கு அழகு; நன்மக்கள் அந்த மனைவிக்கு அழகு என்க. உரிய அழகுகள் அரிய ஒளிகள்.

ஐந்து அழகுகள் இங்கே சிந்தனைக்கு வந்துள்ளன. எழில் உடையன எங்கும் ஒளிபெறுகின்றன. உடல் உறுப்புக்களுள் பல் ஓர் இனமாயிணைந்து இயைந்

துள்ளது. முப்பத்திரண்டு எண்களையுடையது. பலை சேர்ந்திருத்தலால் பல் என வந்தது. பலவகையான பண்டங்களை மென்று தின்று உயிர் வாழ்வுக்கு உதவி புரிந்து வருகிறது. ஒலிகளைத் தெளிவாக்கி மொழிகளை எவ்வழியும் நலமா வெளியிடுகிறது.

பல் இழந்தான் சொல் இழந்தான்.

என்பது பழமொழியாய் வந்துள்ளது. பல்லுக்கும் சொல்லுக்கும் உள்ள உறவுரிமைகளையும் ஒலி நிலைகளையும் இதனால் உணர்ந்து கொள்கிறோம்.

இயல்பான நல்ல வெள்ளை நிறம் ஆதலால் பல்லுக்கு முத்தை உவமை கூறுவது காவியக் கவி களின் மரபாய் அமைந்து யாண்டும் மருவியுளது.

முத்தம் முறுவல். (குறள், 1113)

முத்தம் கொல்லோ? முழுநிலவின்
முறியின் திறனோ? முறைஅமுதச்
சொத்தின் துள்ளி வெள்ளியினம்
தொடுத்த கொல்லோ? துறையறத்தின்
வித்து முளைத்த அங்குரங்கொல்?
வேறே சிலகொல்? மெய்முகிழ்த்த
தொத்தின் தொகைகொல்? யாதென்று
பல்லுக்கு உவமை சொல்லுகேன்?
(இராமா: 5 : 5 : 53)

இராமபிரானுடைய பல்லைக் குறித்துக் கவிஞர் பிரான் இவ்வாறு பாடியுள்ளார். உவமான நிலை களையும் பொருள் நயங்களையும் உரை அழகுகளை யும் ஊன்றி ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

மாதுஇப் பரிசு தந்தைதாய் மகிழ வளர்வுற்று அரசிருந்த
நீதிக் கிழவன் இறப்ப அவன் நெறிசேர் இளஞ்சேய் அவன்தவிசின்
மீதுற் றதுபோல் முன்முளைத்த வெண்பல்விழ வேறு எயிறுதிப்பப்
பேதைப் பருவம் கடந்துமேல் பெதும்பைப் பருவம் நண்ணினாள்.

தன்னை நிந்தைசெய் வெண்ணகை மேல்பழி சார
மன்னி அங்கது நிகரற வாழ்மனை வாய்தல்
முன்னி றந்திடு வேன்என ஞான்றுகொள் முறைமை
என்ன வெண்மணி மூக்கணி ஒருத்திநின் றிட்டாள்.
(பிரபுலிங்கலீலை)

மாயை என்னும் அழகிய மங்கைக்குப் பல் விழுந்து முளைத்தது; முதிய அரசன் இறந்துபோகப் புதிய இளவரசன் அந்தத் தானத்தில் எழுந்ததை ஒத்திருந்தது: அவளுக்கு மூக்கிலே புல்லாக்கு என்னும் அணி அணிந்தனர்; அந்த முத்து அணி தன்னை நிறத்தால் பழித்து நிந்தைசெய்த பல்லுக்கு எதிரே தூக்கிட்டு மாண்டு பழி தீர்க்க நேர்ந்ததுபோல் நின்றது. பல்லைக் குறித்த இந்த வருணனைகள் அறிவுக்கு இனிய சுவை விருந்துகளாய் விளைந்துள்ளன.

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கு இறை. (திருப்புகழ், 1)

முத்தை ஒத்த பல்வரிசையுடைய தெய்வயானைக்கு நாயகன் என முருகப்பெருமானை இவ்வாறு துதித்துத் திருப்புகழை அருணகிரிநாதர் தொடங்கியிருக்கிறார். முறுவல் நகை மூரல் எயிறு தந்தம் எனப் பல்லுக்குக் காரணப் பெயர்கள் வந்துள்ளன.

புத்த பகவானது பல்லைத் தங்கக் கோயிலில் சேமித்து வைத்து இலங்கையில் பூசித்து வருகின்றனர். பூசனை அதன் மகிமைகளை விளக்கி யுளது.

இத்தகைய பல்லை இனிது பேணி வருவது நல்லது. மாசு படியாமல் தேசு பெறச் செய்க.

எதையும் கூர்மையாகப் பார்; நீர்மையாகப் பேசு; நல்ல குணவதியை மணந்துகொள்; சிறந்த மக்களைப் பெறுக; புனிதமாய் உயர்ந்து வாழுக.

---

19. இவ்வுலக வாழ்வுக் கினிய அணி செல்வமே;
அவ்வுலக வாழ்வுக் கருளணி;—எவ்வுலகும்
வேண்டி வருமணி வேண்டா விரதமே;
ஈண்டிவை எண்ணல் அணி. (கசு)

இ-ள்.

இந்த உலக வாழ்வுக்கு இனிய அழகு செல்வமே; அந்த உலக வாழ்வுக்கு உரிய அழகு அருளே; எந்த உலகமும் வேண்டிவரும் அழகு யாதும் வேண்டாமையே; இந்த உண்மைகளை உணர்ந்து கொள்வதே உணர்வுக்கு நன்மையான அழகு என்க.

நிதியும் கருணையும் நிராசையும் இங்கே சிந்திக்க வந்துள்ளன. சிந்தனை தெளிவது சீவ ஒளியாம்.

உண்ண உணவு, உடுக்க உடை முதலிய பண்டங்களை எல்லாம் எளிதே அடைதற்குப் பொருள் கருவியாயுளது. உடல் வாழ்க்கைக்கு உரிய அவசிய தேவைகளை ஆதரவா அருளி வருதலால் பொருளுடைமையே யாண்டும் இனிய வாழ்வுடைமையாயது.

பொருளுடையான் கண்ணதே போகம்; அறனும்
அருளுடையான் கண்ணதே ஆகும்;—அருளுடையான்
செய்யான் பழிபாவம் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவிக்கு உய்த்து. (சிறுபஞ்சமூலம்)

பொருளில் ஒருவற்கு இளமையும், போற்றும்
அருளில் ஒருவற்கு அறனும்,—தெருளான்
திரிந்த ழ்ந்த நெஞ்சினுன் கல்விஇம் மூன்றும்
பரிந்தாலும் செய்யா பயன். (அறநெறிச்சாரம்)

பொருளில் குலனும் பொறுமையில் நோன்பும்
அருளில் அறனும் அமைச்சில் அரசும்
இருளினுள் இட்ட இருள்மயிர் என்றே
மருளில் புலவர் மனம்கொண் டுரைப்ப.
(வளையாபதி)

இவை ஈண்டு நன்கு எண்ணி உணர வுரியன.

பொருள் உடலை வளர்த்து இவ் வுலக அளவில் நின்றுவிடும். அருள் அறம் ஆகி உயிர்க்கு ஒளிபுரிந்து மறுமையின் பங்களையும் உரிமையுடன் அருளும்.

பொருளைப் போற்றியும், அருளை ஆற்றியும், தெருளுடன் ஒழுகி வருபவர் எவ்வழியும் செவ்வையாய் விழுமிய தலைமைகளில் விளங்கி வருகின்றார்.

வேண்டா விரதம் என்றது, உலகப்பொருள்கள் எதையும் விரும்பாத மேன்மையை. ஆசையற்ற இந்த நிராசை நிலை அதிசய மகிமை யுடையது. ஆசையை வென்றவன் அகில உலகங்களையும் வென்றவனாய்த் தேசு மிகுந்து நிற்கிறான். ஆசையில் இழிந்தவன் நீசம் அடைய நேர்கின்றான்.

ஆசைக்கு அடியான் அகிலலோ கத்தினுக்கும்
ஆசற்ற நல்லடியான் ஆவானே—ஆசை
தனையடிமை கொண்டவனே தப்பா துலகம்
தனையடிமை கொண்டவனே தான். (நீதிசாரம் 12)

ஆசை உற்றவரது சிறுமையையும். அற்றவரது பெருமையையும் இதனால் அறிந்து கொள்கிறோம். எதையும் வேண்டாதவன் அதிசய பாக்கியவான்; ஆண்டவனை உரிமையுடன் அவன் நேரே அடைகிறான்.

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல். (குறள் 363)

வேண்டாமையின் மகிமையை இது விளக்கியுளது. குறிப்பின் உண்மையைக் கூர்ந்து ஓர்ந்து கொள்பவர் அவாவின்மையின் அதிசய மகிமைகளைத் தேர்ந்து நன்கு தெளிந்து கொள்வர்.

ஆசை இல்லாத உள்ளம் ஈசன் இல்லம்.

20\. மரபுக் கணியியல்பு மாறாமை; வாய்த்த
வரவுக் கணிதருமம் வார்தல்;—கரவில்லா
மாட்சி வணிகர்க்கு மாணணி; நீதியுயர்
ஆட்சி அரசுக் கணி. (உ0)

இ-ள்

உரிய இயல்பு மாறாமை மரபுக்கு அழகு; தருமம் தழுவி வருதல் பொருள் வரவுக்கு அழகு; கரவில்லாத மாண்பு வணிகர்க்கு அழகு; நீதிமுறையான ஆட்சி அரசுக்கு உரிய பெரிய அழகு என்க.

பரம்பரை வழக்கமாய் மருவி வருவது மரபு என வந்தது. உரமான உறுதிநிலை இதில்மருவியுளது

உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இந்தப் பழமையான கிழமை படிந்து வருவனவே சிறந்து திகழ்கின்றன. மரபு மாறின் மகிமை மாறி விடும்.

மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தாம் இருவகை இயல
முதலும் வழியும்என நுதலிய நெறியின.
(தொல்காப்பியம்)

மரபுநிலை திரியாமையே மாட்சிமையாம் என இஃது உணர்த்தியுளது. இந்த இயல் விதி உயர் பொருளுடையது; ஈண்டு எண்ணி உணர வுரியது.

உலக வாழ்வுக்குப் பொருள் இனிய உதவியா யுள்ளது. அதனைத் தரும வழியில் ஈட்டிக் கொள்வதே நல்லது. அந்த வகையில் வருகிற வரவே எந்த வகையிலும் சிதையாமல் யாண்டும் இனிமையாய்ச் சந்ததிகளுக்கெல்லாம் இன்பம் தந்து வரும்.

தருமம் ஆவதுவே இன்பம்
தருமலால் தருமம் நீக்கும்
கருமம் ஆவதுபோல் தோன்றிக்
காட்டினும் பசுமட் பாண்டத்து
அருமையாய் நிரப்பும் தெண்ணீர்
அனைத்தும்அப் பாண்டத் தோடும்
ஒருமையாய்க் கெடுத லேபோன்று
ஒருகணத்து அழியு மன்றே.
(பிரபோத சந்திரோதயம்)

தரும நெறியில் வருகிற பொருள் சுட்ட மண் பாண்டத்தில் இட்டு வைத்த நீர்போல் நிலைத்து இன்பம் தரும்; அவல வழியில் வருவது பச்சை மண் பாத்திரத்தில் வார்த்த நீர்போல் விரைந்து அழிந்து போம் என இது விளக்கியுளது. தண்ணீரோடு குடமும் ஒழிதல் போல் பொருளோடு அந்தக்

குடியும் அடியோடு அழிந்து போம் என்பது இதில் முடிவாய்த் தெளிந்து கொள்ள வந்தது.

உழவும் வாணிகமும் உழைப்பு வகைகளில் தலைமையா யுள்ளன. உழவர்கள் விளைத்த விளை பொருள்களை நாட்டு மக்களுக்கு நன்கு பயன் படுத்துபவர் வணிகர்களே. கரவின்றிச் செம்மையாகச் செய்து வருமளவே அவர் நன்மை அடைகின்றனர்.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின். (குறள் 120)

வணிகர் எவ்வாறு ஒழுக வேண்டும் என்பதை நாயனர் இவ்வாறு உணர்த்தி யிருக்கிருர். பிறர் பொருளையும் தம்பொருள் போல் பேணி நேர்மையா வாணிகம் செய்பவரே சீர்மையாய்ச் சிறந்து வருகின்றனர். செம்மையே எவ்வழியும் நன்மையாம்.

நீதிக் காட்சியால் அரசனுடைய ஆட்சி மாட்சி அடைந்து வருதலால் அரசுக்கு நீதி அணிஎனவந்தது.

---

21. செலவுக் கணிகணக்கின் சீர்மை; சிறந்த
நிலவுக் கணியினிய நீர்மை;—உலகில்
எவைக்கும் பொருளே இனியஅணி; என்றும்
அவைக்குப் புலவர் அணி. (உக)

இ-ள்

சீரான கணக்கு செலவுக்கு அழகு; இனிய நீர்மை நிலவுக்கு அழகு; பொருளே எவைக்கும் அழகு; புலவரே அவைக்கு அழகு என்க.

பொருளின் வரவைக் கருதி வருதல் போல் செலவையும் சீரோடு எண்ணிச் செய்ய வேண்டும்.

அந்தச் செயலுக்கு ஒழுங்காகக் கணக்கு எழுதி வைத்துக் கொள்வதே நல்ல பாதுகாப்பாம்.

ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.

என்பது முதுமொழி. கணக்கோடு எதையும் கருதிச் செய்க என்பதை இது உறுதியாக் காட்டியுள்ளது. வரம்பு உடையது வளமுடையதாம்.

அறிஞர்கள் கூடியுள்ள நல்ல இடத்துக்கே அவை என்று பெயர். கலையறிவில் தலை சிறந்துள்ள புலவர்களாலேயே அது சிறப்பும் சீரும் மிகப் பெறுகிறது. அறம் அருளால், அவை அறிவால் ஆம்.

உரிமையான அழகு தோய்ந்து வரும் அளவே எந்தப் பொருளும் வளமாய் இனிமை யுறுகிறது.

பகல் பானுவால் ஒளி பெறுகிறது; இரவு சந்திரனால் எழிலுறுகிறது; நாடு நல்லவரால் நலம் அடைகிறது; மனிதர் மதியால் மாண்புறுகின்றனர்; மதிமான்களால் அவை உவகையாய் உயர்கிறது.

விண்ஒளி யான இரவியும் மதியும்
　　விரிபகல் இரவினை விளக்கும்;
கண்ஒளி யான விழிவழி யாவும்
　　கண்டுவந்து உயிரெலாம் களிக்கும்;
தண்ஒளி யான கலைமதி யாளர்
　　தத்துவ ஞானத்தைத் தழுவின்
எண்ஒளி யான இறைஒளி எனவே
　　எழிலொளி வீசுவர் இனிதே.

சூரியன் சந்திரன் பகல் இரவு கண் உயிர் கலை அறிவு தத்துவ ஞானம் என்னும் இவை அழகின் இனிய ஒளிகளாய் ஈண்டு அறிய வந்துள்ளன.

மனிதன் அறிவால் உயர்ந்துள்ளான்; அந்த அறிவு மெய்யுணர்வால் மேன்மை எய்தி யுளது.

கல்வியறிவில் உயர்ந்தவர் புலவர் என நேர்ந்தார். அந்தப் புலமை தலைமையான ஞானத்தோடு சேர்ந்த போதுதான் நிலைமை உயர்ந்து திகழும். வெறும் புலமை வறண்ட புலம் போல் வசையே படும். மெய்யறிவு மேவாத கலை வெய்ய புலையே.

ஞானம் இலாத புலமை நவையாகி
ஊனம் உறுபுலையாய் ஓயுமே—ஞானமெனும்
தெய்வ ஒளிதான் திணையளவு சேரினும்
உய்தி யுறுமே உயிர்.

உயிர் துயர் நீங்கி உய்யவுரிய ஒளியை ஈண்டு விழி களிப்ப நோக்கி வியந்து கொள்கின்றோம்.

அவைக்குப் புலவர் அணி என்றது அதன் பயனையும் நயனையும் கருதி யுணர வந்தது. தெளிந்த மெய்யுணர்வு எய்திய அறிஞர் வையம் உய்ய நல்லதை நயமாய்ச் சொல்லி அருளுவர் ஆதலால் சபைக்கு அவர் சால்பான அழகு என நின்றார்.

மனைக்குப்பாழ் வாள்நுதல் இன்மை; செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை;—இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்
கற்றறி வில்லா உடம்பு. (நான்மணி 22) [பாழ்

இதனை ஈங்கு உற்றறிய வேண்டும்.

அறிவு ஒழுக்கங்களால் உயர்ந்த பெரியோர் இல்லாத அவை நவையாய்ப் பாழ் படும் என விளம்பிநாகனார் இவ்வாறு விளம்பியுள்ளார்.

22. அயல்சார்ந்து வாழாமை ஆண்மைக் கணி
முயல்மானை ஓர்தல் முதலாம்—மயலாகி [யாம்
வீழாமை எவ்வழியும் மேன்மைக் கணிகீழாய்
தாழாமை சால்புக் கணி. (உஉ) [த்

இ-ள்

பிறர் உதவியால் வாழாமை பேராண்மைக்கு அழகு; மான் முயல் போல் மானமா வாழ்தல் தலைமைக்கு அழகு; மயலில் விழாமை மேன்மைக்கு அழகு; கீழாய்த் தாழாமை சால்புக்கு அழகு என்க.

சால்பு=இனிய குணங்களின் நிறைவு.

தனது உயிர் வாழ்வு இனிமையும் புனிதமும் ஏய்தி வர வாழ்பவனே மெய்யான ஆண்மகனாய் மேன்மை மிகப் பெறுகிறான். மரியாதையும் மதிப்பும் தனது முயற்சி வழியே உயர்ச்சி அடைந்து வருகின்றன. அயலார் ஆதரவால் வாழ நேரின் அது அடிமை வாழ்வாய்த் தாழ நேரும். எந்த வகையிலும் பிறர் உதவியை நாடாமல் ஆனவரையும் முயன்று மானமா வாழ்கிற அந்த வாழ்வே அமரர் வாழ்வாம்.

காட்டு விலங்குகளான மான் முயல்களிடமும் மனிதன் கண்டு தெளியவுரிய அரிய நீர்மைகள் மருமமாய் இனிது மருவி யிருக்கின்றன.

இரவறியா; யாவரையும் பின்செல்லா; நல்ல
தருநிழலும் தண்ணீரும் புல்லும்—ஒருவர்
படைத்தனவும் கொள்ளா;இப் புள்ளிமான் பார்மேல்
துடைத்தனவே அன்றோ துயர்? (தண்டி)

புள்ளிமான் புனித வாழ்வை உள்ளம் தெளிய இது

விளக்கியுளது. எதையும் எவரிடமும் அது எதிர்பாராது; மனிதர் வெட்டிய குளத்தில் நீர் அருந்ாது; ஒருவர் வைத்த மர நிழலில் தங்காது; ஆதலால் இழிவு யாதும் நேராமல் மானமாய் அம்மான் வாழ்ந்து வருகிறது. இதைப் பார்த்தாவது யாசகம் செய்து வாழும் மனிதர் அந்த ஈன நிலையை விட்டு மானமா முயன்று மரியாதையுடன் வாழலாகாதா? இந்த உணர்வு நிலை இதில் உரமா உறைந்துள்ளது.

மயர்அற ஒருவர் தொட்ட
வண்குளப் புனலும் வேண்டா;
வியனிலப் பயிரும் மேயா;
வேலியும் கடத்தல் செய்யா;
முயல்இனம் வாழா நின்ற
முறைதிறம் பாமை நன்றென்று
உயலுறு மனத்தார் நோக்கி
உவப்பன கரிய கானம்.

(திருவானைக்காப் புராணம்)

அணவு கானகத்து ஒருவர்தம் முயற்சியால் அமைந்த
உணவும் நீரும்நீத்து ஆங்கவை ஒன்றினை ஒன்று
தணவு றுதமை தரல்தெரிந்து ஆர்ந்துறத் தழையும்
குணவு வாமுயல் தன்மைசொற் றிடினருங் குரைத்தே.

(தியாகராச லீலை)

அயலை அணுகாமல் முயல் வாழ்ந்துள்ள இயல்களை இவற்றால் அறிந்து கொள்கின்றோம்.

A life of independence is generally a life of virtue.
(Goldsmith)

சுதந்திரமான வாழ்வு தரும வாழ்வே.

தானே முயன்று தனிநிலையில் வாழினது
மானமுயர் வாழ்வாம் மதி.

மதிப்பும் மாண்பும் மருவி எவ்வழியும் மகிமை யுடன் மனிதன் இன்பமாய் இனிது வாழ வுரிய மருமத்தை இதில் கூர்ந்து ஓர்ந்து கொள்கின்றோம்.

கீழ்மை யுருமல் வாழ்ந்து வருபவரே மேலோராய்த் தேர்ந்து வருகிறார். உயர்வும் தாழ்வும் வெளியிலிருந்து வருவன அல்ல; அவனவனுடைய செயல் இயல்களிலேயே இனமாய்ச் செறிந்துள்ளன.

கீழோர் மேலோர் எனப் பால் வேறுபடப் பாகுபாடுகள் செய்து வருவன எல்லாம் காரண காரியங்களோடே பூரணமாய்த் தொடர்ந்து வருகின்றன.

இனிமையும் இதமும் புனிதமும் பொருந்தி வரின் அந்த மனிதன் மேலான குலமகனாய் விளங்கி வருகிறான். கொடுமையும் மடமையும் தீமையும் கூடி வரின் அவன் கீழான இழிமகனாய்க் கழிந்து போகிறான். பான்மை உயர மேன்மை உயரும்.

இழிந்த இயல்புடைய மனிதன் இழிவாகவே எண்ணுகிறான்; ஈனமாகவே பேசுகிறான்; இடர்களே யே செய்கிறான். சொல் செயல்கள் எல்லாம் நஞ்சு தோய்ந்து வருதலால் அவன் நெஞ்சம் புலையாயிழி கிறது; இழியவே நீசனாய் அவன்நாசமே அடைகிறான்.

மண்ணுலகில் வாழுகின்ற மானிடர்களின் நிலைகளை அறிய விரும்பி விண்ணுலக வேந்தனான இந்திரன் ஒருமுறை மனித உருவம் மருவி இப் பூமிக்கு வந்தான். எங்கும் தீமையும் கீழ்மையும் சிறுமையும் மடமையுமே நிறைந்துள்ள மனிதர்களைக் கண்டான். மகவான் மிகவும் வருந்தி நெஞ்சம் கலங்கினான்.

பெரிய நகரங்களுக்கும் வந்தான்; பல வீதிகளி லும் நடந்து பார்த்தான். யாரைப் பாாத்தாலும் அருவருப்பும் வெறுப்பும் அடைந்தான். வழியிடையே ஒரு நாய் எச்சில் இலையை நக்கிக் கொண்டிருந்தது; அதனைக் கண்டதும் வியந்து நின்றான். புலையான அந்த நாயின் பரிதாப நிலைக்கு இரங்கி நெருங்கி நோக்கினான். நெருங்கவே அது உறுமி உறுமி விரைந்து எச்சிலை நக்கியது. ஏன் அது அவ்வாறு உறுமியது? "இந்த எச்சில் இலையில் உள்ளதை நச்சியே இவன் இவ்வாறு நெருங்குகிறான்" என்றே அவ்வாறு அது உறுமியது என்று தெரிந்து அமரர் கோன் அதிசயமடைந்து உலக நிலையை வியந்தான்.

அயலே நடந்து போனான்; மனிதர்களும் அவ் வாறே யாண்டும் மையல் மயக்கங்களே பூண்டுள் ளதைக் கண்டான். உருவங்கள் மாறியுள்ளனவே யன்றி எல்லாரும் பொல்லாத நாய்களே என்று எண்ணி இனைந்து மண்ணினர் நிலைக்கு இரங்கினான்.

ஈன நிலையில் இழிந்துள்ளோர் யாரையும்
ஈனமா எண்ணி இகழுவார்—வானவர்கோன்
வந்த தெருவில் வழியில் இழிநாயும்
அந்தோ உறுமிய தால்.

இந்த நிலையிலேயே மனிதரும் உள்ளனர் என்று வந்த இந்திரன் சிந்தை தெளிய நேர்ந்தான். மனம் இழிந்து நீசமுறின் மனிதன் இழிந்து நாசம் அடைகின்றான் என்று நெஞ்சம் தெளிந்து நெடிது நொந்து மீண்டு போனான். வானவர் கோனால் மான வரின் ஈனமான இழி நிலைகள் தெரிய வந்தன.

23. நிலத்துக் கணிவளனே நீள்விளைவுக் கென்றும்
நலத்தஅணி நல்ல உரமே—தலத்தின்
உழவுக் கணிதுகளா வூன்றலே உற்ற
முழவுக் கணிதொனியே முன். (உரு)

இ-ள்

நிறைந்த வளமே நிலத்துக்கு அழகு; நல்ல உரமே விளைவுக்கு அழகு; புழுதியுற உழுதலே உழவுக்கு அழகு; இனிய நாதமே முழவுக்கு அழகு என்க.

முழவு=மத்தளம். இனிது முழங்கி இசை மருவி வருவது இங்ஙனம் வழங்கி வர நேர்ந்தது.

உலக உயிர்கள் நலமா வாழ்ந்து வருதற்கு நில வளமே மூல காரணமா யுள்ளது. மண் வளமாய் வாய்ந்திருந்தாலும் நெல் புல் முதலிய விளைபொருள் களை மிகுதியாக விளைத்து வருதற்கு உழுது எரு முதலிய உரங்களை நன்கு பரப்பி வர வேண்டும்.

உயிர்க்கு உணவு போல் பயிர்க்கு எரு. உரம் என்னும் சொல் அதன் உறுதி உண்மைகளை உணர்த்தி உயர் நிலைகளை விளக்கி வருகிறது.

ஆழ உழுவதால் மண் தூளாய் மாறுகிறது. மண் பொடியானல் அது பொன் பொடியாம். நன் செய்க்கு நீர்; புன்செய்க்கு ஏர் என்பது பழமொழி. நீராலும் ஏராலும் விளைவுகள் பெருகி வைய னுலகை எவ்வழியும் நயமாப் பேணி வருகின்றன.

நாழிமண் ஆழாக்குத் தூளாக நன்குழுதால்
வாழி வளங்கள் வளர்ந்து வரும்—ஆழிசூழ்

ஞாலம் உயிர்த்து வருவது நல்லுழவன்
கோலம் புரியும் குறி.

உழவன் செய்து வரும் தொழிலால் உலகம் ...ாழ்ந்து வருகிறது. அவ் வுண்மையை அனுபவங் ...ள் உணர்த்தி இனிது தெளிவித்து வருகின்றன.

உழவும் உலகமும்

உலகம்எனும் உயர்தருவுக்கு உறுதியாம்
மூலவேர் உழவே; வேருய்
இலகுபல தொழில்களெலாம் இலைதழைபூ
கனிகாய்கள் எனவே நின்ற;
நிலவுலகம் என்றுமே நிலையாக
நிலைத்துவர நேரே ஏரே
பலவகையும் புரந்துவரும் பான்மையினல்
பாரின்உயிர் ஏரே பாரீர்! (1)

உயிரும் பயிரும்.

உண்ணுகின்ற உணவுகளால் உயிர்கள்உள;
அவ்வுணவோ, உழவன் கைகள்
பண்ணுகின்ற தொழில்களிலே பரவியுள;
ஆதலினல் பாரில் யாரும்
எண்ணுகின்ற தொழில்களெலாம் ஏருடையான்
தொழில்எதிரே இரவி முன்னே
நண்ணுகின்ற ஒளிகள்என நாணிஒளி
இழந்தயலே நடந்து போமே. (2)

உழவனும் உழைப்பும்.

காய்கின்ற வெயில்எல்லாம் காயத்தின்
மேல்ஏற்றுக், காட்டில் மூண்டு

பாய்கின்ற முள்எல்லாம் பாதத்தின்
பால்ஏற்றுப், பனிநீர் வாடை
தோய்கின்ற துயர்எல்லாம் தோலாமல்
தோல்ஏற்றுத், தொழில்கை செய்தே
ஓய்வின்றி உழைத்தூட்டும் உழவன்போல்
உலகில்எவர் உதவி யுள்ளார்? (3)
(இந்தியத்தாய் நிலை)

உலக உயிர்கள் உவந்து வாழ்ந்து வர உழைத்து ஊட்டி வருகிற உபகாரிகளை உரிமையோடு இவை இங்கே காட்டியுள்ளன. பாட்டாளிகளின் பான்மை மேன்மைகளைப் பரிவுடன் குறித்திருக்கும் இப் பாட்டுக்களின் பொருள் நயங்களையும் அருள் நலங்களையும் அரிய சுவைகளையும் குறிப்புக்களையும் கூர்ந்து ஓர்ந்து உணர்ந்து தெளிந்து கொள்ள வேண்டும்.

———

24. நாட்டுக்குக் கோன்காப்பே நல்லஅணி; நாட்டிவந்த
ஈட்டுக் கணிநுகர்ந் தீதலே;—பாட்டுக்குக்
கேட்டவுடன் இன்பம் கிளத்தலணி; கேழ்பயிர்க்குப்
பாட்டமே பாகார் அணி. (உச)

இ-ள்

அரசனது பாதுகாப்பே நாட்டுக்கு அழகு; அனுபவித்து ஈதலே ஈட்டிய செல்வத்துக்கு அழகு; கேட்டவுடன் இன்பத்தை விளைத்தலே பாட்டுக்கு அழகு; பருவ மழையே பயிர்க்கு அழகு என்க.

உரிய சமையத்தே படுகிற மழை பாட்டம் என வந்தது. பருவத்தில்பெய்வது பயன்பலசெய்வதாம்,

நாடு பொருள் கவி பயிர் என்னும் இவை ஈண்டு உரிமையாக் காண வந்தன. உரிய தன்மைகள் தோய்ந்து வரும் அளவே எவையும் நன்மைகளாய்ப் பெருமை பெற்று வருகின்றன.

மனிதன் உழைத்து வருகிற உழைப்புகள் பல. உழு தொழில் செய்கிருன்; வாணிகம் புரிகிருன்; கல்வி கற்கிருன்; செல்வம் ஈட்டுகிருன்; இன்னவாறே பலவும் ஆற்றி வருகிருன். வருவன எல்லாம் சுகமாய் வாழ்ந்து வரவே. உடல் வாழ்வை மட்டும் கருதி வருபவர் பரிதாபமாய் மறைகின்றார். உயிர் வாழ்வைக் கருதி உறுதி நலங்களைச் செய்து வருபவர் மெய்யறிவாளராய் உய்தி பெறுகின்றார்.

> ஈதற்குச் செய்க பொருளை; அறநெறி
> சேர்தற்குச் செய்க பெருநூலை;—யாதும்
> அருள்புரிந்து சொல்லுக சொல்லை இம் மூன்றும்
> இருளுலகம் சேராத வாறு. (திரிகடுகம் 90)

துன்பம் யாதும் தோயாமல் இன்ப உலகம் சேர்ந்து இனிது வாழ வுரிய வழியை இது விளக்கியுளது. அறநெறியும் அருள் ஒளியும் மருவி வருபவர் இருள் உலகம் ஒருவி இன்பம் மிகப் பெறுகின்றார்.

பயிர்கள் வளர்ந்து வரப் பாடறிந்து பெய்யும் பருவ மழைபோல் உயிர்கள் உவந்து வர எவ்வழியும் அருளோடு உணர்ந்து உதவி புரிந்து வருபவர் வியனாய் உயர்ந்து மேலான நிலைகளில் செல்கின்றார்.

கைம்மாறு கருதாமல் மழை பெய்து வருகிறது; அவ்வரவால் வாழ்ந்து வருகிற மனிதனும் பிறர்க்கு

உபகாரியாய் யாண்டும் இதம்புரிந்து வரவேண்டும். உதவி வருகிற அளவே உயர்வு பெறுகிருன்.

---

25. குளத்துக் கணியுயர்ந்த கோடே குறித்த
வளத்துக் கணியமைந்த வாழ்வே—உளத்துக்
மாதர் பிறரை மருவநினை யாமையணி [கு
ஓதலணி மக்கட் குவந்து. (உரு)

இ-ள்.

உயர்ந்த கரை குளத்துக்கு அழகு; அளவறிந்து வாழ்வதே வளத்துக்கு அழகு; மறுமங்கையரை மருவ நினையாமையே உளத்துக்கு அழகு; ஓதி உணர்ந்து ஒழுகுதலே மாந்தர்க்கு அழகு என்க.

கரை சரியாய் அமையவில்லையாஞல் ஏரி நீர் இரிந்து போம் ஆதலால் கோடு அதற்கு அணி என வந்தது. வேலிபோல் வளைந்து அரணுய்க் கோலியிருக்கும் கரை கோடு என நேர்ந்தது.

தனக்கு வருகிற பொருள் வருவாய்களின் அளவுகளை ஓர்ந்து சீரும் செட்டுமாய்ச் செலவு செய்யாதவன் வாழ்வு பலவகை இடர்களை அடைந்து விரைவில் நிலைகுலைந்து போம்.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்ருக் கெடும். (குறள், 479)

அளவை அறிந்து வாழுக; அவ்வாறு வாழவில்லையாஞல் அந்த வாழ்வு விரைந்து அழிந்து போம் எனத் தேவர் இவ்வாறு அச்சுறுத்தி யிருக்கிருர்.

மனிதனுடைய உள்ளத்துக்கு உயர்ந்த அணி எது? பிறர் மனைவியரை விரும்பாத பெருந்தகைமையே. உத்தமன், பரிசுத்தன் என்னும் அற்புதப் பேர்கள் கற்புடையவனுக்கே உரிமையாய் வருகின்றன. இந்தப் புனித ஒழுக்கம் அதிசய இன்பங்களையும், அரிய மேன்மைகளையும் ஒருங்கே அருளுகின்றன.

அரிய பேறுகள் அனைத்தையும் எளிதினில் அடைந்து
பெரிய மேன்மைகள் பெறஒரு வழியுளது: அதுதான்
உரிய தன்மனை அன்றிமற் றுள்ளவர் எல்லாம்
பிரிய மேவிய தாய்தங்கை என்றுபே ணுதலே. (1)

பெற்ற தாய்எனப் பிறர்மனை எண்ணுவோன், பிறர்கை
உற்ற ஒண்பொருள் ஓடென உணருவோன், உலகில்
மற்றை யாவையும் தன்னுயி ராம்என மதிப்போன்
கற்றவன் அவன் கருதரும் பேரின்பம் கண்டான். (2)
(வீரபாண்டியம்)

அரிய பேரின்ப நிலையை எளிதே அருளுகிற பெரிய அமுத சீலம் ஈண்டு அறிய வந்தது.

உயிர்க்கு உண்மையான அணி உத்தம ஒழுக்கமே; இதனை உய்த்து உணர்ந்து உரிமையுடன் தோய்ந்து மாந்தர் உய்ய வேண்டும்.

---

26. பொய்கைக் கணிநீர்ப் பொலிவே; புயலியைந்த
பெய்கைக் கணிவிளைவு பேணுகையே;-செய்தமைந்த
உண்டிக் கணிவிருந்தோ டுண்ணலே; உண்ணுமுன்
பண்டிக் கணிபசியே பார். (உசு)

இ-ள்.

இனிய நீர்ப்பெருக்கின் பொலிவு பொய்கைக்கு

அழகு; விளேவின் வளம் மழைக்கு அழகு; விருந்தின ரோடு அருந்துதல் உணவுக்கு அழகு. பசியுடன் உண்ணுதல் வயிற்றுக்கு அழகு என்க.

வேண்டிய காலத்தில் வேண்டிய அளவு புயல் பெய்துவரின் விளேவுகள் வளமாய் விளேந்து வரும். அளவு மீறிப் பெய்யினும் பெய்யாது ஒழியினும் பயிர்கள் பாழாம். ஆகவே இயைந்த பெயல் அமைந்த புயல் இங்கே நன்கு எண்ண வந்தன.

வந்தவரது பசியை நீக்குவது புண்ணியம் ஆதலால் விருந்துடன் உண்பது திருந்திய மனே வாழ்க்கையின் சிறந்த கடமையாய் வந்தது.

விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளே
இவர்க்கூண் கொடுத்தல்லால் உண்ணுரே என்றும்
ஒழுக்கம் பிழையா தவர். (ஆசாரக் கோவை)

விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்து எனினும் வேண்டற்பாற் றன்று.
(குறள், 82)

வருந்தி ஒருவன்பால் மற்ெருருவன் வந்தால்
பொருந்தி அகமலர்ந்து போற்றி—விருந்தேற்றுத்
தன்ருல் இயன்றளவும் தான்உதவான் ஆகினவற்கு
இன்ன நரகே இடம். (பாரதம்)

உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்.
(நறுந்தொகை)

மாந்தர் உண்ணும் உணவுக்கு அழகு விருந்துடன் உண்ணுதலே; அவ்வாறு உண்ணுது ஒழிதல் இழிவாம் என்பதை இவற்ருல் அறிந்து கொள்ளுகி

ரோம். பிற உயிர்களும் பசி நீங்கி மகிழ்ந்து வாழ்ந்து வரச் செய்கிற உபகாரியை வானவரும் வியந்து புகழ்ந்து உவந்து வருகின்றனர்.

பசித்து உண்பதே மிகவும் நல்லது. தேக சுகமும் விவேகமும் இதனுல் விளைந்து வருகிறது. உண்ணும் உணவைப் பசி அறிந்து பதமாய் உண்பவன் உரமாய் உயர்ந்து உணர்வு மீதூர்ந்து வருகிறுன்.

அற்றது அறிந்து, கடைப்பிடித்து, மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. (குறள் 944)

மனிதன் எவ்வாறு உண்டு செவ்வையா வாழ்ந்து வரவேண்டும் என்பதை இஃது உணர்த்தியுளது.

நன்ருகப் பசித்தபின் அருந்துவதால் சிறந்த நன்மைகள் சீர்மையாய் விளைந்து வருகின்றன.

குடல் காய உண்டால்
உடல் காயம் ஆகும்.

என்பது முதுமொழி. உயிர் துயர் உருமல் நெடிது வாழ வுரிய அரிய சித்தி தெரிய வந்தது.

---

27. ஆற்றுக் கணியமைந்த வெள்ளமே; ஆற்றிநின்ற
ஊற்றுக் கணியினிய ஊறலே;—பேற்றுக்குப்
பேணநின்ற இன்பப் பெருக்கே அணியுடற்குக்
காணநின்ற காட்சியே காண். (உஎ)

இ-ள்

நதிக்கு வெள்ளமே அழகு; ஊற்றுக்கு இனிய ஊறலே அழகு; அரிய பேற்றுக்கு அழகு பெரிய இன்பமே; உடம்புக்கு அழகு நல்ல காட்சியே என்க.

ஊறல்=ஊறி வருகிற நல்ல தண்ணீர்.

நதியில் வெள்ளம் வற்றிய பொழுது ஊற்று நீர் உயிர்களுக்கு உதவி புரிகிறது. ஆறு இயற்கையில் எய்தியது; ஊற்று செயற்கையில் அமைந்தது. பயிர்களுக்கும் உயிர்களுக்கும் இவை ஆதரவாய் முறையே இதம் புரிந்து வருகின்றன.

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும்அந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. (நல்வழி, 9)

சிறந்த குடிப்பிறப்பாளர் எவ்வழியும் பிறர்க்கு இரங்கி உதவி புரிவர் என்பதைத் தெளிவாக விளக்குதற்கு ஆற்று நீரும் ஊற்று நீரும் இவ்வாறு உவமையா வந்துள்ளன. உண்ணீராய் நின்று தண்ணீர் உயிர்களுக்கு உதவி வருதல் போல் தண்ணளியுடையராய் இதம் புரிந்து வருபவர் புண்ணிய சீலராய்ப் பொலிந்து திகழ்கின்றார்.

இம்மையில் அருமையாகப் பெறுகிற கல்வி செல்வங்களுக்கும் மறுமையில் அடைகிற சுவர்க்கத்துக்கும் இன்ப வளமே அழகுகளாம். துன்பம் தொடராத சுகமே பேரின்பம் ஆகிறது.

அரிய அறிவும் இனிய காட்சியும் மனித தேகத்துக்கு உரிய மாட்சிகளாய் ஒளி புரிகின்றன.

நீர் இல்லாத ஆறு, ஊறல் இல்லாத ஊற்று, இன்பம் இல்லாத பேறு, காட்சியில்லாத கண் இழி

வுடையனவாம். உரிய நீர்மைகள் மருவி வருவனவே அரிய அழகுகளாய் எங்கும் ஒளிகள் பெறுகின்றன.

———

28. பூவுக் கணிமணமே பொன்னுக் கணிஒளியே
பாவுக் கணிபொருளின் பாரிப்பே—நாவுக்கு
மெய்யே அணிஎன்றும் மேவியநல் லுண்டிக்கு
நெய்யே அணியாம் நெடிது. (உஅ)

இ-ள்

பூவுக்கு மணமே அழகு; பொன்னுக்கு ஒளியே அழகு; பாவுக்கு இனிய பொருள் நிறைவே அழகு; நாவுக்கு மெய்யே அழகு; உணவுக்கு நெய்யே அழகு என்க.

மணத்தால் மலர் மாண்புறுகிறது; ஒளியால் பொன் உயர்வுறுகிறது; பொருள் வளத்தால் கவி கவினுறுகிறது; சத்தியத்தால் நாக்கு நலம் பெறுகிறது; நெய்யால் உணவு சுவை மிகுகிறது.

எவ்வழியும் சத்தியமே பேசிவரின், மலர்மாலை அணியலாம்; பொன் அணி பூணலாம்; கவியின் சுவைகளை நுகரலாம்; நெய்கலந்த சுவை உணவுகளை அருந்தலாம்; இந்த உண்மைகளை இதில் நுண்மையா ஓர்ந்து உணர்ந்து கொள்ளுக.

பூவும் பொன்னும் பாவும் நாவும் உணவும் ஈண்டு உரிமையா உணர வந்துள்ளன. பாவை நடுவே வைத்தது, உணர்வின் சுவையாய் ஒளி மிகுந்துள்ள அதன் உயர் நிலை கருதி.

பா=பாட்டு. மொழி வழியே எண்ணங்கள்

பாய்ந்து பரந்து ஒளி வீசி வருதலால் பாடல், பாட்டு, பா என்னும் நாமங்கள் மேவி வந்துள்ளன.

உயிர் உடலோடு கூடி உலாவி வருகிறது; உணர்வு பாடலோடு கூடி ஒளிபுரிந்து வருகிறது. நல்ல குணமுள்ள உயிர் அழகான உருவை மருவி வரின் உலகம் உவந்து கண்டு வியந்து போற்றும். சிறந்த கருத்துக்கள் உள்ளே நிறைந்து கவியும் கவி ஞகை வெளியே அமையின் அந்தப் பாடல் அதிசய ஆடல்கள் புரிந்து யாண்டும் துதிகொண்டு துலங்கி நிற்கும். அரிய கவி பெரிய மகாஞகிறது.

சொல்லும் பொருளும் சுவை சுரந்து உள்ளே நல்ல உறுதி யுண்மைகள் நிறைந்து ஒளி மிகுந்து வரின் அந்தக் கவி அதிசயமான பேரின்பமாம்.

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறும்
சுவையே! (மீஞட்சியம்மை பிள்ளைத்தமிழ்)

பாடலின் பயனே! தமிழின் சுவையே!

என்று மீஞட்சி அம்மையை இவ்வாறு அன்பு மீதூர்ந்து இன்ப நிலை தெரியத் துதித்திருக்கிருர்.

தேவியின் தெய்வத் திருவுருவைப் பாவின் பயனே! என்று கூறியிருத்தலால் இதன் இனிய நீர்மையும் அரிய சீர்மையும் தெரிய நின்றன.

இளமை நலங்கனிந்து விழுமிய எழிலோடு விளங்கி நின்ற சீதையின் உருவ அழகை வியந்து

புகழ்ந்து பலவாறு வணங்கு புனைந்து வந்த கவிஞர் பெருமான் இறுதியில் **செஞ்சொற் கவி இன்பம்** என்று நெஞ்சம் உவந்து துதித்துள்ளார்.

அழகிய கவிகளில் அதிசய இன்பங்கள் சுரந்து நிறைந்து உள்ளன. அந்த உண்மைகளை நுண்மையாய் உணர்பவர் விண்ணுலக இன்பங்களையும் விழையார். அறிவின் சுவையான கவியின்பங்களையே கருதி மகிழ்வர்; களித்துத் திளைப்பர்.

மாணிக்கம், மரகதம், வைரம் முதலிய மணிகளின் குண நலன்களைக் கூர்ந்து அறிபவர்க்கே அவற்றின் சீர்மை நீர்மைகள் தெரிய வரும்.

கவிகளின் சுவைகளைக் கருதி யுணர்பவரே அவற்றின் அருமை பெருமை அழகு இனிமைகளைத் தெளிவாகத் தெரிந்து உவந்து கொள்வர்.

இரத்தினங்களைச் சோதித்துத் தெரிபவரினும் கவிகளைச் சோதித்துத் தெளிபவர் மிகவும் அரியர்.

மணி அறிவினும் கவி அறிவு உயர் சுவையுடையது; உயிர்க்கு இன்பமாய் ஒளி புரிந்து வருவது. மாதிரிக்காக ஒரு கவி இங்கே காண வருகிறது. கருத்தை ஊன்றிக் காண வுரியவர் தம் காட்சி அளவு கண்டு மகிழ அது நீட்சி எய்தியுளது.

வெய்யோன்ஒளி தன்மேனியின்
விரிசோதியின் மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும்
இளையான்ஒடும் போனான்:

மையோ? மரகதமோ? மறி
கடலோ? மழை முகிலோ?
ஐயோ! இவன் வடிவுஎன்பதோர்
அழியாஅழகு உடையான். (இராமா: 2-6-1)

அழகான இந்தக் கவியின் சொல் அழகு பொருள் அழகு தொடை அழகு நடை அழகு தொனி அழகு முதலிய அழகுகளை எல்லாம் ஓதி ஓதி உள்ளச் செவியாலும் உணர்வுக் கண்ணாலும் ஓர்ந்து கூர்ந்து தெளிபவர் ஆர்ந்த மகிழ்ச்சிகளை அடைந்து அதிசய பரவசராய் வியந்து கொள்வர்.

அரசு முடி துறந்து இராமன் வனவாசம் செய்ய நேர்ந்தான். முதல் நாள் மாலையில் ஒரு சோலையில் வந்து தங்கினான். மறுநாள் விடியுமுன் எழுந்தான். தென்திசை நோக்கி நடந்தான். மனைவியும் தம்பியும் உடன் தொடர்ந்து வந்தனர். அந்த மானவீரன் கானகம் நோக்கிப் போன கருமக் காட்சியை இந்தக் கவி இவ்வாறு மாட்சிமையாக் காட்டியுள்ளது.

அதிகாலையில் எழுந்தவன் சிறிது தூரம் நடந்து வரவே சூரியன் உதய மாயினான். இளங்கதிர்கள் எழுந்தன; செழுஞ்சோதி எங்கும் வீசியது. பால சூரியனிடமிருந்து எழுந்த இளவெயில் பசியகோலத் திருமேனியனான இராமனது மரகத வண்ணத்தில் படிந்தது. படியவே அந்தச் சிவந்த சோதி பசிய சோதியாய் மாறியது; அயல் எங்கும் பச்சை ஒளி பரவி உச்ச நிலையில் ஓங்கியது. அந்த அதிசயக் காட்சியை இங்கே துதிசெய்து காட்டி யிருக்கிறார்.

வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியில் மறைய என்னும் இது நிறைசெய்து காணநேர்ந்தது.

உலகம் உய்யக் கருணையோடு புதுமையாய் உதயமாகியுள்ள அதிசய **சோதியையும்**, இயல்பாகவே நாளும் உதயமாகி வருகிற பழைய ஒளியையும் ஈண்டு அளவு செய்து நேரே அறிகிறோம்.

பச்சை நிறமுடைய கண்ணுடியில் சூரியன் ஒளி பாய்ந்தால் சிவப்பு மாறிப் பசுமை ஒளியே வீசும். மரகதமணி வண்ணனை இராமன் திருமேனி எழிலும் ஒளியும் உடையது ஆதலால் கதிர் ஒளி பசுமையாய் எதிர் ஒளி வீசியுளது. அந்த உண்மையை இங்கு நுண்மையாய் உணர்ந்துகொள்கிறோம்.

மையோ? மரகதமோ? மறிகடலோ? மழைமுகிலோ? என்னும் இதை உன்னி யுணர்க. இராமனது நிறத்துக்கு ஒப்புக் கூற நேர்ந்த கவி இப்படி ஓடி உசாவி யாதும் முடிவு காணுமல் முடித்திருக்கிறார்.

குறித்த நான்கும் ஒன்றினும் ஒன்று உயர்ந்தது. மையினும், மரகதம் அருமையும் பெருமையும் அரிய விலையும் உடையது. நிறத்தோடு நிலைமையும் தெரியக் கடல் வந்தது. நீதிக் கடல், தருமக்கடல், குணக் கடல், கல்விக் கடல், அறிவுக்கடல், வீரக்கடல் என இராமன் விளங்கியுள்ளான். உலக உயிர்கள் உய்ய நலமாய் வந்துள்ளமையால் **மழை முகில்** என்றார்.

ஐயோ! என்று கண்ணீர் சொரிந்து பரிந்து இரங்கி யிருக்கிறார். மணிமுடி புனைந்து செங்கோல் ஏந்தி அரியணையில் அமர்ந்து உலகம் உவந்து

வாழ்ந்து வர ஆட்சிபுரிய உரிய மன்னர் பெருமான் யாவும் இழந்து காட்டுக்குப் போக நேர்ந்தானே! என்று உள்ளம் கரைந்து உருகி யுள்ளமையை ஐயோ! என்பது அறிவித்துளது.

அழியா அழகு உடையான்.

இராமனுக்கு இவ்வாறு அழகான ஒரு பெயரை அருளியுள்ளார். அல்லல் பல அடைந்தும் உள்ளம் தளராமல் அன்று அலர்ந்த தாமரை மலர் போல் முகம் மலர்ந்து வீர கம்பீரமாய் எழில் ஒழுக நடந்து போகின்றான் ஆதலால் அழியா அழகன் என நேர்ந்தான். அதிசய அழகனை இது துதி செய்துளது.

பாவுக்கு அணி ஓரளவு பார்க்க வந்தது.

---

29. கோலமத யானைக்குக் கொம்பே அணிசிறந்த
நீலமயி லுக்கணிநீள் தோகையே—ஆல
மரத்துக் கணிவிழுதே மானார் தமது
சிரத்துக் கணிகூந்த லே. (உகூ)

இ-ள்

கொம்பு மதயானைக்கு அழகு; தோகை மயிலுக்கு அழகு; கிளை விழுதுகள் ஆலமரத்துக்கு அழகு; கூந்தல் மகளிர் சிரத்துக்கு அழகு என்க.

சீவ சிருட்டிகள் யாண்டும் அதிசயமான நீண்ட காட்சிகள் உடையன. உற்ற உறுப்புக்களால் ஒவ்வொன்றும் சிறப்பான மாட்சிகளைப் பெற்றிருக்கின்றன. உரிய நீர்மை அரிய சீர்மையாகிறது.

செறிந்து விரிந்த தோகையும் நீல நிறமும் அழகிய தோற்றமும் வளமாய் மருவியுள்ளமையால் மயிலை உயர் குல மாதர்க்கு உவமை கூறுவது இயல்பான கவி மரபாய் வந்துளது.

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ? கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு. (குறள் 1081)

பேரழகுடைய மங்கைக்கு மயில் இதில் ஒப்பாயுள்ளது. மயிலை இடையில் வைத்தது ஒயிலை எண்ணி.

மயிலுடைச் சாயலாள் என்று சீதை இவ்வாறு தெரிய வந்துள்ளாள். வனவாச காலத்தில் சீதையை பிரிந்த பின்பு இராமன் தம்பியுடன் மதங்கமலைச் சாரலை அடைந்தான். அங்கே மயில்கள் உலாவுவதைக் கண்டான். தனது அருமை மனைவியை நினைந்து மயில்களை நோக்கிப் பரிதாபமாய்ப் பேச நேர்ந்தான். மயலோடு உரையாடியிருக்கும் முறையை ஒரு சிறிது அயலே அறிய வருகிறோம்.

ஓடா நின்ற களிமயிலே!
சாயற்கு ஒதுங்கி உள்அழிந்து
கூடா தாரின் திரிகின்ற
நீயும் ஆகம் குளிர்ந்தாயோ?
தேடா நின்ற என்உயிரைத்
தெரியக் கண்டாய்! சிந்தைஉவந்து
ஆடா நின்றாய் ஆயிரம்கண்
உடையாய்க்கு ஒளிக்கும் ஆறுண்டோ?
(இராமா: 4: 1: 27)

எனது மனைவியின் உருவ அழகுக்குத் தோல்வியடைந்து பருவரலோடு உள்ளம் புழுங்கியிருந்த

ஓ மயிலே! இப்பொழுது அவள் பிரிந்து போனதை நினைந்து உவந்து திரிகிருய்! என் உயிர் அனைய அவளை நீ நேரே கண்டிருப்பாய்! ஆயிரம் கண்களை யுடைய நீ காணுமல் இருக்க முடியாது; அவள் போய் யுள்ள இடத்தை எனக்குக் கொஞ்சம் சொல்ல மாட்டாயா? என்று கெஞ்சிக்கேட்டிருக்கின்ருன். பிரிவின் பரிதாபத்தால் உள்ளம் கலங்கிப் பித்தனைப் போல் பிதற்றியுள்ளான். அந்த உண்மையை இங்கே உய்த்துணர்ந்து கொள்கிருேம். கவியைக் கருதிக் காணுங்கள்; சுவைகளை ஓர்ந்து நுகர்ந்து கொள்ளுங் கள். **ஆயிரம் கண் உடையாய்!** என்றது தோகையில் தொடர்ந்து படர்ந்துள்ள எழிலானவிழியுருவங்களை.

ஆலமரம் விழுதுகளால் மேன்மையடைந்துளது

சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைகண் தோன்றின்தான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும். (நாலடி 197)

நைந்தடி யற்ற ஆலம் நடுங்கிவீழ் கின்றது என்று
வந்தவீழ் ஊன்றி வீழா வகைநிலை விளக்கு மாபோல்
மைந்தர்கள் தமக்குள் நல்லஅறிவினுல் மகிழ்ந்து சேர்ந்து
தந்தையைத் தளரா வண்ணம் தாங்குவர் தவத்தின்
(இராமாயணம்) [என்ருன்.

ஆலுக்கு விழுதுகள் ஆதரவு புரிந்து வருதல் போல் தந்தைக்கு மைந்தர்கள் முந்துற உவந்து வந்து உதவி புரிவர் என இவை உணர்த்தியுள்ளன.

கோதையர் எனக் கூந்தலைக் கொண்டே மாத ரைக் குறித்து வருதலால் பெண்மைக்கு அணியாய் அது மருவியுள்ள உரிமை அறியலாகும்.

30. ஆவுக் கணிபால் அமைதி அலர்மலரும்
காவுக் கணிநிழலின் காட்சியே—மேவுகின்ற
ஊருக் கணியுயர்ந்த மேலோரே ஊருகின்ற
தேருக் கணிகொடியே தேர். (௩௦)

இ-ள்.

பால் வளம் பசுவுக்கு அழகு; குளிர் நிழல் பொழிலுக்கு அழகு; உயர்ந்த மேலோர் ஊருக்கு அழகு; சீரான கொடி தேருக்கு அழகு என்க.

தேரும் ஊரும் காவும் ஆவும் இன்ன தொடர் பால் சீரும் சிறப்பும் பேரும் பெருமையும் பெறுகின்றன என இவை தெளிவாய்க் குறித்துள்ளன.

வாவி தாமரை வாண்முகம் மலர்ந்துநன் மருங்கில்
காவி சாத்தியுற் பலமெனும் கண்மலர் முகிழ்த்து
மேவி மாதவர் நிகர்ப்பது மின்னனார் குழல்போல்
நாவி மாமணம் கமழ்வது நைமிசா ரணியம்; (1)

தேனும் தும்பியும் எடுத்தபண் இசைசெவி மடுத்து
மானும் வேங்கையும் ஒருதலைத் துயில்வது மயில்கள்
கான நாடகம் பயில்தரக் கானமா மறைகள்
ஞான யோகிகள் பயில்வது நைமிசா ரணியம். (2)
(திருக்குற்றாலப் புராணம்)

இனிய பல வளங்களோடு நைமிசாரணியம் என்னும் குளிர்பூஞ்சோலை எழில் நிறைந்து ஒளி விரிந்து இருந்த நிலையை இது வரைந்து காட்டியுள்ளது.

மேன்மையான குணநலன்களுடைய மேலோர் மேவி உள்ளதே மேலான நல்ல ஊர். அவர் அங்கே இல்லையேல் அது பொல்லாத புலைக் காடே.

நல்லோர் உடையதே நல்லவூர்; இல்லையேல்
பொல்லாத காடே புலை.

31. ஈகைக் கணியிரக்கம் இன்சொல்லே எய்திவரு
வாகைக் கணிபொறுமை வார்தலே—ஓகையு
வாழ்வுக் கணிதருமம் வாய்தலே மாருத [யர்
சூழ்வுக் கணிதான் துணிவு. (௩க)

இ-ள்

இரக்கமும் இன்சொல்லும் ஈகைக்கு அழகு; எய்தி வருகிற வெற்றிக்குப் பொறுமை அழகு; வாழ்வுக்குத் தருமம் அழகு; ஆலோசனைக்குத் தெளிவான துணிவு அழகு என்க.

இரங்கியருளும் பண்பு இரக்கம் என வந்தது. இனிய சொல் எவரையும் மகிழ்வுறச் செய்யும். கொடுக்கும் பொருள் சிறியதாய் இருந்தாலும் இந்தக் குண நீர்மைகள் அதைப் பெரிதாக்கி விடும்.

வாகை=வெற்றி. வாகுவின் வலியால் வென்று வருவது வாகை என வந்தது. வாகு=தோள்.

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலைஇராமன் தோள்வலி கூறு வோர்க்கே.

இராமபிரானது வெற்றித் திறலைக் கருதிக் கூறுவார்க்கு உளவாம் உறுதி நலன்களை இதனல் உணர்ந்து கொள்கிறோம். இத்தகைய வெற்றி வீரன் எவ்வழியும் பொறுமையைப் போற்றிக் கருணையை ஆற்றித் தருமத்தைக் காத்து வந்துள்ளான்,

புயத்துறை வலியர் ஏனும்
பொறையொடும் பொருந்தி வாழ்தல்

சயத்துறை அறனும் அஃதே
என்றிவை சமையச் சொன்னான்.
(இராமா: அங்கதன் 8)

பொறுமையைக் குறித்து இராமன் இவ்வாறு கூறியிருக்கிறான். அரிய பல குண நலன்கள் இப் பெரியவனிடம் உரிமையுடன் பெருகியிருந்துள்ளன.

புண்ணியம் பொலிந்து வர வாழ்ந்து வருபவரே யாண்டும் கண்ணியம் அடைந்து வருகின்றார். வாழ்வுக்குத் தருமமே அணி என்றது இருமை இன்பங்களையும் அதனால் பெறுதல் கருதி.

ஆழ்ந்து ஆராயும் ஆலோசனை தேர்ந்த முடிவால் சிறந்து திகழ்கிறது. சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல் எனத் தேவர் குறித்துள்ளதும் இங்கே கூர்ந்து சிந்திக்க வுரியது. யாவும் கருதித் தெளிந்து கொள்க.

---

32. கங்கைக் கணிபுனிதக் காட்சியே காமருயர்
மங்கைக் கணிநாண் மகிமையே—செங்கைக்கு
யாரிடமும் யாதொன்றும் ஏற்காமை யாவர்க்கும்
சீருடைமை செய்ய அணி. (௩௨) [கும்

இ-ள்

புனிதக் காட்சி கங்கைக்கு அழகு; விழுமிய நாணம் அழகிய மங்கைக்கு மகிமை; எவரிடமும் எதையும் ஏந்தி வாங்காமையே செவ்விய கைக்கு அழகு; சீர்மையான நீர்மையுடைமையே யாவர்க்கும் சிறந்த அழகு என்க.

உயர்ந்த நீர்மைகள் தோய்ந்து வரும் அளவே பொருள்கள் உயர்வாய்ச் சிறந்து திகழ்கின்றன.

தன்மைகள் இழந்து போனால் எவையும் புன்மைக ளாய் இழிந்து கழிந்து ஒழிந்து போகின்றன.

மனமும் வாக்கும் காயமும் தூய்மையுடையன வாய்த் துலங்கி வருதல் வாய்மை முதலியன மேன்மையாய் வாய்ந்து விளங்கி வருதலாலேயாம்.

தூய்மைகள் நீங்கிய பொழுது தீமைகள் ஓங்கி விடுகின்றன. முயன்று வாழ்ந்தால் மனிதன் உயர்ந்து திகழ்கிறான். இரந்து ஏதேனும் வாங்க நேர்ந்தால் அந்தக் கை செத்து விடுகிறது. சத்தியம் தோய்ந்து வரின் அந்த நாக்கு நித்திய மகிமையைப் பெறுகிறது; பொய் பேசினால் அது புலையா யிழிந்து அழிந்து படுகிறது. அறநலன்கள் அமைந்த அந்த உள்ளம் அதிசய மகிமைகளை அடைகிறது. பிறர் மனைவியரை விழைய நேர்ந்தால் அது பிழையாய் மாய்ந்து போகிறது. செத்த மனமும், செத்த நாக் கும், செத்த கையும் எத்தகைய இழிவுகள்! இவற் றை உய்த்து உணர்ந்து உய்தி பெற வேண்டும்.

---

33. கற்ற படிஒழுகல் கல்விக் கணிஞானம்
உற்ற பிறவிக் குயரணி—பெற்ற
மகவுக் கணிகுடியை மாண்புறுத்தல் செம்மை
தகவுக் கணியாம் தனி. (நந)

இ-ள்

சிறந்த கல்விக்கு அழகு கற்றபடி ஒழுகுதலே; பிறந்த பிறவிக்கு அழகு உயர்ந்த ஞானமே; பெற்ற மகவுக்கு அழகு தான் பிறந்த குடியைச் சிறந்ததாகச் செய்தலே; நடுவுநிலைமைக்கு அழகு மனச் செம்மை யாய் எவ்வழியும் நன்மை புரிவதே என்க.

ஒழுக்கம் ஞானம் குடிமை செம்மை இங்கே கூர்ந்து உணர வந்தன. கற்றவன் கற்ற படி நடக்க வில்லையானால் அவன் கல்வி புல்லிதாய்ப் பொலி விழந்து போகிறது. கல்வியறிவின் பயன் நல்ல சீலமே; அந்தப் பயன் படிந்து வரும் அளவே அது வியனாய் உயர்ந்து எங்கும் விளங்கி வருகிறது.

ஞானம் என்பது உண்மையை உள்ள படி உணர்தல். உள்ளது தெளிவது உய்தி யுறுவது.

சீவான்மா வுக்கும் பரமான்மா வுக்கும் உள்ள உறவுரிமைகளைத் தெளிவாகத் தெரிவதும், பிறவி நீங்கிப் பேரின்பம் பெறுவதும், இந்த ஞானஒளியினாலேயாம். எங்கே ஞான ஒளி இல்லையோ அங்கே ஈன இருளே நிறைந்திருக்கும். இந்தத் திவ்விய ஒளியை அணு அளவு எய்தினும் அவன் தெய்வ மனிதனாகிறான். தேவ தேவனை அடைகிறான்.

சிறந்த குலமகனுக்கு அழகு தான் பிறந்த குடியை உலகம் புகழ்ந்து வரும்படி செய்து அருளுவதேயாம். உயர்ந்த குண நீர்மைகளை உரிமையாக உடையவனே இத்தகைய உத்தம நிலையை எத்தகையோரும் ஏத்தி வரப் பெறுகின்றான்.

என்புகழ் கின்றது ஏழை எயினனேன் இரவி என்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய் உயர் குணத்து உரவுத்
(இராமாயணம்) [தோளாய்!

பரதனைக் குகன் இவ்வாறு புகழ்ந்திருக்கிறான். தான் பிறந்த குடியோடு தன் குலத்தையும் இவன்

உயர்த்தி யுள்ளான். சூரியன் ஒளிபோல் இவன் புகழ் ஒளி வையகமும் வானகமும் பரவி யுளது.

மனக் கோட்டம் இல்லாத செவ்விய மாட்சி திவ்விய காட்சியாம். தகவு = நடு நிலைமை. இந்த நேர்மையான நீர்மை தோய்ந்து வரும் அளவே மனிதன் தக்கவனுய் உயர்ந்து வருகிறுன். மனம் செம்மையாலுல் எல்லா நன்மைகளையும் எல்லாமேன்மைகளையும் அவன் எளிதே அடைந்து கொள்கிறுன்.

---

34. உற்ற முயற்சிக் குயரணி ஊதியமே;
அற்ற துறவுக் கணியமைதி;— பெற்ற
பிறவிக் கணிபின் பிறவாமை; பேணும்
உறவுக் குரிமை அணி. (௩௪)

இ-ள்.

உயர்ச்சியான ஊதியம் முயற்சிக்கு அழகு; மனஅமைதி துறவுக்கு அழகு; பின்பு பிறவாமையே பெற்ற பிறவிக்கு அழகு; அன்புரிமையே உறவுக்கு அழகு என்க.

மனிதன் பாடு படுவதெல்லாம் பொருள் வரவை நாடியே. தான் படுகிற பாட்டுக்குத் தக்க இலாபம் கிடைத்தால் அவன் மிக்க மகிழ்ச்சியை அடைகிறுன். உரிய ஊதியம் பெரிய இன்பமா வருகிறது.

உலகப் பற்றுக்கள் யாவும் அற்ற துறவிக்குச் சித்த சாந்தி சிவானந்த நிலையமாம். பாசப் புலைகள் நீங்கிய அளவு ஈசன் ஒளிகள் அங்கே ஓங்கி வருகின்றன. நிராசையே நிலையான பேரின்பம்.

மனிதப் பிறவி அறிவு மிகவுடையது; அதனை அருமையாக அடைந்தவன் அதனால் அடைய உரியதை விரைந்து அடைந்து கொள்ள வேண்டும். ஆசை அறுதலும் ஈசனை அறிதலும் பிறவித் துன்பங்கள் நீங்கிப் பேரின்பம் பெற வுரிய நேர் வழிகளாம். அறிய வுரியதை அறிந்தவன் அடைய வுரியதை விரைந்து அடைந்து உயர்ந்து திகழ்கின்றான்.

அடைய வேண்டியது அடைந்து மேல் துயரம்
அற்று இன்பம் அளவி லாதாய்க்
கடையதாம் தருவிலங்கு பறவைகள் போல்
வீணாள்கள் கழியா தாகித்
தடையிலா மனனத்தால் வாழ்வதே
உயர்வாணாள்; சநநம் தீர்ந்தோர்
உடையபிறப்பு உயர்ந்ததாம்; கிழவேச
ரிப்பிறப்பாம் ஒழிந்த எல்லாம்.

(ஞான வாசிட்டம்)

பின்பு பிறவாமல் செய்து கொண்டவன் பிறப்பே சிறப்பு மிகப் பெற்றது, மற்றப் பிறப்புகள் எல்லாம் கிழக் கழுதைப் பிறப்பே என்று இது இவ்வாறு பழித்துள்ளது. அடைய வேண்டியதை அடைய வில்லையானால் அவன் கடையனாய்க் கழிந்து போகிறான். சிறந்த அறிவுடைய உயர்ந்த மனிதப் பிறப்பைப் பெற்றும் உயிர் துயர் நீங்கி உய்ய உரிய நிலையை எய்த இல்லையானால் அது வெய்ய புலையே. ஆன்மா இன்பமுற அன்பு புரிக.

உரிமையான உள்ளன்புடையவரே உறவினர் என்பதற்கு எவ்வழியும் செவ்விய தகுதியானவர்.

———

35. நூலுக் கணியுணர்வின் நுண்மை; நுவல்கின்ற
கோலுக் கணிநீதி கோடாமை;— மாலுக்கு
மன்னுயிரைக் காப்பதே மாணணி; மாதவமே
தன்னுயிருக் கான அணி. (௩௫)

இ-ள்

நுண்ணிய உணர்வுண்மையே நூலுக்கு அழகு: நீதி கோடாமையே செங்கோலுக்கு அழகு; மன்னுயிரைக் காப்பதே திருமாலுக்கு அழகு; மாதவமே மனிதன் உயிர்க்கு இனிய அழகு என்க.

உள்ளத்தை உயர்த்தி உணர்வை ஒளி செய்து உறுதி நலன்களை உயிர்க்கு இனிது அருள வல்லது எதுவோ? அதுவே மேலான நல்ல நூலாம்.

உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா — மரத்தின்
கனக்கோட்டம் தீர்க்குநூல் அஃதேபோல் மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்கும் நூல் மாண்பு.

(நன்னூல்)

அறிவை வளர்த்துத் தீமையை ஒழித்து மனக் கோட்டத்தை நீக்கி மாட்சிமை ஆக்கி உயிர்க்கு உறுதி புரிவதே நூல் என இது குறித்துள்ளது.

எங்கும் நேர்மையாய் எவ்வழியும் நீதிநெறி தோய்ந்து எவ்வுயிர்க்கும் இதம்புரிந்து வருபவனே செங்கோல் வேந்தனாய் நன்கு சிறந்து வருகிறான்.

உயிரினங்களைக் காத்தருளும் பெருமாள் ஆதலால் திருமாலுக்குக் காப்புக் கடவுள்என்று பெயர்.

அரிய தவம் உயிர்க்குப் பெரிய இன்பங்களை அருளுகிறது. அதனை மருவினர் மகிமையுறுகின்றனர்.

தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு. (குறள் 266)

தவமே ஆன்ம உய்தியை அருள வல்லது; அதைச் செய்தவர் உயர்ந்து உய்தி பெறுவர். செய்யாதவர் இழிந்து கழிவர் என இது குறித்துளது.

---

36. கொல்லாமை நோன்பின் குலவணி; கோதுவழி
செல்லாமை சீரின் சிறப்பணி; — நில்லாமை
உள்ளி உணர்தல் உணர்வணி; பாலர்க்குப்
பள்ளி புகுதல் அணி. (௩௬)

இ-ள்

தவவிரதத்துக்கு உயர் அழகு எதையும் கொல்லாமை; சீருக்குச் சிறந்த அழகு தீயவழியில் செல்லாமை; நிலையாமை நிலையைத் தெளிவது உணர்வுக்கு அழகு; பள்ளி புகுதல் பாலர்க்கு அழகு என்க.

தன் உயிர் இன்பமாயிருக்க விரும்புகின்றவன் பிற உயிர்கள் துன்புறச் செய்யலாகாது. பொறிகளை அடக்கிப் பொறுமையாய்ச் செய்யும் தவம் நோன்பு என வந்தது. எவ்வுயிர்க்கும் இடர் செய்யாமல் இருந்தால் அது சிறந்த தவமாய் வருகிறது.

நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை.

கொல்லாமையும் புலால் உண்ணாமையுமே புண்ணியமான தவம் என ஔவையார் இவ்வாறு அருள் நிலையைச் செவ்வையாக் கூறியிருக்கிறார்.

கொல்லா விரதம் ஒன்று கொண்டவரே நல்லவர்; மற்று
அல்லாதார் யாரோ? அறியேன் பராபரமே.

தாயுமானவர் இவ்வண்ணம் சீவ கருணையை உணர்த்தியுள்ளார். நல்லவர் யார்? தீயவர் யார்? என்பதை இதில் ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம்.

இளமையில் பிள்ளைகள் பள்ளி புகுந்தால் கல்வி கற்று நல்ல அறிவுடையராய்த் தெளிவுற்று வருவர். வரவே அவர்க்கு அஃது அழகு என அமைந்தது.

---

37. நாளுக் கணிஎன்றும் நன்ருற்றல் நல்வீரர்
வாளுக் கணிவென்றி வாய்த்துவரல்—சூளுக்குச்
சொன்னபடி ஆற்றும் துணிவே அணிதுணிவுக்
கென்ன பணியும் அணி. (௩௭)

இ-ள்.

நல்லதைச் செய்தலே நாளுக்கு அழகு; வெற்றி பெற்று வருதலே வீரரது வாளுக்கு அழகு; சொல்லியபடி செய்தலே சூளுரைக்கு அழகு; எதையும் செய்து முடித்தலே துணிவுக்கு அழகு என்க.

நாழிகை தோய்ந்துள்ளது நாள் என வந்தது. பகலும் இரவும் சேர்ந்தது ஒருநாள். மனிதனது வாழ்நாளின் இனமாய் வாய்த்துள்ள நாளை நன்கு பயன் படுத்தி வருபவன் எங்கும் வியனுன பலனை அடைந்து கொள்கிருன்.

வீழ்நாள் படாஅமை நன்ருற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல். (குறள் 38)

வீணுக நாளைக்கழியாமல் நாளும் நன்மையைச் செய்துவரின் அவன் பிறவி தீர்ந்து பேரின்பம் பெறுவான் என்பதை இதில் அறிந்து கொள்கின்றோம்.

வாழ்நாட்கு அலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅது எழுதலால் — வாழ்நாள்
உலவாமுன் ஒப்புரவு ஆற்றுமின் யாரும்
நிலவார் நிலமிசை மேல். (நாலடி, 22)

உங்கள் ஆயுள் நாளுக்கு அளவு கோலாய் அமைந்துள்ள சூரியன் நாளும் தவறுமல் எழுந்து வருகிறுன். அவன் தோன்றி மறையுந்தோறும் நும் ஆயுள் தேய்ந்து மறைகிறது. முழுதும் மாய்ந்து படு முன் நல்லதை ஒல்லேயில் செய்து உயர்ந்து கொள்ளுங்கள் என இஃது உணர்த்தியுள்ளது.

தான் வாக்களித்த உறுதி மொழியைச் சரியாக நிறைவேற்றுபவனே நிறைந்த மதிப்பைப் பெறு கிறுன். உள்ளம் துணிந்து ஊக்கி முயல்பவனுக்கு எல்லாக்காரியங்களும்இனிது முடிந்து வருகின்றன.

---

38. புந்திக் கணிநூற் பொருளாய்வே; போயமரும்
சந்திக் கணிசார் தருநிழலே;—மந்திரிக்குச்
சொல்வன்மை கல்வி துணிவன் பெதிர்சூழும்
நல்வன்மை தூய்மை அணி. (௩அ)

இ–ள்

மேலான நூலின் பொருள்களே ஆராய்தலே அறிவுக்கு அழகு; இனிய குளிர் மர நிழலே சந்திக்கு அழகு; கல்வி சொல் வன்மை துணிவு அன்பு சூழ்ச்சித் திறம் தூய்மை மந்திரிக்கு அழகு என்க.

பொறிநுகர்வு உடல் நிலேயில் சிறிது சுகமாய்த் தோன்றி விரைந்து கழிந்து ஒழிவது; அறிவின்

நுகர்வு உயிர் நிலையில் உயர்வாய் நின்று எவ்வழியும் அதிசய இன்பங்களை என்றும் அருளி வரும்.

சந்தி = பொது நிலையமான பூங்கா. அந்திப் போதில் பலரும் போய்த் தங்கி அமைதியா யிருக்கவுரிய அந்த இடம் மலர் மணம் கமழ்ந்து குளிர் நிழல் அமைந்து எழில் நலம் நிறைந்து இனிது விளங்கிவரின் மாந்தர் மனம் மகிழ்ந்து வருவர்.

அரசனுக்கு உரிமைத் துணையாய் அமர்ந்து ஆலோசனைகள் கூறி வருகிற மதிமான் மந்திரி என நேர்ந்தரன். மந்திரம் = இரகசியம். மருமமான கருமங்களைத் தெளிவாக ஆய்ந்து செய்பவன் என்பது அந்தப் பெயருள் தோய்ந்துள்ளது. அரசுக்கு உரியதை ஆய்ந்து வரிசையுடன் ஓர்ந்து முடிப்பவன் அமைச்சன் என நேர்ந்து வந்தான்.

ஐயறிவும் தம்மை அடைய ஒழுகுதல்
எய்துவது எய்தாமை முற்காத்தல் — வைகலும்
மாறேற்கு மன்னர் நிலையுணர்தல் இம்மூன்றும்
வீறுசால் பேரமைச்சர் கோள். (திரிகடுகம் 61)

குடியோம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்
மடியோம்பும் ஆற்ற லுடைமை — முடி ஓம்பி
நாற்றம் சுவை கேள்வி நல்லார் இனம்சேர்தல்
தேற்றுனேல் தேறும் அமைச்சு. (ஏலாதி 17)

நல்லவும் தீயவும் நாடி நாயகற்கு
எல்லையில் மருத்துவர் இயல்பின் எண்ணுவார்;
ஒல்லைவந் துறுவன உற்ற பெற்றியின்
தொல்லை நல் வினைஎன உதவும் சூழ்ச்சியார்:

உற்றது கொண்டு மேல்வந் துறுபொருள் உணரும் கோளார்;
மற்றது வினையின் வந்தது ஆயினும் மாற்றல் ஆற்றும்
பெற்றியர்;பிறப்பின் மேன்மைப் பெரியவர்;அரிய நூலும்
கற்றவர்; மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார்.
(இராமாயணம்)

மந்திரிகளுடைய மாட்சிமைகளைக் குறித்து வந்துள்ள இவை இங்கே நன்கு சிந்திக்க வுரியன.

---

39. தாய்மொழியைப் பேணல் தமிழர்க் கணிதமது
வாய்மொழியைப் போற்றல் வணிகரணி-சேய்மொழி
ஈன்றார்க் கணியதுபோல் எவ்வுயிர்க்கும் எவ்வழியும்
ஆன்றோர் மொழியே அணி. (௩௯)

இ-ள்

தமது தாய்மொழியைப் பேணிவரல் தமிழர்க்கு அழகு; தாம் கூறிய வாய் மொழியைக் காப்பாற்றுதல் வணிகர்க்கு அழகு; தம் மக்கள் மழலை மொழியைக் கேட்டல் பெற்றோர்க்கு அழகு; ஆன்ற பெரியோர் மொழி யாவருக்கும் அழகாம் என்க.

தாய் மொழி, வாய மொழி, சேய் மொழி, தூய் மொழி இங்கே தெரிய வந்துள்ளன. தேசங்கள் தோறும் பேசும் மொழிகள் வேறுபட்டிருக்கின்றன. அந்த அந்த நாட்டில் வழங்கி வருகிற மொழிகளை இளமையிலிருந்தே வழக்கமாய்ப் பேசி வருகிற மக்களுக்கு அவை தாய்மொழிகள் ஆகின்றன.

இந்நாட்டில் வழங்கி வருவது தமிழ்மொழி. இம்மொழியை இயல்பாய்ப் பேசி வருபவர் தமிழர்கள்.

பண்டைக் காலத்திலிருந்த தமிழ் மக்கள் தம் தாய் மொழியை மிகவும் பெருமையாகப் பேணி வந்தனர். இக் காலத்தவர் அவ்வாறு பேணுமல் வீணே பிழைபட்டுள்ளனர். வாய் மொழி அளவில் ஆரவாரமாய்ப் பேசுகின்றனர். தமிழின் கலை நிலைகளையும் சுவைகளையும் கருதி நுகராமல் விருதா வழிகளில் இழிந்து வெறியராய் உழலுகின்றனர்.

எங்கள்தமிழ் எங்கள்குறள் என்றுஎதிரே
மாரடிப்பார்; இறையும் கல்லார்;
சங்கமுதல் பொங்கியுள்ள தமிழ்க்கலையைச்
சிறிதேனும் சார்ந்து காணர்;
தங்களிடம் இல்லாத பெருமைஎலாம்
இருப்பதாத் தருக்கு மீறி
எங்கணுமே இங்கிவர்கள் ஏறிநின்ருல்
இந்நாட்டுக்கு உய்தி யுண்டோ? (1)

மல்லல்வளம் பெருகிவரும் மாநிலத்தில்
மானிடர்கள் மாண்பு தோய்ந்து
நல்லவராய் ஓங்கியுயர் சான்ருேரை
நாளுமே நாடி நாடி
எல்லையிலா ஆவலுடன் எவ்வழியும்
தேடுகின்றேன்; யாண்டும் காணேன்;
புல்லறிவும் புலைநிலையும் போய்த்தொலைந்து
புனிதர்என்று புகுவார் அம்மா! (2)

இந்நாட்டு மக்கள் நிலைமையை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்துக் கவலையுற்றுள்ள இக் கவிகளைக் கருதியுணர் பவர் உள்ளம் உருகி மறுகுவர்.

ஆன்ருேர் என்றது அறிவு அடக்கம் ஒழுக்கம் அமைதி முதலிய நீர்மைகள் நிறைந்துள்ள

மேலோரை. இவருடைய அறிவுரைகள் எவர்க்கும் உயர் நலங்களை அருளி வரும், உண்மை அறிவு வளர வளர உயிர் ஒளிபெற்று உயர்ந்து வருகிறது.

---

40. இம்மைக் கிசையே இனியஅணி; எய்தநின்ற
அம்மைக் கறமே அரியஅணி;—செம்மைசேர்
கேண்மைக் கணிகிழமை கீழாமை; கேடிலா
ஆண்மைக் கடக்கம் அணி. (௬0)

இ-ள்

புகழே இம்மைக்கு அழகு; அறமே மறுமைக்கு அழகு; உரிமை குலையாமையே நட்புக்கு அழகு; அடக்கமேஆண்மைக்கு மேன்மையான அழகுஎன்க.

ஒருவன் பெயரை உலகத்தார் உவந்து புகழ்ந்து வருவது புகழ் எனவந்தது. பலரும் நலமுறும்படி அரிய இனிய செயல்களைச் செய்து வருபவனுக்கே சீரிய இசை இயல்பாய் நேரே சேர வருகிறது.

அறம் தருமம் புண்ணியம் நல்வினை என்று சொல்லி வருவன எல்லாம் ஒரு பொருளையே சுட்டி வருகின்றன. நெறி நியமங்களோடு ஒழுகி எவ்வுயிர்க்கும் இரங்கி எவ்வழியும் இதம் புரிந்து வருபவனே புண்ணியவாளுய்ப் பொலிந்து திகழ்கிருன்.

புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்கம்
என்னும் ஈது அருமறைப் பொருளே. (இராமாயணம்)

திருந்திய நல்லறச் செம்பொற் கற்பகம்
பொருந்திய பொருளொடு போகம் பூத்தலால்
வருந்தினும் அறத்திறம் மறத்தல் ஓம்பு மின்
கரும்பெனத் திரண்டதோட் காலவேற்கணிர்!
(சீவகசிந்தாமணி)

தருமம் ஆகிய கற்பகதரு அருளுகிற அற்புத இன்பங்களை ஈண்டு அறிந்து கொள்கின்றோம்.

பழகிய நண்பர்கள் பண்புரிமைகள் தோய்ந்து வரும் அளவே அன்புரிமையும் இன்ப நலன்களும் நன்கு அடைய நேர்கின்றனர்.

அடக்கத்தில் எல்லா மேன்மைகளும் அடங்கி யிருக்கின்றன. அதனால் அரிய பல நன்மைகள் பெருகி இருமையும் இன்பம் மருவி வருகின்றன.

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (குறள் 121)

மனிதனைத் தேவன் ஆக்கி அடக்கம் இன்ப உலகத்தில் ஏற்றியருளும; அடங்காமை எவரையும் இழிவாக்கி நரகதுயரத்தில் வீழ்த்தி விடும் என்னும் இது இங்கே நன்கு சிந்தித்துத் தெளிய வுரியது.

---

41. உற்ற உருவிற் குணர்வே அணியுழந்து
கற்ற கலைக்குக் கருத்தணியாம்—பெற்றெடுத்த
மக்கட் கணிசால்பு மாண்பமைந்த அன்பேநல்
ஒக்கற் கணியாகும் ஓர். (சுக)

இ-ள்

உணர்வே மனித உருவிற்கு அழகு; கருத்தே கற்ற கலைக்கு அழகு; சால்பே பெற்ற மக்களுக்கு அழகு; உள்ளன்பே ஒக்கலுக்கு அழகு என்க.

உணர்ச்சியும் கருத்தும் சால்பும் அன்பும் ஈண்டு உணர வந்துள்ளன. பான்மை படிந்து வரும்அளவே எவையும் எங்கும் மேன்மை அடைந்து வருகின்றன.

மனிதப் பிறப்பு பெறுதற்கு அரியது; அவ்வாறு பெற்றாலும் செவ்விய அறிவு செறிந்து வரவில்லை யானால் அது சிறந்து விளங்காது. மெய்யறிவு மேவி வந்த போதுதான் மெய்யான உயர் பிறப்பாய் அது மேன்மை மிகப் பெறுகின்றது.

மக்கள் உடம்பு பெறற்கரிது; பெற்றபின்
மக்கள் அறியும் அறிவரிது;—மக்கள்
அறிவறிந்தார் என்பார் அறத்தின் வழுவார்;
நெறிதலை நின்றொழுகு வார். (அறநெறி212)

அரிய மனித உருவை அடைந்தவர் அடைய வுரிய பெருமைகளை இதனால் அறிந்து கொள்கிறோம்.

தருமநெறி தழுவி ஒழுகி வருபவரே விழுமிய மேலோராய் விளங்கி எழுமையும் இன்பம் பெறு கின்றனர். புண்ணிய நீர்மையே எண்ணரிய மகிமை களை எங்கும் நன்கு அருளி வருகின்றது.

உண்மையாகத் தெளிந்த உணர்வுக்குப் பயன் தன்னுடைய நிலைமைகளை முன்னதாக உன்னி யுணர்ந்து தெளிந்து உய்தி பெறுவதேயாம்.

அன்னையின் வயிற்றில இருந்துநாம் இந்த
அரியமெய் அடைந்துவந் துள்ளோம்;
முன்னையூழ் வழியே யாவையும் முடிந்து
மூண்டுவந் துள்ளன; உயிர்கள்
தன்னையும் தன்னுள் இருந்தெலாம் இயக்கும்
தனிமுதல் தலைவனும் தனையும்
உன்னிநேர் அறியும் உணர்வொளி உளதேல்,
உய்தியாம்; இலைஎனில் இலையே.

பிறவித் துயரங்கள் நீங்கிப் பேரின்பம் பெற வுரிய வழிகளை இது தெளிவாக விளக்கியுளது. பொருள் நிலைகளையும் குறிப்புகளையும் கூர்ந்து ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஊழின் வழியே உயிரினங்கள் உலாவி வருகின்றன. மனிதன் முன்பு செய்து வந்த செயல்களில் இருந்தே வினை, விதி, ஊழ் என்பன விளைந்து வந்துள்ளன. நல்ல கருமங்கள் நயமான தருமங்களாய் வருதலால் இவற்றை யுடையவர்க்கு ஊழ் உரிமையாய் யாண்டும் இன்பங்களை ஊட்டி யருளுகிறது.

வினைப்பயன்களை நுகர்ந்து கொண்டு வாழும் பொழுதே ஊழின் பழமையை உணர்ந்து கொள்ள வேண்டும். உண்மையை உணர்வதே உயர் ஞானம்.

இந்த உடலை ஈன்றவள் தாய்; உயிரை ஈன்றவன் பரமன். தோன்றி மறைகிற உருவைத் தந்துள்ளமையால் முன் அறி தெய்வமாய் எண்ணி வணங்கும்படி அன்னை முன்னுற நின்றாள்.

கண் கண்ட கடவுளாக நேரே விளங்கியுள்ள தாயின் உள்ளம் உவந்து வரப் பணிந்து பேணி ஒழுகி வருகிற மகன் சிறந்த நன்றியறிவுடையனாய் உயர்ந்து திகழ்கிறான். கடமையைக் கருதிச் செய்பவன் கரும வீரனாகிறான்; ஆகவே அரிய உறுதி நலன்களை எளிதே அவன் அடைந்து கொள்கிறான்.

உயிர்க்கு உயிராய் நின்று இயக்கி வருகிற ஆண்டவனை உரிமையோடு எண்ணி வருபவன் நீண்ட புண்ணிய வானாய் நிலவி வருகின்றான்.

தத்துவஞானி, வித்தகயோகி, உத்தமசித்தன் என உயர்பெயர் பெற்றுள்ளவர் எல்லாரும் பரமான்மாவைப் பரிவுடன் கருதி ஒளிபெற்றுள்ள முத்தர்களே. ஆன்மா நேரே பரம அனுபவம் வாய்ந்த போது அதிசய ஆனந்தம் தோய்ந்து வருகிறது.

தன் உயிரை நோக்கி வருபவன் தனிப் பரமனையே நோக்கி மகிழ்கிறான். மனிதனது அறிவு தெளிந்து புனிதம் அடைந்து வர இனிய பரமனுய் உயர்ந்து இன்பம் மிகப் பெறுகின்றான்.

---

42. ஒற்றுக் கணிஓர்ந் துரைத்தல்; உறுபசியின்
துற்றுக் கணியூட்டி உண்ணுதல்;—பற்றுக்கு
நித்தனடிச் சார்பே நிலைத்தஅணி; நீள்ஒளியே
முத்துக் கணியாகும் முன். (சுஉ)

இ-ள்.

மருமங்களை நன்கு ஓர்ந்து உரைத்தல் ஒற்றர்க்கு அழகு; பிறர்க்கு ஊட்டி உண்ணுதல் உணவுக்கு அழகு; ஈசன் திருவடியே உரிமையாய்ப் பற்றுதற்கு அழகு; நல்ல ஒளியே முத்துக்கு அழகு என்க.

ஒற்றர் என்பவர் அரசுக்கு உரிய கருமத் துணைவர். நாட்டில் அங்கங்கே நிகழுகின்ற நிகழ்ச்சிகளை ஒற்றி அறிந்து உரிமையுடன் உறுதியாய் உரைப்பவர் ஆதலால் இவரைக் கண்போல் கருதி அரசர் எவ்வழியும் செவ்வையாப் போற்றி வருவர்.

ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண். (குறள், 581)

மன்னவனுக்குக் கண்போல் உள்ள ஒற்றர் எதையும் கூர்ந்து நோக்கி ஓர்ந்து வந்து தேர்ந்து தெளிவாய் உரைக்கும் அளவு உயர்ச்சியுறுகின்றார்.

துற்று = துய்க்கும் உணவு. அதிதிகளுக்கு முதலில் ஊட்டி அதன் பின்பு உண்ணுபவன் மதிநலம் வாய்ந்த புண்ணியவான் ஆகின்றான்.

முற்றுத்தும் துத்தினை நாளும் அறம்செய்து
பிற்றுத்துத் துத்துவர் சான்றவர்—அத்துத்து
முக்குற்றம் நீக்கி முடியும் அளவெல்லாம்
துக்கத்துள் நீக்கி விடும். (நாலடியார் 190)

விருந்து அருந்த உதவுபவர் பெருந்தகையாளராய் உயர்ந்து சிறந்த பதவிகளை அடைவர் என இது குறித்துளது. குறிப்பைக் கூர்ந்து உணர்க.

என்றும் நித்தியமாய் நிலைத்துள்ள இறைவனை அன்புடன் பற்றினால் துன்பப் பற்றுகள் நீங்கிப் போம்; இன்ப நிலைகள் எங்கும் ஓங்கி வரும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை என்றார் தேவர்.

---

43. மானம் அழியாமை மன்னுயிருக் கின்னணி
ஊனம் உறாமை உடற்கணி—போனதை
எண்ணி இரங்காமை ஏந்தற் கணிஎவர்க்கும்
புண்ணியமே நல்ல அணி. (சுங)

இ-ள்

நிலைபெற்ற உயிருக்கு அழகு மானம் அழியாமை; உடலுக்கு அழகு ஊனம் உறாமை; கழிந்து போனதை நினைந்து இரங்காமை சிறந்த அறிஞர்க்கு அழகு; புண்ணியமே யாவருக்கும் மேலான நல்ல அழகு என்க.

இழிவான பழிகள் யாதும் அணுகாமல் தன்னைப் பாதுகாத்து வருவது எதுவோ அதுவே மானமாம்.

உயிர் எல்லாருக்கும் பிரியமானது. அது உயர்வாய் ஒளிபெற்று வருவது மானத்தை மருவி வரும் அளவே யாம்; ஆகவே அதனை உயிரினும் மேலாக மேலோர் யாண்டும் பேணி வருகின்றனர்.

ஊனமே யான ஊனிடை இருக்கும்
உயிரினைத் துறந்தும்ஒண் பூணும்
மானமே புரப்பது அவனிமேல் எவர்க்கும்
வரிசையும் தோற்றமும் மரபும்;
ஞானமே யான திருவடி வுடையாய்!
ஞாலம் உள்ளளவும்நிற் றலினால்;
ஈனமே உயிருக்கு இயற்கை ஆதலினால்
என்றனன் வீமனுக்கு இளையோன். (பாரதம்)

மகா வீரனான **விசயன்** மானத்தின் மகிமையையும், அதனைப் போற்றி வந்துள்ள மாட்சியையும் கண்ணனிடம் இன்னவாறு நன்னயமாய்க் கூறியுள்ளான். அரிய உயிரினும் மானம் பெரியது.

தன் வாழ்வு தலைமையாய் ஒளிபெற்று வர வேண்டுமானால் பழி அவமானங்கள் படியாமல் விழுமிய நிலையில் மனிதன் ஒழுகி வர வேண்டும்.

---

44. தேட்டுக் கணிதீமை சேராமை; செய்தமைந்த
வீட்டுக் கணிநல்லோர் மேவுகையே;—கூட்டுகின்ற
மாலைக் கணிமன்னர் மார்பே; மறிதிரையே
வேலைக் கணியாகும் மேல். (௪௪)

இ-ள்.

தீமை சேராமல் தேடி வருவதே பொருளுக்கு அழகு: நல்லோர் நண்ணுவதே வீட்டுக்கு அழகு;

சிறந்த மலர்மாலை அணிவதற்கு மன்னர் மார்பே மாண்பமைந்த அழகு; மறிந்து கொழிக்கும் அலைகளே கடலுக்கு அழகு என்க.

தேட்டு = தேடிச் சேர்க்கும் செல்வம்.

தீய வழியில் வந்தது எவ்வழியும் தீமையே தரும் ஆதலால் அவ்வாறு பொருளை ஈட்டலாகாது. நல்லவர்கள் தொடர்பே யாண்டும் நல்லது; கெட்டவர் அணுகின் கேடேயாகும். பொல்லாதவர்களோடு யாண்டும் எவ்வகையிலும் யாதும் பழகலாகாது.

> கல்லார்க் கினனாய் ஒழுகலும், காழ்கொண்ட
> இல்லாளைக் கோலால் புடைத்தலும், — இல்லம்
> சிறியாரைக் கொண்டு புகலும்இம் மூன்றும்
> அறியாமை யால்வரும் கேடு. (திரிகடுகம் 3)

கல்லாத மூடரோடு கூடுதல், இல்லாளைச் சாடுதல், பொல்லாத புல்லரை வீட்டுக்கு அழைத்து வருதல் இவை கேட்டுக்கு அறிகுறிகளாம் என இது காட்டியுள்ளது. தனக்கு நன்மையும் சுகமும் அடைய விரும்புகின்றவன் புல்லருடன் பழகாமல் நல்ல சீலமுள்ளவர்களோடே என்றும்பழகி வரவேண்டும்.

---

45. செல்வர்க் கணிசெருக்குச் சேராமை தேர்ந்துநின்ற
கல்விக் கணியிழுக்கம் காணாமை—செல்வழிக்குச்
செய்ய அறமே சிறந்தஅணி சீர்மைக்கு
மெய்யே உயர்ந்த அணி. (சுரு)

இ-ள்.

செருக்கு உறாமை செல்வர்க்கு அழகு; இழுக்கு உறாமை கல்விக்கு அழகு; மறுமைக்கு அறமே அழகு; சீர்மைக்குச் சத்தியமே சிறந்த அழகு என்க.

சிறுமைக்கு அடையாளம் செருக்கு. செல்வரிடம் இது இயல்பாகச் சேரும். அவ்வாறு சேராமல் செய்து கொள்ளின் அவர்க்கு மிக்க நன்மையாம்.

இடையில் கோவணமும் இன்றி
இங்கு உதித்தோம்; அவ்வாறே
கடையினில் வெறுங்கை யோடும்
கழிகுவம்; நடுவில் சேரும்
உடைமையால் பெருமை என்னே?
ஊர்க்கெலாம் பொதி சுமக்கும்
விடைதருக் குற்ற தென்ன
வீண்செருக்கு உற்றாய் நெஞ்சே! (நீதி நூல்)

உள்ளம் செருக்கடைய நேர்ந்த போது இவ்வாறு சிந்தித்து அதனை எவ்வழியும் ஒழித்து ஒழுக வேண்டும்.

———

46. ஊருக் கணிபெரியோர் உண்மையே; ஊறிவரும்
நீருக் கணியினிய நீர்மையே; —பாருக்குச்
செல்வ வளங்கள் சிறந்தஅணி; செல்வர்க்கு
நல்லீகை யேஅணியாம் நன்கு. (சுசு)

இ-ள்.

பெரியோர் இருப்பதே ஊருக்கு அழகு; இனிய நீர்மையே நீருக்கு அழகு; செல்வ வளங்கள் செழித்திருப்பதே நாட்டுக்கு அழகு; நல்ல ஈகையே செல்வர்க்கு அழகு என்க.

ஊருக்கும் நீருக்கும் பாருக்கும் செல்வர்க்கும் உரிய உயர்வுகள் இங்கே தெரிய வந்தன. இனிய சுவையால் நீரும், அரிய பெரியோரால் ஊரும், செல்வ நிறைவுகளால் நிலமும், வள்ளன்மையால் செல்வமும் புகழும் சிறந்து திகழுகின்றன.

ஈகை அரிய பெரிய குணம். தான் முயன்று ஈட்டிய பொருளைப் பிறரும் அயின்று மகிழ்ந்து வர அருள் புரிந்து தருபவன் வள்ளல் என உயர்ந்து வருகிருன். ஈகை வழியே இசைகள் வருகின்றன.

வித்திய விதையிலிருந்து விளைவுகள் பெருகி வருதல் போல் ஈயும் பொருளிலிருந்து இன்ப வளங்கள் பொங்கி விளைந்து வருகின்றன.

ஈகை இனிய தருமமாய் மருவி வருகிறது. ஆகவே ஈகையாளன் புண்ணியவாளுய்ப் பொலிந்து திகழ்கிருன். இம்மையில் புகழும் மறுமையில் இன்பமும் அவனுக்கு நேரே உரிமைகளாகின்றன.

தான் உண்ணுவது ஒருவன் உடலோடு ஒழிகிறது. பிறர் உண்ண ஈவது புண்ணியமாய்ப்பெருகி அவன் உயிர்க்கு இன்பநலன்களை அருளிவருகிறது.

We enjoy thoroughly only the pleasure that we give. (*Dumas*)

நாம்பிறர்க்கு நல்குவதே நல்லவுயர் இன்பமா
நாம்உவந்து கொள்கின்ேறும் நன்கு.

The best way to do good to ourselves, is to do it to others. (*Seneca*)

நமக்குநாம் நன்மைசெய நல்வழி என்றும்
பிறர்க்கிதம் செய்வதே யாம்.

The riches we impart are the only wealth we shall always retain. (*M. Henry*)

பிறர்க்குநாம் தந்தபொருள் பேராத் திருவாய்
உறப்பெறு கின்ேறும் உயர்ந்து.

இவை ஈண்டு ஊன்றி உணர வுரியன.

ஈகையைக் குறித்து அயல் நாட்டாரும் எவ்வாறு எண்ணி யுள்ளனர்? என்பதை இவற்ருல் நாம் ஓர்ந்து உணர்ந்து தேர்ந்து கொள்கிரேம்.

தன் உயிர்க்கு நன்மையை நாடி வருபவன் எவ்வுயிர்க்கும்இதம்செய் துவரவேண்டும். பிறஉயிர்கள் இன்புற உதவி புரிந்து வருகிற மனிதனைத் தேவர்களும் ஆவலோடு நோக்கி உவந்து வருகின்றனர்.

பிறர்க்குச் செய்கிற இதங்கள் எல்லாம் புண்ணியங்களாய்ப் பொலிந்து வருதலால் அந்த உபகாரி எண்ணரிய மேன்மைகளையும் இன்ப நலன்களையும் எளிதே அடைந்து கொள்கின்ருன்.

---

47. காலம் கருதல் கருமத்துக் கானஅணி;
சீலம் புரிதலுயர் சீவனணி; — ஞாலம்
அறிந்தொழுகல் வாழ்வுக் கரியஅணி நேர்மை
செறிந்தொழுகல் சீர்மைக் கணி. (சுஎ)

இ-ள்.

காலம் கருதி முயல்வதே கருமத்துக்கு அழகு; சீலம் படிந்து ஒழுகுவதே சீவனுக்கு அழகு; உலகம் அறிந்து நடப்பதே வாழ்வுக்கு அழகு; நெஞ்சம் நேர்மையாய் ஒழுகலே சீரிய மேன்மைக்கு அழகுஎன்க.

மனிதன் கருதிச் செய்கிற காரியங்கள் இனிது நிறைவேறி வருதற்கு உரிய பருவத்தை ஓர்ந்து உணர்ந்து உரிமையாக் கொள்ள வேண்டும்.

பருவத்தே பயிர்செய்! என்ருர் ஔவையார்.

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை யார்க்கும் கயிறு. (குறள் 482)

காலத்தோடு பொருந்தி முயன்று வரின் செல்வம் நிறைந்துவரும் எனத் தேவர் இவ்வாறு கூறியுள்ளார். உரிய பருவம் பெரிய திரு.

காலம் அறிந்தாங்கு இடம்அறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து விளைவறிந்து — மேலும்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
ஆள்வினை ஆளப் படும். (நீதிநெறி 52)

கருமங்களைச் செய்ய உரிய மருமங்களை இது நன்கு விளக்கியுளது. வினையாளன் முதலில் உரிமையோடு கருத வேண்டியது காலமே என்பதை இதில் தலைமையான நிலைமையால் அறிந்து கொள்கிறோம்.

நெறிமுறையே ஒழுகி வருகிற ஒழுக்கம் சீவனைத் தேவன் ஆக்கி அருளுகிறது. ஆகவே சீலம் சீவனுக்கு அணி என வந்தது. நேர்மை சீர்மையை அருளுகிறது.

———

48. எழுத்துக் கணிசொல்லே இன்சொற் கணிதான்
வழுத்தும் பொருளின் வளமே—அழுத்தும்
பொருளுக் கணியாப்பே போதமுயர் யாப்பிற்கு
அருளும் அணியே அணி. (சு அ)

இ-ள்

எழுத்துக்கு அழகு சொல்லே; சொல்லுக்கு அழகு பொருளே; பொருளுக்கு அழகு யாப்பே; யாப்புக்கு அழகு அணியே என்க,

கலை நிலைகளுக்கு மூலமாயுள்ள ஐந்து வகைகள் இங்கே தொகையாய் அறிய வந்துள்ளன. மனித

னுடைய எண்ணங்களை மொழிகளால் வெளியிடு கின்றான். அந்த மொழிக்கு முதல் உறுப்பாய் நன்கு அமைந்துள்ளது இங்கு எழுத்து என வந்தது.

அ என்பது எழுத்து: ஆ என்பது சொல்.

ஆவின்பால் ஆன்ற அமுதாய் உயிர்களுக்குப்
பூவின்பால் ஊட்டும் புதுமையால்—நாவின்பால்
போற்றி அதன்குலத்தைப் புத்தேள் இனத்தோடு
சாற்றி வருமிவ் வுலகு.

இதில் பொருளும் யாப்பும் அணியும் அமைந் துள்ளன. உண்மை நிலைகளை நுண்மையாய் ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும். ஆழ்ந்து அறியும் அளவே அரிய பொருள்கள் எளிதே தெரிய வரு கின்றன. கருதி வருவது கருத்தாய் விளைகிறது.

எழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரம்என் றிசைத்த
வழுத்து பஞ்சதி காரமும் மாசறுத்து அறியேன்;
பழுத்த பாவலர் பாதபைங் கமலம்என் முடிமேல்
அழுத்தும் அஞ்சலி ஆசறக் கற்றதே அறியேன்.

(குருகை)

ஐந்து வகை இலக்கணங்களின் அருமைகளை யும் அவற்றை அறிந்து தெளிந்த புலவர்களின் மகி மைகளையும் இதனால் அறிந்து கொள்கின்றோம்.

கல்வியறிவைச் சால்புறப் பெறுதற்கு மூல சாதனமாயுள்ள இந்த ஐவகை இயல்களையும் கற்று மெய்யறிவு பெற்று உயிர்க்கு உய்தி பெற வேண் டும். அவ்வாறு பெறுமல் வைய மையல்களில் அழுந்திக் கல்விச் செருக்கோடு களித்துத் திரியின்

பிறவிப் பேற்றை இழந்த பேதைகளாய் அவர் இழிக்கப் படுவர். அகந்தை மமதை இறுமாப்பு என்பன அவலக்கேடுகளையே விளைத்துவிடுகின்றன

எழுத்துச் சொற்பொருள் யாப்புஅலங்.காரம்என்று
இவற்றைக் கற்று இறுமாப்புறும் பேய்சில.
(மோகவதைப்பரணி)

உயிர்க்கு உரிய பயனை அடையாதவர் எவ்வாறு கடையரா யிழிவுறுகின்றனர் என்பதை இதனால் அறிந்து கொள்கிறோம். உயிர் துயருறாமல் உய்தியைச் செய்து கொள்ளுவதே மெய்யான உணர்வின் மேலான உயர் பயனும்.

---

49. உடலுக் கணிநீர் உயிர்க்கணி நீர்மை
அடலுக் கணிஐம் பொறியே—மிடலுக்குச்
சிந்தை அடக்கலணி சித்தபரி சுத்தமே
அந்தமிலான் எய்த அணி. (சூகூ)

இ-ள்.

குளிர்ந்த நீரே உடலுக்கு அழகு; சிறந்த நீர்மையே உயிருக்கு அழகு; ஐம்பொறிகளை வெல்லுதலே அடலாண்மைக்கு அழகு; சிந்தையை அடக்குதலே வீரத் திறலுக்கு அழகு; சித்த சுத்தியே ஈசனை அடைய வுரிய வித்தக அழகு என்க.

நீரால் உடம்பு தூய்மையாம்; தண்ணளியால் உயிர் ஒளிமிகப் பெறும்; புலன் அடக்கத்தால் அதிசய ஆற்றல் உண்டாம்; உள்ளம் அடங்கின் உலகம் அவன்பால் அடங்கும்; இதயத் தூய்மை இறைவனுக்கு இனிய நிலையமாம். மனிதனது மனம் புனிதமானால் அவன் பரமனது இனம் ஆகின்றான்.

ஆண்டவனை நேரே அடைய மூண்டு முயன்ற மகான்கள் எல்லாரும் புலன்களை அடக்கி உள்ளத்தை ஒடுக்கி உயிரை உரிமையோடு ஓர்ந்து நோக்கியே உறுதி பூண்டு உய்தி பெற்றுள்ளனர்.

சினம்இறக்கக் கற்றாலும் சித்திஎல்லாம் பெற்றாலும்
மனம்இறக்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே!

படிப்பற்றுக் கேள்விஅற்றுப் பற்றுஅற்றுச் சிந்தைத்
துடிப்பற்றார்க்கு அன்றோ சுகம்காண் பராபரமே!
(தாயுமானவர்)

பூதங்கள் அற்றுப் பொறிஅற்றுச்
சார்ஐம் புலன்கள் அற்றுப்
பேதம் குணம்அற்றுப் பேராசை
தான் அற்றுப் பின்முன் அற்றுக்
காதங் கரணங் களுமற்ற
ஆனந்தக் காட்சியிலே
ஏதம் களைந்திருப் பேன்இறை
வாகச்சி ஏகம்பனே. (பட்டினத்தார்)

ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்?
(பத்திரகிரியார்)

படிப்படக்கிக் கேள்விஎலாம் பற்றறவிட் டடக்கிப்
பார்த்திடலும் அடக்கியுறும் பரிசமெலாம் அடக்கித்
தடிப்புறும்ஊண் சுவைஅடக்கிக் கந்தமெலாம் அடக்கிச்
சாதிமதம் சமயமெனும் சழக்கையும்விட் டடக்கி
மடிப்படக்கி நின்றாலும் நில்லேனென் எனவே
வனக்குரங்கும் வியப்பஎன்றன் மனக்குரங்குகுதித்த
துடிப்படக்கி ஆட்கொண்ட துரையேஎன் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே!
(இராமலிங்கர்)

உலகப் புலைகளில் உழலாமல் புலன்களை அடக்கி உள்ளம் தூயராய மேலோரே பரமானந்த வெள்ளத்தில் தோய நேர்ந்துள்ளனர். அந்த உண்மையை இங்கே ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம்.

---

50. ஓர்தற் கணிகம்பன் ஒண்கவியே; உள்ளுணர்ந்து
தேர்தற் கணிநம் திருக்குறளே;—சேர்தற்குச்
செவ்வேள் திருவடியே செய்யஅணி; சேர்ந்தவர்க்கு
எவ்வேளையும்அணி யே. (ருo)

இ-ள்

கம்பர் பெருமான் இன்பக் கவியே ஓர்ந்து உணர்தற்கு அழகு; திருவள்ளுவ தேவரின் திருக்குறளே தேர்ந்து தெளிதற்கு அழகு; செவ்வேள் அமலன் திருவடியே சீவகோடிகள் சேர்ந்து உய்தற்கு அழகு; அவ்வாறு சேர்ந்த முத்தர்களுக்கு எவ்வேளையும் அரியஇன்பமும் பெரிய அழகும் ஆம்.

ஏகாரங்கள் தெளிவும் தேற்றமும் தெரியநின்றன.

அறிவும் ஞானமும் ஆன்ம இன்பங்களும் இங்கே உரிமையாய் நன்கு உணர வந்துள்ளன.

கம்பரது காவியம் அறிவுக்கு அரிய பெரிய ஓர் இன்ப நிலையம். அதனை இனிய சுவர்க்கலோகம் என்று சொல்லலாம்; அங்கே எல்லா இந்திர போகங்களையும் எவ்வழியும் செவ்வையா அனுபவிக்கலாம். உள்ளம் உவகையுற, உணர்வு ஒளிபெற, உயிர் உயர்ந்து உவந்து திகழச் சிறந்த இன்ப நலன்கள் அதில் எங்கணும் நன்கு நிறைந்துள்ளன.

நித்திய சுகங்கள் நிறைந்துள்ள சத்திய உலகம் எனத் திருக்குறள் எங்கும் தெய்வ ஒளிகளை வீசி யுளது. அங்கே ஆன்மானந்தமான அதிசய இன்பங்களை மதிநலம் கனியத் துய்த்து மகிழலாம்.

தமிழ் மொழியில் தோன்றியுள்ள இந்தஇரண்டு நூல்களைப் போல் சால்புடைய மேலான நூல்களை வேறு எந்த மொழியும் பெறவில்லை. உலக மொழிகள் யாவும் இந்தத் தெய்வீகமான கலையின் திலக ஒளிகளை நோக்கித் திசைகள் தோறும் நசைகள் மீதூர்ந்து இசைகள் பாடித் தொழுது வருகின்றன.

இந்த உண்மையை இந் நாட்டு மக்கள் எண்ணி உணராமல் கண்மூடிக் கவிழ்ந்து மண் மூடிகளாய் மறுகி யுழலுகின்றனர். மடமையிருள் மண்டிக் கடமையை உணராமல் யாதும் கருதிக் காணமல் களித்திருப்பது கழிபேரிழிவாய்ப் பெருகி யுளது.

மையல் மயக்கங்களில் மருண்டு வெய்ய பேய்களாய் விரிந்து உழந்தும் தம்மையும் மனிதர் என அவர் தருக்கிக் களித்துப் பிலுக்கி வருவது இயற்கை விநோதமாய்க் கலித்து வருகிறது.

அறியாமை இருள்.

வாய்மொழியாய்த் தமிழ்மொழியை வளமையாய்ப்
பேசுகின்ருர்; வனப்பு வாய்ந்த
தாய்மொழியின் தகைமைகளைத் தனிக்கலையின்
நிலைமைகளைத் தருமம் நீதி
தோய்மொழியாய் எவ்வழியும் சுவைகளே
சுரந்தின்பம் தோய்ந்து தெய்வம்
ஆய்மொழியா யுள்ளதனைச் சரியாக
அறியாமை அவமே அந்தோ! (1)

அரிய சோதி

திருக்குறளே! நீதோன்றிச் செந்தமிழில்
செழுஞ்சோதி எங்கும் வீசி
அருக்கன்என நிலவியிந்த அகிலவுல
கங்களுக்கும் அறிவு காட்டிப்
பெருக்கமுடன் நின்றுள்ளாய்! தமிழர்எனப்
பிறந்தவர்உன் பெருமை ஓர்ந்தே
உருக்கமுடன் ஒழுகிஒளி பெறும்நாளே
உயர்நாளாம்; உறுநாள் என்றோ? (2)

தெய்வ நிதி.

தேவர்அருள் அமுதான திருக்குறளாம்
தெய்வநிதி எந்த வீட்டில்
மேவியுளது, அவ்வீடே மேலான
மெய்வீடாம்; மேவல் இன்றேல்
பாவஇருள் படர்ந்தறிவு பாழான
பழிவீடாம்; பழிநேராமல்
ஆவலுடன் பயின்றுயர்வார் அமரர்என
இலங்குவார் அறிவு கூர்ந்தே. (3)

கதியின்பம்.

வள்ளுவரை வான்குறளை வாயளவில்
பேசுகின்றார்; மக்கள்முன்பு
தெள்ளுரைகள் பலகூறித் தெளிந்தவர்போல்
நடிக்கின்றார்; சிந்தை கூர்ந்தே
உள்ளுணர்வை, உறுபொருளை, உயர்சுவையை,
உண்மையாய் ஓர்ந்து வாழ்ந்து
கள்ளமற ஒழுகுவார் எவர்அவரே
கதியின்பம் காண்கின்றாரே. (4)

இந் நாட்டின் சாபம்.

எந்நாட்டில் எம்மொழியில் திருக்குறள்போல்
ஒருநூலை எய்தி இன்பம்
அந்நாட்டில் உள்ளவர்கள் அடைந்துள்ளார்?
யாண்டுமே இல்லை யன்றே!
இந்நாட்டில் தம்முடைய தாய்மொழியின்
எழில்ஒளியை இனிது நோக்கித்
தந்நாட்டம் தெளியாமல் தாழ்ந்துள்ளார்
தமிழ்நாட்டின் சாபம் என்னே! (5)

இழி வழி.

பெறலரிய பெரும்பேருப் பெற்றுள்ள
இப்பிறப்பின் பெருமை ஓரார்;
உறலுரிய அறநெறியே உயிர்க்குறுதி
என அதனை உவந்து கொள்ளார்;
அறலுறுபுன் குமிழின்ன அழிந்தொழியும்
உடலையே அவாவி நாளும்
இறலுரிய வழிகளிலே இழிந்துகழிந்
தொழிகின்றார் என்னே அம்மா! (6)

விரைந்து தெளிக.

மாடாடாய் வனவிலங்காய்க் கழிந்திழிந்து
போகாமல் மனிதன் என்னும்
பீடான பிறவியைநீ பெற்றிங்கே
வந்துள்ளாய்! பிறப்பின் பேற்றை
நாடாமல், உயிர்க்குறுதி நண்ணாமல்,
நாளுமே பாழாய் வீழ
வீடாமல் விளிகின்றாய்! விளிவுநிலை
தெளிகநீ விரைந்து தேர்ந்தே. (7)

பெற்றது என்னே?

பிறந்துவந்த நாள்தொடங்கி இன்றுவரை
வாழ்ந்துள்ளாய்! பெற்றது என்னே?
நிறைந்தவுண வுண்டுகளித் துடல்வளர்த்து
நெடிதுநீ நெளிந்து நின்றாய்!
சிறந்தவுயிர்க்கு ஏதேனும் ஒருநலனைத்
தெளிந்துநீ செய்த துண்டோ?
மறந்தழைந்து வரவாழ்ந்து மண்ணாகி
மடிந்தொழிதல் மதிகே டந்தோ! (8)

உற்றதை உணர்க

நாள்கழிந்து போந்தோறும் நமன்உன்மேல்
வருகின்றான்; நாளும் நாளும்
மாள்வதே தொழிலாகி மாண்டுகழிந்
தொழிகின்ற மருமம் தன்னை
ஆளென நீ வந்திருந்தும் அறியாமல்
அழிவுறுதல் அவல மன்றோ?
நீள நினைந் துணர்ந்தின்றே நின்உயிர்க்கு
நிலையின்பம் நிறைக நேர்ந்தே! (9)

உன் உள்ளே பார்

உன்னுள்ளே உறைந்திருக்கும் உயர்பரனை
உணர்ந்துள்ளே உருகி நாளும்
தன்னுள்ளே நோக்கிவரின் தனிப்பரமா
னந்தநிலை தழைத்துள் ஓங்கி
மின்னுள்ளே பிறந்துவரும் ஒளிஎனவே
வெளியாகி மேலாம் இன்பம்
நின்னுள்ளே நிறைந்துவரும் நிலைதெரிந்து
நெறிதெளிந்து நேர்க நின்றே. (10)

இக் கவிகளின் பொருள் நிலைகளைக் கருதி யுணர்ந்து உறுதி யுண்மைகளை ஓர்ந்து தேர்ந்து தெளிந்து கொள்ள வேண்டும். அரிய அறிவுடைய மனிதப் பிறவியை அடைந்து வந்தும் உரிய பயனை அடையாமல் ஒழிந்து போவது பெரிய பழியாம்.

செவ்வேள் = முருகக் கடவுள். செந்நிறத் திருவுருவும் என்றும் மாருத இளமை எழிலும் இணை ஏதுமில்லாத அதிசய அழகும் மருவி அமரர் முதல் யாவரும் விழைந்து வியந்து உவந்து தொழுது துதி செய்து வரத் தோன்றியுள்ளமையால் செவ்வேள் என்னும் திருநாமம் இப் பெருமானுக்கு எவ்வழியும் தனி உரிமையாய் இனிது ஒளி செய்துளது.

அருவும் ஆகுவன் உருவமும் ஆகுவன் அருவும்
உருவும் இல்லதோர் தன்மையும் ஆகுவன் ஊழின்
கருமம் ஆகுவன் நிமித்தமும் ஆகுவன் கண்டாய்!
பரமன் ஆடலை யாவரே பகர்ந்திடற் பாலார்? (1)

வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சிக்கும் விரிந்த
போதக் காட்சிக்கும் காணலன்; புதியரில் புதியன்;
மூதக் கார்க்குமூ தக்கவன்; முடிவிற்கு முடிவாய்
ஆதிக்கு ஆதியாய் உயிர்க்குயி ராய்நின்ற அமலன்.
(கந்த புராணம்)

இத்தகைய அமல மூர்த்தியைக் கருதி யுருகி வருவார் பிறவித் துயரங்கள் நீங்கிப் பேரின்ப நிலையைப் பெறுகின்ருர். உள்ளம் உருகி வரும் அளவு பேரின்ப வெள்ளம் அங்கே பெருகி வருகிறது.

---

51. தன்னை அறிவதே தத்துவ ஞானஅணி;
பின்னை அறிவது பித்தணியே;—முன்னம்
தனையறிய நேரின் தரணியி லுள்ள
அனைவர்க் கவனே அணி. (ருக)

இ-ள்

தனது ஆன்ம நிலையை அறிவதே மெய்யான ஞான அழகு; வேறு தெரிவதெல்லாம் மாறான ஊன அழகு; தன்னை ஒருவன் உணர நேரின் இந்த உலகில் உள்ள எவர்க்கும் அவனே தலைமை அழகனாய் நிலவி நிற்பன் என்க.

உரிமையாய் உணர வுரிய உண்மைப் பொருள் தெரிய வந்தது. எதை உணர்ந்தால் எல்லாம் உணர்ந்ததாமோ அதை உணர்க. அவ் வுணர்வு துக்கத்தை நீக்கிச் சுகத்தை ஆக்கி யருளும்.

உயிரும் உடலும் கூடி உலாவி வருகிற உருவங்களுள் மனித இனம் மதிநலம் உடையதாய் மருவி யுளது. அந்த மதி கூர்மை வாய்ந்தது எனினும் தன்னைக் கூர்ந்து அறிவதில்லை. இந்த அறியாமையே எல்லாத் துயரங்களுக்கும் மூல காரணமாய் மூண்டு நிற்கிறது. தன்னை மறந்து தாழ்ந்ததனாலேயே இன்னல் இழிவுகள் எங்கும் தொடர்ந்து சூழ்ந்துள்ளன.

தோலால் செய்த பாவைகளை உள்ளே இருந்து ஒருவன் ஆட்டுவது போல் இந்த உடல் இயங்கி வருகிறது. அகத்தே அமர்ந்து இயக்குகிறவன் யார்? உயிர் என ஓரளவு உரையாடி வரினும் அதன் உண்மை நிலையை உணர்ந்து தெளியாமல் மாய மயல்களில் அழுந்தி யாவரும் மறுகி யுழல் கின்றனர்.

இந்தச் சீவான்மா அந்தப் பரமான்மாவிலிருந்தே பிரிந்து வந்துள்ளது. ஆதியும் அந்தமும் இல்லாத அந்த அரிய பரஞ்சோதியினின்று வெளியே சிதறியுள்ள ஒரு சிறிய பொறியே உயிர் எனப் பெயர் பெற்றுள்ளது. பேரொளிப் பிழம்பின் ஓர் ஒளித் துளி என இதனை உணர்ந்து தெளிவதே மெய்யுணர்வாம். இந்த உணர்வொளியின் முன் வெய்ய மையல்கள் யாவும் விலகி ஒழிகின்றன. தெய்வநிலை நேரே தெளிவாய்த் தெரிய வருகிறது.

இவ்வாறு உய்த்து உணர்ந்தவரே தத்துவ ஞானிகள் எனத் தலை சிறந்து நிலையுயர்ந்து நின்றுள்ளனர். உண்மையறிவு உயர் பேரின்பமாகிறது.

இந்த மெய்ஞ்ஞான ஒளி தோன்றிய பொழுது அஞ்ஞான இருள் அடியோடு ஒழிந்து போகிறது. துன்பங்கள் யாவும் தொலைந்து ஒழிகின்றன; ஒழியவே இன்ப மயமான பரமனோடு இனிது கலந்து உயிர் பரமானந்தமாய் விளங்குகிறது,

உன்னை முன்னம் உணர்க! உணரினே,
பின்னை இன்பம் பெருகும்; பிறவியின்
இன்னல் யாவும் இரியும்; இறைவனும்
துன்னி நின்று துலங்குவன் சோதியாய். (1)

சோதி யான பரமன் ஒளிஎன
ஓதி உன்னை உணர்ந்து தெளியினே,
பேதி யாது பிறவிகள்; பின்புநீ
ஆதி யாவை; அதிசய இன்பமே. (2)

இவை இங்கே சிந்தித்துத் தெரியவுரியன. பொருள்

நிலைகளைக் கூர்ந்து உணர்ந்து உண்மையை ஓர்ந்து தேர்ந்து தெளிந்து கொள்ள வேண்டும்.

தன்னை அறியாமல் மறந்து போனதினாலேயே பிறந்து பிறந்து மனிதன் பெருந்துயரங்களை அடைய நேர்ந்தான். எதை எதையோ அறிய வேண்டும் என்று ஆவலாய் வெறிகொண்டு ஓடி உழலுகின்றான்; அவை யாவும் அவலப் புலைகளே.

தனது உண்மையை உணர்ந்து தன் உயிரைத் தனக்கு உரிமையாகப் பெற்றவனே பிறவித் துயரங்கள் முற்றும் அற்றுப் பேரின்ப நிலையைப் பெறுகின்றான். தேவர் முதல் யாவரும் அப் பேருளனை வியந்து புகழ்ந்து உவந்து போற்றுகின்றனர்.

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும். (குறள் 268)

இந்த அருமைத் திருக்குறளின் பொருளைக் கருதியுணர்ந்து நாளும் சிந்தித்து வர வேண்டும். உன் உயிரை நீ உரிமையாகப் பெற்றால் உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் உன்னைப் பெருமையாகத் துதித்துத் தொழுது வரும் என்ற இதில் எவ்வளவு மருமங்கள் மருவியுள்ளன! ஓர்ந்து கருதி உணருக.

உடலுள் உறைந்துள்ள உயிர் இயல்பாகவே அறிவும் இன்பமும் உடையது. எல்லாவற்றையும் அறிய வல்லது. எங்கும் சுக வடிவமானது; எவ்வழியும் விழுமிய மகிமையது; என்றும் நிலையானது.

புனிதமான இந்த ஆன்மாவே தனது இனிய நிலை என்று மனிதன் தெளிவாய் உணர்வதில்லை.

உணர வேண்டியதை உரிமையோடு உணராமல் ஊனமாயுழல்வது ஞான சூனியமாய் வளர்ந்துளது.

மாயத் தோற்றமாய் மருவியுள்ள உடல் பொருள் மனைவி மக்கள் முதலிய பொய்யுறவுகளை யே மெய்யென்று நம்பி வையமையல்களில் அழுந்தி வருதலால் வெய்ய துயரங்களையே எவ்வழியும் அடைந்து வேதனைகள் படிந்து உழல்கின்றான்.

பிறப்பும் இருப்பும் சூழல்களும் அவனை மறப் பில் ஆழ்த்தி மயக்கி வருகின்றன. மறப்பு நீங்கிய பொழுதுதான் பிறப்பின் மெய்யான பயனை அவன் பெற நேர்கின்றான். தன்னை உண்மையாக அறிய நேர்ந்த அன்றே பெரிய மகானாய்ப் பேரின்ப நிலை யைப் பெற்றவனாகின்றான். அறியாத வரையும் வெறியனாய் அலைந்து வீணே விரிந்து திரிகின்றான்.

எல்லாம் அறியும் அறிவு, தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபம் அங்கு இல்லை;
எல்லாம் அறிந்த அறிவினை நான்என்னில்
எல்லாம் அறிந்த இறைஎனல் ஆமே.

(திருமந்திரம் 2596)

கருமூலம் கட்டறுத்த திருமூலர் இவ்வாறு தெளிந்து மொழிந்துள்ளார். வெளியே எல்லாவற் றையும் அறிய வல்ல அறிவு ஆன்மாவாகிய தன்னை உள்ளே நோக்கி உரிமையுடன் உணரவில்லையானால் அது பயன் அற்ற பாழ் அறிவே என்று எள்ளி இகழ்ந்துள்ளமை இங்கே உள்ளியுணர வுரியது.

வானத்தின் நீளம், சூரிய மண்டலத்தின் எல்லை, சந்திர மண்டலத்தின் அளவு, விண் மீன்களின்

விளைவு முதலியவற்றை அறிந்ததுபோல் பன்னிப் பன்னிப் பாராட்டிப் பேசி வருவதால் உனக்கு என்ன பலன்? உன்னுடைய உண்மை நிலையை முன்னதாக உணர். அவ்வாறு உணரின் தன்னுயிரைத் தான் அறப் பெற்றவனாய் மன் உயிர் எல்லாம் தொழுது வர, வானமும் வையமும் வணங்கி வர விழுமிய பேரின்ப நிலையில் விளங்கி மிளிர்வாய்.

உன்னை நீ அறிந்தால் எல்லாம் அறிந்த இறை எனல் ஆமே என்னும் இந்த மந்திரமொழி ஈண்டு ஆழ்ந்து சிந்தனை செய்து தெளிய வுரியது.

உன்னை நீ முன்னம் உணர்ந்தனை என்றால்
உயர்வற உயர்ந்துள ஒருவன்
தன்னையும் உணர்ந்தாய்! தத்துவம் தெளிந்தாய்!
தமர்மனை மக்கள்என்று அயலே
மன்னிய உறவின் வகைதொகை அறிந்தாய்!
மறிதிரைக் கடல்என வளைந்த
இன்னல்வெம் பிறவி இடரையும் கடந்தாய்!
இன்பமே இயல்புடன் இருந்தாய்!

இந்தக் கவியில் கனிந்துள்ள பொருள் நலன்களையும் குறிப்புகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும். உடலில் உள்ள சீவ ஒளியை உண்மையாக உணர நேரின் அது தேவ ஒளியாய்த் திகழ்ந்து வருவதைத் தெளிவாகத் தெளிந்து கொள்ளலாம்.

உயிர் துயர் நீங்கி உய்யும் வகையைச் செய்பவனே மெய்யறிவாளனாகிறான். அவன் பிறப்பே பெரு மகிமையுடையது; பேரின்ப வீட்டுக்கு அவனே உரியவன் ஆகிறான். ஆவதை ஆய்ந்து தெளிக.

52\. பேசாத மோனம் பெரிய அணி; யாரையும்
ஏசா தமைதல் இனிய அணி; — மாசேதும்
உள்ளம் உருமை உயிரணி; யாருக்கும்
கள்ளம் உருமை அணி. (ருஉ)

இ-ள்

மவுனம் மனிதனுக்கு அதிசய அழகு; எவரையும் இகழ்ந்து பேசாமல் இருப்பது வாய்க்கு உயர்ந்த அழகு; உள்ளத்தில் மாசு யாதும் மருவாமல் பாதுகாப்பது உயிர்க்கு இனிய அழகு; கள்ளம் இல்லாமை எல்லார்க்கும் நல்ல அழகு என்க.

சொல்லும் செயலும் மனித வாழ்வில் இயல்பா இயங்கி வருகின்றன. உலக நிலையில் பலன்கள் விளைந்து வர இவை கிளர்ந்துவரின் நலமாய்ச் சிறந்து வருகின்றன. பயன் இல்லையேல் வீண்சொல் வீண் செயல் என வெறுத்து இகழப் படுகின்றன.

ஆன்மானந்தத்தை அடைய நேர்ந்த ஞானிகளிடம் பேச்சும் செயலும் ஒடுங்கி விடுகின்றன.

மோனம் என்பது ஞான வரம்பு. (ஔவையார்)

ஞானத்துக்கும் மோனத்துக்கும் உள்ள உறவுரிமைகளை இதனல் உணர்ந்து கொள்கிருேம். பேச நேர்ந்தால் பிழை ஏதும் நேராமல் பேசி வருவது நலம். பிறரை இகழ்ந்து பேச நேர்ந்தவன் தனக்கு உள்ளேயே எள்ளி இகழப்படுகின்ருன்.

ஒருவன் இசை பெற்று வர வேண்டுமானல் எவரையும் யாதும் அவன் வசை கூறலாகாது. வார்த்தை நலமாய் வரின் மனிதன் நல்லவனய்

உயர்கிருன். நல்ல சொல் நலம்பல தருதலால் அவ்வுரை உயிர்க்கு உயரமிர்தம் ஆகிறது.

தன் மனத்தை மாசு படியாமல் எவன் பாது காத்து வருகிருனே அவன் ஈசன் அருளை எளிதே அடைந்து கொள்கிருன். உள்ளம் தூய்மைதோய்ந்து வர உயிர் பேரின்ப வெள்ளம் தோய்ந்து வருகிறது.

மனமும் வாக்கும் காயமும் மாசுருமல் பேணி வரின் அரிய மகிமைகள் காண வருகின்றன. உயர்ந்த குலமகனுக்குச் சிறந்த அடையாளம் எவரையும் இகழ்ந்து பேசாமையே. பிறரை இகழ்பவன் இழிமகனுய் அழிவுறுகின்ருன். மானம் மரியாதைகள் இன்றித் துடுக்காய்ப் பேசுபவர் ஈன மக்களாய் இழிவே அடைகின்றனர். மோனத்தை முதலில் குறித்தது ஏன்? எனின், ஞானத்தின் நிலையமாயுள்ள அதன் தானத்தையும் தலைமையையும் கருதி என்க. ஆன்ம ஞானம் தோய்ந்து வர நேரின் அமைதி அங்கே மேன்மையாய் வாய்ந்து வருகிறது.

உலக வாழ்க்கை பேச்சு வழக்கால் நடந்து வருகிறது; பரவாழ்க்கை பேசாத மோன நிலையில் பிறந்துளது. இருவகையும் கருதி அறிய வுரியன.

தேனைக் காணும் வரையும் வண்டு ஒலமிட்டு உலாவி அலைகிறது. கண்டால் ஒலி யாவும் அடங்கி அதனை உண்டு களித்துத் திளைத்துக் கிடக்கிறது.

அமுத மயமான ஆன்மாவை அறிய நேராதவர் அவல வாழ்வில் பல பல பேசி ஆரவாரமாய்ப்

பிதற்றித் திரிகின்றனர். அறிய நேர்ந்தவர் பொறி புலன்கள் யாவும் அடங்கி நெறி நியமங்களுடன் அமைதியா ஆன்மானந்தத்தை அனுபவிக்கின்றனர்.

உள்ளம் உரை செயல்
உள்ள இம் மூன்றையும்
உள்ளிக் கெடுத்து இறை
உள்ளில் ஒடுங்கே. (திருவாய்மொழி)

நினைவு சொல் செயல்கள் எல்லாம் அடங்கி மோனமாய்ப் பகவானிடம் ஒடுங்கி **நம்மாழ்வார்** பரமானந்தத்தை அனுபவித்துள்ளார். அந்த உண்மையை உலகம் அறிய இவ்வாறு உணர்த்தி யுள்ளார்.

ஞான யோகிகளின் மேன்மையான பான்மையாய் மோனம் அமைந்துள்ளமையால் அதன் அதிசய மகிமைகளை ஈங்கு ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம்.

மோனம்கை வந்தோர்க்கு முத்தியும் கைகூடும்;
மோனம்கை வந்தோர்க்குச் சித்தியும் முன்நிற்கும்;
மோனம்கை வந்தூமை யாமொழி முற்றுங்காண்;
மோனம்கை வந்தைங் கருமமும் முன்னுமே.
(திருமந்திரம் 1611)

மோனத்தின் மகிமையையும் அதனால் விளையும் பேரின்ப நிலையையும் திருமூலர் இவ்வாறு குறித்திருக்கிறார். **மோனம் கைவரின் முத்தியும் கைகூடும்** என்றது ஈண்டு உய்த்து உணர உரியது.

இந்த மோன நிலை எளிதில் அமையாது; அரிய ஞானமும் பெரிய யோகமும் உற்றவரிடமே உறவா வருகிறது. உரை சுருங்க உணர்வு பெருகுகிறது.

பேசாத மோன நிலையே பேச அரிய மகிமையுடைய ஈசனை நேரே காண நேர்கிறது,

பேசாத ஆனந்த நிட்டைக்கும் அறிவிலாப்
பேதைக்கும் வெகுதூரமே
பேய்க்குணம் அறிந்திந்த நாய்க்கும்ஒரு வழிபெரிய
பேரின்ப நிட்டை அருள்வாய்!

சொல்லாட ஊமையைப்போல் சொல்இறந்து நீஆகின்
அல்லால் எனக்குமுத்தி யாமோ? பராபரமே!

கற்றாலும் கேட்டாலும் காயம்அழி யாதசித்தி
பெற்றாலும் இன்பம் உண்டோ? பேசாய் பராபரமே!

பேசாத மோனநிலை பெற்றன்றோ நின்அருளாம்
வாசாம கோசரந்தான் வாய்க்கும் பராபரமே!

பேசாத மோன நிலையால் பெறுகின்ற பேரின்பப் பேறுகளைக் குறித்துத் தாயுமானவர் ஈசனிடம் இவ்வாறு ஆர்வம்மீதூர்ந்து பரிந்து பேசியிருக்கிறார்.

ஆன்மாவை ஆழ்ந்து நோக்குவது மேன்மையான தியானமாம். பொறி புலன்களும் கரணங்களும் ஒடுங்கிய வழியே பரமானந்தம் உதயமாய் வருகிறது. ஆகவே பேசாத ஆனந்த நிட்டை என்று அது பேர் பெற்றுச் சீருற்று நின்றது.

அவத்தை பலவையும் அடக்கி அகிலமும்
அவிழ்ச்சி பெற இனிது இருக்கும் மவுனம்.
(திருவகுப்பு 5)

அல்லல் பலவும் நீக்கி எல்லா நலன்களையும் மோனம் அருளும் என அருணகிரிநாதர் இங்ஙனம் அருளியுள்ளார். பேசா நிலையில் பேரின்பம் பெற்ற

வர் ஆதலால் மோனத்தை இவ்வாறு வியந்து குறித்திருக்கிருர். மோனம் ஞான யோகமாகிறது.

மோனிகளைப் பார்த்திமையா மோகமும் வெண்திங்கள்
மேனி அழகெழுதா மேல்பத்தி—யான
பதுமா தனன்கண்ணும் பானுவும்போல் தாளுய்
எதிராகும் சொப்பனத்தி லும். (ஒழிவிலொடுக்கம்)

மவுனிகளை நோக்கி ஞானிகள் மகிழ்ந்து வருவதை இது புகழ்ந்துளது. மோனம் அதிசய மகிமைகளை அருளி வருதலால் இவ்வாறு அதனைப் பெரியோர்கள் துதி செய்துள்ளனர்.

Silence alone is great, all the rest is weakness.
(A. Vigny)

பேசா மவுனமே பேருயர்வு மற்றவெல்லாம்
ஈசல் எளிமை இளிவு.

If thou desire to be wise, be so wise as to hold thy tongue. (Lavater)

அரியவுயர் ஞானியா ஆக விரும்பின்
உரியவுன் நாவை ஒடுக்கு.

இவை ஈண்டு எண்ணி உணர வுரியன. மவுன நிலையை எவரும் மதித்துப் போற்றித் துதித்து வருவதை இவற்ருல் அறிந்து கொள்கிரேம்.

---

53 யோகிக்குச் சாந்தம் உயரணி; ஓயாத
போகிக் கணிபொன் பொறிநுகர்வே;-தேகிக்குத்
தேக நிலையைத் தெரிதலணி; தேர்ந்தவர்க்கு
ஆகம் உருமை அணி. (ருங)

இ-ள்

சாந்தம் யோகிக்கு அழகு; பொறி நுகர்வுகள்

போகிக்கு அழகு; தேக நிலைமையைத் தெளிதல் தேகிக்கு அழகு; உள்ளம் தெளிந்தவர்க்கு மீண்டும் உடல் உறாத தலைமையே அழகு என்க.

நான்கு வகை நிலைகள் ஈங்கு அறிய வந்துள்ளன.

யோகம் என்னும் சொல் கூடுதல், சேர்தல் என்னும் பொருள்களை யுடையது. யோகத்தை யுடையவன் யோகி. எவரோடும் கூடாமல் ஏகாந்தமாய்த் தனியே அமர்ந்து இறைவனையே கருதி யுருகி யிருப்பது யோக நிலை. ஆன்மா பரமான்மாவோடு கூடியிருக்கும் கூட்டத்தை இது குறித்துள்ளது. அமைதியும் சித்தசாந்தியும் யோகியின் இயல்புகளா யினிதமைந் துள்ளன. ஆன்மாவையே நோக்கி வருபவர் மேன்மையான ஆனந்த நிலையை அடைந்து வருகின்றார்.

போகி=போகங்களை வளமாக வுடையவன். இந்திரனுக்கு இப்படி ஒரு பெயர். நிறைந்த செல்வங்களும் சிறந்த சுகபோகங்களும் போகிக்கு உரிமைகளாய் உவகை புரிகின்றன.

தேகி=சீவன். தேகத்துள் இருப்பவன்; தேகத்தையுடையவன் என்பதாம். தனக்கு நிலையமாயுள்ள தேகத்தின் நிலைமைகளை உணர்ந்து மறுபடியும் பிறவித் துயரங்கள்நேராதபடி செய்துகொள்பவனே உயிர்க்கு நன்மையைச் செய்துகொள்ளுகின்றான்.

உண்மையை உறுதியாகத் தெளிந்தவர்க்கு அழகு எது? புன்மையான உடம்பை எடுத்து மேலும் மேலும் பிறவித் துன்பங்களில் உழலாமல் பேரின்ப முத்தியைப் பெறுவதே யாம்.

பிறத்தல் இறத்தல் பெருந்துயரம்; இத்தை
மறத்தல் மதிகேடே யாகும்;—துறத்தலெனும்
தெய்வத் திருவுடையார் எய்துவர் மெய்யான
உய்வைத் தருவீ டுவந்து.

மதிகேடர் யார்? பேரின்ப வீட்டை அடைய வுரியவர் எவர்? என்பதை இதில் அறிந்து கொள்கிறோம். துன்பம் யாதும் தோயாமல் என்றும் இன்பம் தோய்ந்துவர ஆய்ந்து புரிக.

பிறப்பு எந்த வகையிலும் எங்கும் துன்பமே. பிறவாமை ஒன்றே என்றும் குன்றாத பேரின்பமாம்.

எடுத்து வந்துள்ள இந்த அரிய மனிதப் பிறவிக்கு உரிய பெரிய பயன் யாது? எனின், அடுத்த எந்தப் பிறவியும் அடையாமல் செய்துகொள்வதேயாம். செயல் ஒருவிய அளவே அஃது எய்துகிறது.

பெறலரிய பெரும் பேருப் பெற்றுவந்திருக்கின்ற இப் பிறப்பில் உயிர் துயருருத வழியை நாடித் தப்ப இல்லையானுல் வேறு எவ்வழியும் வெவ்விய துயரங்களே விளைந்துவிடும்.

யாதொரு நிலையுமின்றி விரைந்து அழிந்து ஒழிகின்ற உலகப் பொருள்களில் பற்று முற்றும் அற்றவரே பரம்பொருளைப் பற்றி உய்ய நேர்கின்றனர்.

ஆசை அற்ற யோகிகளே ஈசனைத் தோய்ந்து இன்பம் உறுகின்றனர். உறவே பிறவி தீர்ந்து பேரின்ப நிலையைப் பெறுகின்றனர்.

சிந்தையது என்னச் சிவன்என்ன வேறில்லை
சிந்தையின் உள்ளே சிவனும் வெளிப்படும்

சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையின் உள்ளே சிவன்இருந் தானே. (1)

தானும் அழிந்து தனமும் அழிந்துநீ
டூனும் அழிந்து உயிரும் அழிந்துடன்
வானும் அழிந்து மனமும் அழிந்துபின்
நானும் அழிந்தமை நான்அறி யேனே. (2)

ஒழிந்தேன் பிறவி உறவென்னும் பாசம்
கழிந்தேன் கடவுளும் நானும்ஒன் ருனேன்;
அழிந்தாங் கினிவரும் ஆக்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே. (3)
(திருமந்திரம்)

யோக சமாதியில் **திருமூலர்** அனுபவித்துள்ள சிவானந்தப் பேற்றை இவற்ருல் அறிந்து கொள் கிரோம். **சிவனைக் கண்டேன்; சிந்தையின் உள்ளே சிவன் இருந்தான; பிறவி ஒழிந்தேன்** என மொழிந் துள்ள மொழிகள் உண்மை நிலைகளை உணர்த்தி உறுதி நலன்களைத் துலக்கி யுள்ளன.

புலைப் பாசங்கள் ஒழிந்து மனத்தூய்மையுடன் தன்னை உண்மையாக் காண்பவன் பரமான்மாவையே காண்கின்ருன். கண்ணுள் ஒளியாய் உயிருள் உயி ராய் ஒளி செய்திருக்கின்ற பரஞ்சோதியைப் பரம யோகிகள் பார்த்துக் களித்துப் பரமானந்தமா யுள்ளனர்.

யானும் தானுய் ஒழிந்தானை
யாதும் யவர்க்கும் முன்னேனைத்
தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பணைத்த தனிமுதலை

தேனும் பாலும் கன்னலும்
அமுதும்ஆகித் தித்தித்து என்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை உணர்ந்தேனே.
(திருவாய்மொழி : 8 : 8)

நம்மாழ்வார் பரமனைக் கண்டு மகிழ்ந்து களித்துத் திளைத்துள்ள உண்மையை இதில் உணர்த்தியிருக்கிறார். கவியில் கனிந்துள்ள சுவைகளை உணர்ந்து நுகர்பவர், உயர்ந்த தத்துவங்களைத் தெளிந்து வியந்து மகிழ்ந்து கொள்வர்.

தன்னைப் பேதம் ஆய்க்காண்கை
சகத்தில் காணப் பட்டதாம்;
தன்னைப் பேதம் அறச்சிவம் என்று
அறிவோன் ஞானி தான்ஒருவன்
என்னக் கருதி மறைஅதுநீ
யானுய் என்ன அத்துவிதம்
தன்னைப் புகலும்; கண்டதனைச்
சாற்றல் மறையின் கருத்தன்றே. (1)

தூய்தா கியநெஞ் சுடையார்க்குத்
தாமே சிவமாத் தோன்றுமால்
தீதா கியநெஞ் சுடையார்க்குத்
தெளிய அபேதம் இகலின்றி
வேதா கமங்கள் விளம்பிடினும்
விளங்காது என்றும் வேறுஎன்னும்
வாதால் அழிவர் அவர்மாயை
மயக்க மயங்கு மதியினர். (2)

நெஞ்சம் சோகம் பாவனையில்
நிற்க நிறுத்தி விடயங்கள்

அஞ்சும் துறவாத் துறந்தசிவ
யோகி ஒருவன் அடியிணையில்
துஞ்சும் திருமால் முதல்அமரர்
உள்ளம்; அவனைத் துதித்திறைஞ்சாது
எஞ்சும் தவமா முனிவர்இலை
என நான் மறையும் இயம்புமால். (3)
(பிரபுலிங்க லீலை 24)

உயிரையும் உயிர்க்கு உயிராயுள்ள பரமனையும் அவனைக் கண்டுகளித்து வருகிற தத்துவஞானிகளையும் உத்தம யோகிகளையும் இவை வித்தக விசித்திரமா விளக்கியுள்ளன. பாசுரங்களைப் பலமுறையும் ஓதி யுணர்ந்து உண்மை நிலைகளை நுண்மையாய் ஓர்ந்து தேர்ந்து கொள்ள வேண்டும்.

மெய்யுணர்வு மனிதனிடம் தெளிவாக விளங்கியபொழுது அவன் தெய்வ ஒளியாய்த் திகழ்கிறான். உய்தி பெற்று உயர்கிறான்.

பிரஹ்ம வேதந மாத்ரேண பிரஹ்மாப்நோத்யேவ மாநவ: (கடருத்ரம்)

"பிரமஞானம் தோன்றிய அளவு மனிதன் பிரமத்தையே அடைகிறான்" என்னும் இது ஈங்கு உன்னி உணர்ந்து கொள்ள வுரியது.

தன்னை உணர்ந்து **தன் உயிர் தான் அறப் பெற்றவன்** தனி முதல் தலைவன் ஆகின்றான். ஆகவே மன்னுயிரெல்லாம் அவனை உவந்து தொழுது வருகிறது. உரிய இன்பப் பேறு தெரிய வந்தது.

---

54. ஆன்ம உணர்வே அறிவுக் கணிஇனிய
பான்மை உயர்வே பதியணி—நோன்மை
உறுவது மேன்மைக் குயரணி அல்லல்
அறுவது நல்லோர்க் கணி. (ரு௪)

இ-ள்.

அறிவுக்கு அழகு ஆன்ம உணர்வே; உயர்ந்த தலைமைக்கு அழகு இனிய பான்மையே; மேன்மைக்கு அழகு நோன்மையே; நல்லவர்க்கு அழகு அல்லல் அறுவதே என்க.

உத்தம உணர்வு உய்த்துணர உற்றது.

அறிவை மருவிய அளவே எல்லா இனங்களும் பெருமை அடைந்து வந்துள்ளன. பலவகை நிலைகளில் அறிவு பரவி யுளது. உலக அறிவு வணிக அறிவு தொழில் அறிவு கலை அறிவு கணித அறிவு இயல் அறிவு இசை அறிவு பயிர் அறிவு உயிர் அறிவு என இன்னவாறு துறைகள்தோறும் அறிவு ஒளிபுரிந்து வருகிறது. இந்த வகையில் எந்த வழிகளில் தொழிலாற்றிவரினும் அந்த அறிவு பந்தம் உடையதே. தன் சொந்த நிலையை உணர்ந்தபோது தான் அந்தமில்லாத ஆனந்தத்தை அடைகிறது.

தன்னை அறிய நேர்ந்தபோது அந்த அறிவு இன்னல் நீங்கி இன்பம் மிகப்பெறுகிறது. தனது உண்மை ஒளியான ஆன்மாவை உரிமையுடன் மருவிய அளவே அறிவு பெருமகிமை யுறுகிறது.

அறிவு அறிவுஎன்றங்கு அரற்றும் உலகம்
அறிவு அறியாமையை யாரும் அறியார்;

அறிவு அறியாமை கடந்து அறிவானுல்
அறிவு அறியாமை அழகிய வாறே. (1)

அறிவு வடிவென்று அறியாத என்னை
அறிவு வடிவென்று அருள்செய்தான் நந்தி;
அறிவு வடிவென்று அருளால் அறிந்தே
அறிவு வடிவென்று அறிந்திருந் தேனே. (2)

(திருமந்திரம்)

அறிவே வடிவம் ஆன்மா: இதனை அறிவதே உண்மையான அறிவு; அதுவே தெய்வ ஒளியாய் எழில் மிகப் பெறுகிறது. இன்பம் நிறைகிறது. பரம யோகியான திருமூலர் இவ்வாறு ஆன்ம உணர்வை யாரும் அறிய அருளியுள்ளார்.

இன்பமயமான பரம்பொருளே உயிர் என உன்னுள் ஒளி செய்துளது. இந்த உண்மையை உரிமையுடன் உணர்க; உணரின் உயிர் உய்தி புணரும். இதனை உணராதது உணர்வாகாது.

இயல்அறிவது இசைஅறிவது இனம்அறிவது உளதாம்
அயல்அறிவது அறிவதல; அறிவுஅறிவது அறிவே. (1)

நவிலுகலை அறுபத்து நாலும்உணர் வாரும்
பவலயம தறுசுத்த பரமம் அறியாரே. (2)

ஆகஅறி வாளர்அறி வார்இவை அனைத்தும்
ஏகஅறி வாளர்இவை யாவும் அறியாரே. (3)

ஐயறிவு அறிந்தவை அடங்கினவர் ஏனும்
மெய்யறிவு இலாதவர்கள் வீடது பெருரே. (4)

(மோகவதம்)

அறிவு நிலையைக் குறித்துத் தத்துவராயர் இவ் வாறு வித்தக விநயமாய் நன்கு விளக்கியிருக்கிருர்.

அறிவுமயமாயுள்ள ஆன்மாவை அறிவதே அறிவாம்: அதுவே பிறவித்துயரங்களை நீக்கிப் பேரின்பங்களை அருளும் என்பதை ஈண்டு அறிந்து கொள்கிறோம். மெய்யறிவை உறுவதே உயிர்க்கு உய்தி; அஃது உறாதவரையும் பிறவி அறாது; பேரிடரே விளையும் என்னும் உண்மையைத் தெளிந்து கொள்கிறோம்.

அறிவை அறிவதுவே ஆகும் பொருள்என்று
உறுதிசொன்ன உண்மையினை ஓரும்நாள் எந்நாளோ?

மெய்யறிவைக் குறித்துத் தாயுமானவர் இவ்வாறு கருதியுள்ளார். மெய்யான ஞானமே பொய்யான புலையிருள்களை ஒழித்து தெய்வ நிலையான இன்பத்தை நேரே அருளுகிறது.

நோன்மை=பொறுமை; தவம்.

மேன்மையான தலைமை நோன்மையால் அமைவதால் அதற்கு இது அழகு என வந்தது. பொறுமை மருவி வரப் பெருமை பெருகி வருகிறது. அதிசய நிறைவுகள் யாவும் பொறையிடமே பொருந்தியுள்ளன. அதனை மருவி வருபவர் மாதவராகின்றார்.

எல்லா உயிர்களுக்கும் இரங்கி நன்மை செய்பவர் நல்லவர் ஆகின்றார். ஆகவே அவர் அல்லல் யாவும் நீங்கி எவ்வழியும் இனியராய் எல்லா இன்பங்களையும் எளிதே எய்துகின்றார்.

"அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை"
(குறள், 245)

பொருள் பொதிந்து வந்துள்ள இந்த அருள்

மொழியை வேதமந்திரம்போல் நாளும் ஓதிவரின் ஏதம் நீங்கி ஒழியும்; இன்பம் ஓங்கி வரும்.

---

55. நல்லதை எண்ணுவதே நன்மனத்துக் கானஅணி;
நல்லதைப் பேசுவதே நாவணி;—நல்லதைச்
செய்வதே தேகத்தின் சீரணி; இம்மூன்றும்
எய்தினர் உய்தி இவண். (௫௫)

இ-ள்

நல்ல எண்ணங்களை எண்ணுவதே மனத்துக்கு அழகு; நல்ல வார்த்தைகளைப் பேசுவதே நாவுக்கு அழகு; நல்ல செயல்களைச் செய்வதே உடம்புக்கு அழகு; இவை அமையின் உயிர்க்கு அழகு என்க.

மனமும் வாக்கும் காயமும் இனமாய் ஈண்டு அறிய வந்தன. தினமும் நிகழ்வன சிந்திக்க நேர்ந்தன. மூன்று வழிகளும் வாழ்வின் விழிகள்.

வினைகள் விளைந்து வருகிற தொழில் நிலையங்களாய் இவை இயைந்திருக்கின்றன.

எண்ணமும் சொல்லும் செயலும் நல்லனவாயின் அவை புண்ணியங்களாய்ப் பொலிந்து நின்று எவ்வழியும் இன்ப நலங்களை அருளுகின்றன. தீயனவாயின் பாவங்களாய்ப் பரந்து நின்று யாண்டும் நீண்ட துன்பங்களையே தருகின்றன.

யார்க்கும் இதமே கருதுக; எவரிடமும் இனிமையாய்ப் பேசுக; எங்கும் நலமே புரிக. இவ்வாறு பழகிவரின் அல்லல் யாதும் அணுகாது; நல்ல சுக வாழ்வே எல்லா வழிகளிலும் நண்ணி வரும்.

எல்லா உயிரினங்களும் எவ்வழியும் தமக்கு இன்பமே வேண்டும் என்று கருதி வருகின்றன. கருதியவாறு காணுமல் எங்கும் மறுகி யுழல்கின்றன. காரணம் என்ன? வழி வழியாகவே மனம் மொழி மெய்களை நல்ல வழிகளில் பழக்கி நலம் புரிந்து வந்தவரே இன்ப நலன்களை எய்தவுரியவரா கின்ருர்; அவ்வாறு பழகாமல் அல்வழியில் இழிந்து அல்லல்புரிய நேர்ந்தவர் எவரும் யாண்டும் துன்பம் தோயவே நேர்ந்துள்ளனர்.

எனைப்பகை உற்ருரும் உய்வர்; வினைப்பகை
வீயாது பின்சென் றடும். (குறள், 207)

எத்தகைய கொடிய பகைகளுக்கும் தப்பி உய்ய லாம்; தாம் செய்த வினைப்பயனை அனுபவியாமல் யாரும் யாதும் தப்ப முடியாது எனத் **தேவர்** இவ் வாறு விதி நியமத்தை நன்கு விளக்கியிருக்கிருர்.

பிற உயிர்களுக்கு இடர் செய்கின்றவன் தன் உயிர்க்கே கொடிய துயரங்களை விளைத்துக்கொள்ளு கிருன். விளைவு தெரியாமல் வெறியனுயுழல்கிருன்.

பிறர்க்குஇன்ன செய்தலின் பேதைமை இல்லை;
பிறர்க்குஇன்னது என்றுபேர் இட்டுத்-தனக்கின்ன
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலின்
பித்தும் உளவோ பிற. (அறநெறி)

பிறர்க்குத் துன்பம் செய்வதினும் கொடிய மடமை வேறு யாதும் இல்லை; தான் செய்த துயர் ஒன்று நூருய்ப் பெருகித் தன்னை வந்து வருத்துமே! என்பதை உணராமையால் அந்த முழுமூடன் அவ்

வாறு செய்து பின்பு அழிதுயரங்களை அடைந்து அழுது புலம்பி அலமந்து உழல்கின்றான்.

தீய வழியில் பழகிய தீவினையாளர்க்கு நல்ல அறிவுரைகளை மேலோர் அருளோடு நயந்து கூறினும் உவந்து கேளார். மருளோடு இகழ்ந்தே போவர். செய்த தீவினைப் பயன் எய்தியபோது ஐயோ! என்று அவர் அலறி அழுது துடிப்பர்.

மறத்துறை நீங்குமின்! வல்வினை ஊட்டும்என்று
அறத்துறை மக்கள் திறத்திற் சாற்றி
நாக்கடிப் பாக வாய்ப்பறை அறையினும்,
யாப்பறை மாக்கள் இயல்பிற் கொள்ளார்;
தீதுடை வெவ்வினை உருத்த காலைப்
பேதைமை கந்தாப் பெரும்பே துறுவர்.
(சிலப்பதிகாரம் 14)

தீவினையாளருடைய புலைநிலைகளை இது தெளிவாக விளக்கியுளது. இனிய போதனைகள் யாதும் அவர்க்கு ஏறாது. கொடிய வேதனைகள் ஏறி வதைத்த பொழுது அவர் பதைத்து அழிவர்.

யாப்பு=உறுதியான அறிவு. மாக்கள் என்றது மக்களுக்கு உரிய மதிநலனை இழந்துபோன அந்த இழிவு நிலை தெளிவாய்த் தெரிய வந்தது.

மனநினைவும் வாய்மொழியும் மெய்ச் செயலும் புனிதமாய்வரின் அந்த மனிதன் மகானாய் உயர்கிறான். எல்லாவற்றிற்கும் மனம் மூல நிலையம் ஆதலால் அதன் தலைமை தெரிய முதன்மையா வந்தது.

புனிதமான இனிய மனம் அரிய மகிமைகளைத் தனியே எங்கும் நலமா விளைத்தருளுகிறது.

மனத்தினும் வாயினும் மெய்யினும் செய்கை
அனைத்தினும் ஆன்றவிந்தார் ஆகி—நினைத்திருந்து
ஒன்றும் பரியலராய் ஓம்புவார் இல்லெனின்
சென்று படுமாம் உயிர். (பழமொழி 359)

மூன்று கரணங்களும் இனியராய் ஆன்று அவிந்து அடங்கியுள்ள சான்றோராலேயே இவ்வுலகம் இனிது நடந்து வருகிறது. அவ்வுண்மையை இது தெளிவாக உணர்த்தி யுள்ளது.

---

56. ஆசை யறுதல் அறிவுக் கரிய அணி;
பாசம் அறுதல் பவமறுதற் கானவணி;
ஈசனைச் சேர்தல் இனிய உயிர்க்கணி;
யோசனை ஓர்வுக் கணி. (டுசு)

இ-ள்.

ஆசையை அழித்து ஒழித்தலே அறிவுக்கு அரிய அழகு; உலக பாசத்தை ஒருவி விடுதலே பிறவி அறுதற்கு அழகு; ஈசனைச் சேர்தலே சீவனுக்கு அழகு; கூரிய யோசனையே சீரிய ஓர்வுக்கு அழகு என்க. ஓர்வு=ஓர்ந்து உணரும் அறிவு.

அல்லல் உறாமல் பேணி உயிர்க்கு நல்ல சுகத்தை ஆற்றி வருவதே தெள்ளிய அறிவாம். கொடிய துயரங்களுக்கெல்லாம் ஆசை நெடிய நிலையம் ஆதலால் அதனை அடியோடு அறுத்துஒழித்தால் அன்றி உயிர் துயர் நீங்கி உயர்வுறாது.

ஆசை யறுமின்கள்! ஆசை அறுமின்கள்!
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமாமே. (திருமந்திரம்)

ஆசையுட் பட்டவர் அல்லற் பட்டவர்;
ஆசையுட் பட்டவர் அளற்றில் பட்டவர்;
ஆசையுட் பட்டவர் அயர்வில் பட்டவர்.;
ஆசையுட் பட்டவர் அரங்கப் பட்டவர். (1)

ஆசை இல்லார்களே அறவர் மேலவர்;
ஆசை இல்லார்களே அருந் தவத்தினர்;
ஆசை இல்லார்களே அருட் கலப்பினர்;
ஆசை யில்லார்களே அரிய முத்தர்கள். (2)
(காசிரகசியம்)

ஆசையுற்றபோது சீவர்கள் படுகிற அவலத் துயர்களையும், அது அற்றபோது அவர்கள் அடைகின்ற ஆனந்த நிலைகளையும் இவை வரைந்து காட்டியுள்ளன. கருத்துக்களைக் கருதிக் காண வேண்டும்.

பாசம் = உயிர் வாசனையான பற்று.

இது அற்றபொழுதான் அந்த உயிர் பிறவித் துன்பங்கள் நீங்கிப் பேரின்பம் பெறுகின்றது.

பாசம் படிந்து வருமளவும் சீவன்தான்
நீசம் படிந்து நிலைகுலைவன்—பாசம்
ஒழிந்த பொழுதே உயர்ஈசனாகி
எழுந்து திகழ்வன் எதிர்.

இதனை நினைந்து தெளிக. உயிர் துயராய் இழிவுறுவதும் உயர்வாய் ஒளி பெறுவதும் எதனால்? என்பதை இதனால் உணர்ந்து கொள்ளலாம்.

உலக பாசத்தால் பலவகையான ஆசைகள் படர்ந்து தொடர்ந்து வருகின்றன; அந்த அகப்பற்று ஒழியின் எவ்வழியும் இன்பமே பெருகி வருகிறது.

ஸம்ஸார பந்தோ ஜீவோ ஹி
தஸ்மாந் முக்த: ஸதாசிவ: (குமாரசங்கிதை)

"பாசபந்த முடையவன் சீவன்; அதினின்று விடுபட்டவன் சதாசிவன்." என்னும் இது இங்கே அறியவுரியது. சீவன் சிவன்ஆவது தெரியநின்றது.

மாசு நீங்கிய அளவே ஆன்மா தேசுமிகப் பெறுகிறது. உரிய பரமும் உயிரும் உணர வந்தன.

ஈசனிடமிருந்தே சீவன் பிரிந்து வந்துள்ளான். அந்தப் பிரிவினுல் அளவிடலரிய துன்பங்களை அடையநேர்ந்தான்: நேர்ந்த நீசத்துயரங்களுக்கெல்லாம் மூல காரணம் பாசம் என்றே தெளிந்தான்; அப்பற்றை முற்றும் ஒழித்தான்; பழைய பரமானந்த நிலையை அடைந்தான். முத்தி, வீடு என்பன எல்லாம் இந்த விடுதலை நிலையையே குறித்து நிற்கின்றன.

பாசவேர் அறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமாறு அடியனேற்கு அருளிப்
பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே!
தேசுடை விளக்கே! செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே! சிவபெரு மானே!
ஈசனே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்.
எங்கெழுந் தருளுவது இனியே? (திருவாசகம்)

பாசம் தீர்ந்து ஈசனைச் சேர்ந்து **மாணிக்கவாசகர்** இன்பம் தோய்ந்துள்ள நிலையை இதனுல் அறிந்து கொள்கிறோம். பரம புனிதனை இறைவன் அருள் புரிய வேண்டின் மனிதன் உள்ளம் பரிசுத்தமாக வேண்டும். ஆன போதே அதிசய இன்பமாகிறது.

57. சித்தத்தின் சுத்தியே தெய்வம்நேர் சேரஅணி;
பத்தி வலையே பரமனைப் பற்றஅணி;
தத்துவ ஞானமே தன்னைத் தலைவனைச்
சத்தியமாக் காண அணி. (௫எ)

இ-ள்.

தெய்வத் திருவருளை நேரே சேர்தற்குச் சித்த சுத்தியே அழகு; பரம்பொருளை எளிதே பிடித்தற்குப் பத்திவலையே அழகு; தன்னையும் தலைவனையும் தெளிவாக அறிதற்கு தத்துவ ஞானமே அழகு என்க. தன்னை = உயிரை. தலைவனை = இறைவனை.

மனம் மாசு படிந்துவர மனிதன் நீசம் அடைந்து இழிகிறான். அது தூய்மை தோய்ந்த பொழுது அதிசய மகிமைகள் அவனிடம் பெருகி வருகின்றன.

பெறலரும் பேருக மனிதப் பிறப்பைப் பெற்று வந்துள்ளவன் அதனால் பெற வுரியதை விரைவில் பெறவேண்டும். அரிய இந்தப் பிறவிக்கு உரிய பெரிய பேறு யாது? எனின், மீண்டும் பிறவாமையே. பிறவா நிலையில் பிறந்த பிறவியே பேரின்பப் பிறவியாம்.

பிறந்தும் இறந்தும் ஓயாமல் உழந்து திரிகிற அவலப் புலைகளே பிறவிகள் என்று பேர்பெற்றிருக்கின்றன. இந்த அல்லல்கள் அறவே ஒழியவேண்டுமானால் உள்ளம் தூயதாய் உணர்வு தெளியவேண்டும். மாசற்ற மனமே ஈசனுக்கு இனிய நிலையமாகிறது. ஈசனுகை வுரிய மருமம் இனிது அறிய வந்தது.

தீய எண்ணங்கள் ஆகிய அழுக்குகள் மனத்தில் படியாமல் எவன் பாதுகாத்து வருகிருனே, அவன் தூயஞ யுயர்கின்ருன். மாசில்லாத அந்த மனத்தை யுடையவன் மாசில்லாமணியாகிய ஈசன் இனத்தஞய் இன்பம் மிகப் பெறுகின்ருன்.

யாவர்க்கும் அரியஞயுள்ள பரமன் அன்பர்க்கு எளியஞய் அருள் புரிகின்ருன். **பத்திவலேயில் படுவோன்** என ஆண்டவனுக்கு ஒரு பெயர் வித்தகமாயமைந்துளது. **அன்பினில் விளேந்த ஆரமுதே!** என்று ஈசனே மணிவாசகப் பெருமான் அனுபவித்துத் துதித்திருக்கிருர்.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலேயே!
அன்பெனும் குடில்புகும் அரசே!
அன்பெனும் வலேக்குள் படுபரம் பொருளே!
அன்பெனும் கரத்தமர் அமுதே!
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே!
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே!
அன்பெனும் அணுவுள் அமைந்தபேர் ஒளியே!
அன்புரு வாம்பர சிவமே! (அருட்பா)

கற்றதஞல் தொல்லேவினேக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதஞல் போமோ பிறவிநோய்—உற்றகடல்
நஞ்சுகந்து கொண்டருணே நாதனடித் தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி. (அருணகிரியந்தாதி)

இறைவனே நினேந்து கரைந்து உள்ளம் உருகிவரின் பிறவி நோய் தீர்ந்து பேரின்பம் பெருகிவரும் என இவை குறித்துள்ளன. பிறவாத பேரின்பப் பொருளே ஆர்வம் மீதூர்ந்து அடைந்தபோதுதான் அவலத் துயரங்கள் யாவும் அழிய நேர்கின்றன.

தன்னை என்றது உயிரை. தலைவனை என்றது உயிர்க்கு உயிராயுள்ள பரமனை. சீவனை அறிய நேர்ந்தபோதே சிவமும் தெரிய வருகிறது. வரவே அதிசய ஆனந்தம் அடைய நேர்கிறான்.

தன்னையும் தனக்கு ஆதாரத்
தலைவனை யுங்கண் டானேல்
பின்னைஅத் தலைவன் தானாய்ப்
பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்;
உன்னைநீ அறிந்தாய் ஆகில்,
உனக்கொரு கேடும் இல்லை;
என்னைநீ கேட்கை யாலே
ஈதுப தேசித் தேனே. (கைவல்யம்)

தன்னை அறிபவன் தத்துவ ஞானி
முன்னை அறிபவன் முத்தன்மெய்ஞ் ஞானி
பின்னை அறிபவன் பித்தன்அஞ் ஞானி
அன்னை அறிவன் அளப்பில் பிறப்பனே.

இவை ஈண்டு எண்ணி உணர வுரியன. தத்துவ ஞானம் எத்தகைய மகிமை வாய்ந்தது என்பதை இங்கு உய்த்துணர்ந்து கொள்கிறோம்.

சூரியன் ஒளி தோன்றியவுடன் உலக இருள் அடியோடு மாய்ந்து போகிறது. அதுபோல் ஞான ஒளி தோன்றிய பொழுது உயிரைச் சூழ்ந்திருந்த அஞ்ஞான இருள் முழுதும் அழிந்து ஒழிகிறது.

ஒரு வீட்டுள் எவ்வளவு காலம் இருள் மண்டி யிருந்தாலும் விளக்குப் புகுந்தவுடன் அது விரைந்து விலகி ஒழிகிறது; ஒளி எங்கும் பரவி மிளிர்கிறது.

மாய மையலான தீயஇருள்கள் ஊழிகாலமாய் உயிரைத் தொடர்ந்து படர்ந்து அடர்ந்துவரினும் ஞானம் உதயமானல் அப்பொழுதே அவை யாவும் அடியோடு அழிந்து ஒழிந்து போகின்றன.

பொய்யான ஈனமயல்கள் கடல்போல் பொங்கியிருந்தாலும் மெய்யான ஞான ஒளியின் எதிரே அவை விரைந்து விலகி மறைந்து ஒழிகின்றன.

ஞானம் என்னும் சொல் விரிவான பொருளையுடையது. என்றும் உண்மையாயுள்ள பரம் பொருளை உரிமையுடன் தெளிவாக உணர்வதே மெய்ஞ்ஞானமாம்.

அரிய பரமான்மாவை உரிய சீவான்மா நேரே அறிய நேர்ந்த அளவே அதிசய ஒளியாகிறது. ஆகவே வழிவழியாய்த் தொடர்ந்து வந்துள்ள இழிவுகள் எல்லாம் ஒளி கண்ட இருள் என ஒருங்கே ஒழிந்து போகின்றன,

எங்கும் நிறைந்து எல்லாம் அறிந்து என்றும் பரிபூரண சோதி மயமாயுள்ள இறைவனை உரிமையுடன் அறிவது பெரிய ஒரு ஞான பூசனையாம்.

எப்பொருள் களும்தான் ஆகி இலங்கிடப் படுவான் ஈசன்;
அப்படி விளங்குகின்றது அறிதலே அவன் தனக்கு
மெய்ப்படு பூசை; வேருர் செயலினுல் அன்று மெய்யே;
இப்படி ஞானம் தன்னுல் இறைஞ்சிடப் படுவான் ஈசன்.
(ஆனந்தத்திரட்டு)

ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேன்உனை நான்அலேன்

ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய்உனை நானும் தொழுவனே.
(அப்பர்-தேவாரம்)

சரியைஒண் கிரியைகால் தடுக்கும் யோகிவை
புரிபவர் தம்மைஅப் புரியும் செய்கையால்
தெரிதரல் ஆகும்ஓர் செயலும் இன்றிவாழ்
அரியநல் ஞானியை அறிய லாகுமோ? (1)

நலமுறும் ஓர்சிவ ஞானி இல்லில்வாழ்
நிலையறம் ஆகினும், நீத்து நிற்கும்ஓர்
தலையறம் ஆகினும், தரித்து ஞாலமேல்
இலைமறை காய்என இருக்கும் என்பவே. (2)
(பிரபுலிங்க லீலை)

ஈசனை அறிந்த அந்த இடத்திலே என்றும் எல்லாப்
பாசமும் நசித்தல்தானும் பணியறப் பவத்தின்தீர்வும்
காசுறும் அகில மாய கங்குலின் கழிவும் தானே
ஆசுறும் அகண்ட ரூபி யாகையும் அனைத்தும் எய்தும்.
(பிரமகீதை)

மங்கை பங்க! கங்கை நாயக! நின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலம் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையும் கண்டேன்; காண்டலும்,
என்னையும் கண்டேன்; பிறரையும் கண்டேன்;
நின்னிலை அனைத்தையும் கண்டேன்; என்னை!
நின்னைக் காணா மாந்தர்
தன்னையும் காணாத் தன்மை யோரே.
(பட்டினத்தார்)

ஞானக் காட்சியின் மாட்சிகளை இவை நன்கு விளக்கி யுள்ளன. பொருள் நயங்களைக் கூர்ந்து ஓர்ந்து தேர்ந்து தெளிந்து கொள்ள வேண்டும்.

---

58. பிறப்புக் கணிபின் பிறவாமை; பெற்ற
சிறப்புக் கணிசெருக் கின்மை;—இறப்புக்கோ
அல்லல் உருமல் அமைதியாய் ஆதலணி;
நல்லசெயல் யார்க்கும் அணி. (ருஅ)

இ-ள்.

பின்பு பிறவாமையே பிறவிக்கு அழகு; செருக்கு இல்லாமையே சிறப்புக்கு அழகு; வேதனை யுருமல் வீதலே இறப்புக்கு அழகு; நல்லவை செய்தலே எல்லார்க்கும் இனிய அழகு என்க.

அல்லல் உருத அமைதிகள் அறிய வந்தன.

பிறவா யாக்கைப் பெரியோன் என்பது இறைவனுக்கு ஒரு பெயராய் வந்துள்ளது. இத்தகைய ஆண்டவனிடமிருந்து பிரிந்து வந்து சீவன் பிறவித் துயரங்களில் அழுந்தி உழந்து திரிகிறது. சித்தம் தெளிந்து தனது நிலைமையை உணர்ந்து மீண்டும் பிறவாதபடி முத்தியை அடைந்து கொள்வதே அரிய பிறவியால் பெற வுரிய பெரிய பேரும்.

செல்வச் செருக்கு, கல்வித்தருக்கு, குலத்திமிர், அதிகார மமதை, பதவி இறுமாப்பு என்பன பெரிய மனித இனத்தை எவ்வழியும் இறுகப் பற்றிச் சிறிய புலையாக்கிச் சீரழித்து விடுகின்றன.

சிறப்பு=கல்வி செல்வங்களால் ஆன பெருமை.

இவை வளமா எய்தியபொழுது தம்மைப் பெரியராக எண்ணிப் பெரும்பாலும் மனிதர் களிக்க நேர்வர். செருக்கு தருக்கு இறுமாப்பு மமதை அகங்காரம் என்பன எல்லாம் மடமைக் களிப்புகள்; இவற்றை அடைய நேர்ந்தவர் சிறுமை அடைவர். தமக்கு வாய்த்த சிறப்புகளைக் கருதிச் செருக்கு உருதவரே சிறந்த மேலோராய் உயர்ந்து திகழ்வர்.

பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். (குறள், 979)

சிறந்த பெரியோர் யார்? இழிந்த சிறியவர் எவர்? என்பதை இதில் தெளிவாய்த் தெரிந்து கொள்கிறோம். இயல்பின் அளவே உயர்வு.

தக்க மேன்மைக்கு அடையாளம் கீழ்மையான செருக்கு யாதும் உள்ளத்தே கொள்ளாமையேயாம். மதிகேடான மடமையிலிருந்தே மமதைகள் விளைகின்றன. அவற்றால் அவலத் துயர்களாகின்றன.

இறப்பு = இறுதியுறுவது; முடிவு; சாவு.

பிறந்தவர் எவரும் இறந்தே போவர். உடம்பை விட்டு உயிர் பிரிய நேரும்போது கொடிய துயரங்கள் நேர்கின்றன.

பரணம்ஆகிய பெண்டிரும் சுற்றமும்
பண்டு தங்கையில் தந்த
இரணம் ஆனவை கொண்டிட இவரைவிட்டு
இயம்பிடா திவண் ஏகும்
மரண வேதனை யாவரால் அறியலாம்?
மயங்கி ஐம்புலன் அந்தக்
கரணம் யாவையும் கலங்கிட வருந்துயர்
கடவுளே அறிகிற்பார். (பெருந்திரட்டு)

வந்திடும் மரணத் துன்பம்
மறித்துரை செய்யப் போமோ
உந்திமேல் ஐயும் பித்தும்
உணர்வொடு பொறி கலங்கி
நந்திடா இருளே மூடி
நாவுலர்ந்து அலமந்து என்னே
இந்தமா இறப்பின் துன்பம்
பவத்துன்பத்து எண்மடங்கே.
(மெய்ஞ்ஞான விளக்கம்)

இவ்வாறு துன்பங்கள் நேராமல் சாவது ஓர் அரிய பேறும். அநாயாச மரணம் அதிசய பாக்கியம்.

மீண்டும் பிறவாமைக்கு வழி செய்.
நீண்ட செருக்கை நெஞ்சில் கொள்ளாதே.
இதமாய் மாண்டுபட இறைவனை வேண்டுக.
யாண்டும் நல்லதையே செய்க.

---

59. உயிர்க்கணி தன்னை உயர்பரனுக் கீந்தே
அயிர்ப்பில் அவனை அடைதல்—உயிர்ப்பில்
நிலைநேரு முன்னே நிலையாமை தேர்ந்து
தலைநேரல் தக்கார்க் கணி. (ருகூ)

இ-ள்

தன்னை முழுதும் சிவனுக்குக் கொடுத்துத் தான் சிவமயம் ஆவதே சீவனுக்கு அழகு; சாவு நேருமுன் நிலையாமை நிலையைத் தெளிந்து தலையாய நிலைமையை அடைவதே தக்கவர்க்கு அழகு என்க.

உறுதியான உய்திநிலை உணர வந்தது.

உயிர், ஆன்மா, சீவன் என்பன ஒரு பொருளன. ஆயினும் வேறு வேறு காரணங்களை மருவியுள்ளன. செயல் இயல்களால் பெயர்கள் நேரினும் உயர் பரமே மூல நிலையமா யுளது.

அரிய பெரிய அந்தப் பரஞ்சோதியிலிருந்து பிரிந்து வந்துள்ள ஒரு சிறு சோதியே சீவன். மாய மருள்கள் நீங்கிய பொழுது இந்த ஆன்ம ஒளி பரமான்மாவோடு வெளியில் கலந்து கொள்கிறது. அவ்வாறு கலந்து மகிழ்ந்து கொள்வதையே சீவன் முத்தி என்றும் விதேக முத்தி என்றும் தத்துவநூல்கள் சாற்றி வருகின்றன.

பேரானந்தப் பிழம்பிலிருந்து நழுவி விழுந்த உயிர் மீளவும் அதனைத் தழுவிக்கொண்டால் அன்றி யாண்டும் துன்பங்களே மூண்டு தொல்லைகளே நீண்டு என்றும் தொடர்ந்து படர்ந்து அடர்ந்து வரும்.

துயரங்களுக்கு மூலகாரணங்களை உயிர் உணர நேர்ந்தபோதுதான் அஃது உய்ய நேர்கிறது. மெய்யறிவு தெய்வ ஒளியை அருளுகிறது. சித்த பரிபாகம் உற்ற பருவத்தே தத்துவ ஞானம் உதயமாகிறது. ஆகவே மோக மையல்கள் அடியோடு ஒழிகின்றன; ஒழியவே ஏக பராபர ஒளியில் உயிர் இயல்பாய்க் கலந்து கொள்கிறது. அந்தக் கலப்பில் உலப்பில்லா ஆனந்தம் ஓங்கி எழுகின்றது.

குறைவிலா நிறைவே! கோதிலா அமுதே!
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே!
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே!

சிறைபெரு நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே!
இறைவனே! நீஎன் உடலிடம் கொண்டாய்
இனியுன்னை என் இரக் கேனே? (திருவாசகம்)

மாணிக்க வாசகர் சிவபெருமானோடு கலந்துள்ள காட்சியை இது காட்டியுள்ளது. "சிவனே! நீ என் உடல் இடம் கொண்டாய்! இனி யான் உன்னிடம் வேண்ட வேண்டியது யாதொன்றும் இல்லை" என்று குறித்திருத்தலால் சீவபோதம் முற்றும் அற்றுச் சிவமயமா யுள்ளமை தெரிய வந்தது.

உயிர்ப்பு இல் நிலை=மூச்சு இல்லாத நிலைமை. என்றது மரணத்தை. முடிவு நேருமுன் முடிவான உண்மையை உணர்ந்து உயிர்க்கு உய்தியைச் செய்து கொள்வோரே உயர்ந்த உத்தமராய் ஒளி மிகப் பெறுகின்றார்.

மெய்யுணர்வே தெய்வ ஒளியாய் உய்தியருளு கிறது. அந்த ஒளியே அந்தமில்லாத இன்பம்.

உலகப் புலைகள் யாவும் நிலையில்லாதன. நிலையான உண்மைப் பொருள் ஒன்றே. அது கடவுள் இறைவன் ஈசன் சிவன் பரமன் பிரமம் எனப் பல பேர்களால் பலவாறு பேசப்படுகிறது. பரஞ்சோதியான அந்தப் பேரொளியிலிருந்து சிதறிய சிறிய ஒளித்துளியே உயிர் என உடம்புள் உறைந்துள்ளது. இந்த உறவுரிமையை உணர்ந்து தெளிந்தால் பிறவித் துயரங்கள் பெயர்ந்து போம். பேரானந்த நிலை நேரே விரைந்து பெருகி வரும்.

உண்ணின்று ஒளிரும் உலவாப் பிராணனும்
விண்ணின்று இயங்கும் விரிகதிர்ச் செல்வனும்
மண்ணின்று இயங்கும் வாயுவு மாய்நிற்கும்
கண்ணின்று இலங்கும் கருத்தவன் தானே. (1)

நீரும் நிலனும் விசும்புஅங்கி மாருதம்
தூரும் உடம்புறு சோதியு மாயுளன்
பேரும் பராபரன் பிஞ்ஞகன் எம்மிறை
ஊரும் சகலன் உலப்பிலி தானே. (திருமந்திரம்)

என்றும் நிலையாய் எங்கும் பரந்துள்ள பரப்பிரமமே சீவசோதியாய் உடம்புள்ளும் மருவியுளது எனத் திருமூலர் இவ்வாறு உணர்த்தியுள்ளார். உடலுள்ளே ஒளி செய்துள்ள உயிரை உரிமையாகப் பெற்றவனே உயர் பேரின்பம் பெற்றவனாகின்றான்.

உண்மை தெளிக; உய்தி பெறுக.

---

60. எடுத்த பிறவிக் கினியஅணி என்றும்
அடுத்த பிறவி அடையாது—உடுத்த
உடல்கழிய நின்ற உயிர்பரமாய் இன்பக்
கடல்படிந்து நிற்றலே காண். (௬0)

இ-ள்.

அடுத்த பிறவி அடையாமல் ஆக்கிக்கொள்வதே எடுத்த பிறவிக்கு உரிய பெரிய அழகு; உற்ற உடல் ஒழிய உயிர் பரமாகிப் பேரின்பப் பெருக்கில் திளைப்பதே ஆன்மாவுக்குப் பேரழகு என்க.

ஆன்ம அழகு மேன்மையாய் அறிய வந்தது.

பிறவியில் துன்பங்கள் பெருகி வருகின்றன; பிறவாமையுள் இன்பங்கள் நிறைந்திருக்கின்றன.

ஆகவே தன் உயிர் துயர் உருமல் என்றும் உயர்வா யிருக்க வேண்டின் யாண்டும் பிறவாமையை அவன் அடைந்துகொள்ள வேண்டும். முடிவாக மனிதன் வேண்டி அடையவுரியது ஈண்டு விளங்கி நின்றது.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றது
வேண்டாமை வேண்ட வரும். (குறள், 362)

தனக்கு உரிமையாக ஒருவன் விரும்பத் தக்க பெருமையுடையது பிறவாமையே; உலக ஆசை களை அறவே துறந்து எதையும் விரும்பாதபோது தான் அந்தப் பெரும் பேறு அவனை விரும்பி வந்து அடைகிறது எனத் **தேவர்** இவ்வாறு கூறியிருக் கிருர். இதில் குறித்துள்ள உண்மையை நுண்மை யாக் கூர்ந்து ஓர்ந்துகொள்ள வேண்டும். ஈண்டு எதை வேண்டினும் அது நீண்ட துயரமே யாம்.

துன்பத்தை எவரும் விரும்பார்; இன்பத்தையே யாவரும் யாண்டும் ஆவலோடு விரும்பி வருகின்ற னர், இத்தகைய இயல்பினையுடைய மக்கள் எல் லாத் துன்பங்களுக்கும் எவ்வழியும் நிலையமாயுள்ள பிறப்பினை அடையலாமா? பேரின்ப நிலையமான பிறவாமையையே யாண்டும் உறவா அடைந்து கொள்ள வேண்டும்.

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்;
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்;
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்ருேர் உறுவது அறிகென்று அருளி.
(மணிமேகலை 2)

பிறந்தவருடைய துன்பப் புலைகளையும், பிறவா தவருடைய பேரின்ப நிலைகளையும் இதில் நேரே தெளிவாக அறிந்து கொள்கிறோம்.

பிறந்துமண் மீதில் பிணியே
 குடிகொண்டு பேரின்பத்தை
மறந்துசிற் றின்பத்தின் மேல்மயல்
 ஆகிப்புன் மாதருக்குள்
பறந்துழன் றேதடு மாறிப்பொன்
 தேடிஅப் பாவையர்க்கீந்து
இறந்திட வோபணித் தாய்இறை
 வா! கச்சி ஏகம்பனே! (பட்டினத்தார்)

பிறந்தவர் வெய்ய வேதனைகள் தோய்ந்து மையல் மயக்கங்களில் அழுந்தி இழிந்து உழலு கின்ற நிலைகளைப் பட்டினத்தார் இவ்வாறு பரிவோடு சுட்டிக் காட்டி யிருக்கிறார். பிறவிப் பெருங் கடல் என்றும் பெரிய துன்பக் கடலே.

ஆய்வுறு பெருங்கடல் அகத்து ளேயவன்,
பாய்திரை வருதொறும் பரிதற் பாலனும்
தீவினைப் பிறவிவெம் சிறையில் பட்டயாம்
நோயுறு துயர்என நுடங்கல் நோன்மையோ?
 (இராமாயணம் 3-9-87)

கடலில் விழுந்தவன் அலைகளால் அலைக்கப் படுதல்போல் பிறவிக் கடலில் விழுந்தவன் துயரப் புலைகளால் துடித்து அயர்கின்றான் என இராமர் இவ்வாறு உள்ளம் உளைந்து உரைத்துள்ளார்.

துன்பம் யாதும் தோயாமல் இன்பம் எய்த வேண்டுமானல் பிறவாமையை யாண்டும் மறவா மல் உரிமையுடன் மருவிக் கொள்ள வேண்டும்.

பிறவித் துயரங்களை உணர்ந்து தெளிந்த மகான்கள் பிறவாதிருக்கவுரிய வழிகளை விரைந்து அடைந்துகொள்ளுகின்றனர். அந்த உண்மையான தெளிவு எளிதில் அமையாது. உள்ளம் தூய்மையான உத்தமர்க்கே தத்துவ ஞானம் உதயமாகிறது.

இனிப்பிறவா முடிவான பிறப்பிலே
மெய்ஞ்ஞானம் எளிதில் உண்டாம்;
பனிச்சுடர்வெண் நித்திலங்கள் உத்தமமாம்
மூங்கில் அல்லால் படுவது உண்டோ?
செனித்தவரின் மேலோராய் நல்லோராய்
மித்திரராய்த் தெளிந்தோர் ஆகி
அனித்தமறும் உத்தமராய் ஞானிகளாம்
குணம்எல்லாம் அவரைச் சேரும்.
(ஞானவாசிட்டம்)

மெய்யுணர்வே வெய்ய பிறவியை நீக்க வல்லது. அந்த மெய்ஞ்ஞானம் எப்பொழுது தோன்றும்? இனிமேல் யாதொரு பிறவியும் இல்லை என்னும்படி புனிதராய்ப் படிஏறி வந்துள்ள உத்தம முத்தருக்கே அது உரிமையாய் அமையும்: அவ் வுண்மையை இதில் ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம்.

உயிரையும் உயிர்க்கு உயிரான பரமனையும் உண்மையாக உணர்வதே மெய்ஞ்ஞானம். அந்த ஞான ஒளி தோன்றவே ஈன இருள் எல்லாம் அடியோடு இரிந்து ஒழிந்து போம்.

உயிர் பரமாய் நிற்றல்.

துயர் நீங்கி உயிர் உயர் இன்பம் உறும்நிலையை இது துலக்கியுளது. சீவனைச் சிவம் ஆக்கிக்கொள்

வதே தெளிந்த ஞானம். உள்ளம் தெளிந்து தூய்மையான பொழுது பேரின்ப வெள்ளமே அங்கே நேரே பெருகி வருகிறது.

எடுத்த தேகம் இறக்குமுனே எனைக்
கொடுத்து நின்னையும் கூடவும் காண்பனோ?
அடுத்த பேரறிவாய்அறி யாமையைக்
கெடுத்த இன்பக் கிளர்மணிக் குன்றமே!
(தாயுமானவர்)

என்னை எடுத்துக் கொண்டு உன்னைக் கொடுத்தருள் என்று ஈசனை நோக்கித் தாயுமானவர் இவ்வாறு பேசியிருக்கிறார். எவ்வளவு உறவுரிமையிருந்தால் இவ்வளவு உறுதியா உரையாட வரும்?

படமுடியாது இனித்துயரம் படமுடியாது அரசே!
பட்டதெலாம் போதும்இந்தப் பயம்தீர்த்து இப்பொழுது [என்
உடலுயிர்ஆ தியஎல்லாம் நீஎடுத்துக் கொண்டு உன்
உடலுயிரா தியஎல்லாம் உவந்து எனக்கே அளிப்பாய்!
(அருட்பா)

ஆண்டவனை நோக்கி **இராமலிங்க** அடிகள் இப்படி வேண்டியிருக்கிறார். சீவான்மாவும் பரமான்மாவும் ஒரே உருவம்; ஒரே சோதி. இந்த உண்மையை உள்ளம் தெளிந்த ஞானிகள் உணர்ந்துகொள்ளுகின்றனர். கொள்ளவே ஏகபோகமாய் இன்பம் எய்துகின்றனர். இயல்பாகவே இன்பமயமான ஆன்மா மயல் ஒழிந்த உடன் உயர் பரமாய் ஒளி பெற்றுச் சுகவாரிதியாய்த் திகழ்கின்றது.

இருவினையும் மலமும்அற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயும் நானுமாய்

இறுகும்வகை பரமசுகம் அதனையருள் இடைமருதில்
ஏகநாயகா! லோகநாயகா! இமையவர் பெருமாளே!
(திருப்புகழ், 107)

அருணகிரிநாதருடைய ஆன்ம அனுபவ நிலையை இங்கே கூர்ந்து ஓர்ந்து உவந்து கொள்கின்றோம்.

வினைத் தொடர்புகள் அற்று உயிர் பரிசுத்த நிலையை அடைந்தபோது பரமபதியோடு தோய்ந்து பேரானந்தங்களை நுகர்ந்து மகிழ்ந்து ஒன்றாய் உறைந்திருக்கும் என்பதை இதனால் உணர்ந்து உண்மை நிலைகளைத் தெளிந்து கொள்கிறோம்.

பாசம் நீங்கிய அளவே பசு பதியுடன் கலந்து களிக்கின்றது. **பசுபதி** எனப் பரமேசுரன் பேர் பெற்றுள்ள பெற்றியை உற்றுணரின் உயிரின் உயர் பேரின்ப நிலையைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். உள்ளம் தூய்மையாய் உணர்வு தெளிந்துவரின் எல்லா இன்பங்களும் எளிதே எய்த வரும்.

சீவன்எனச் சிவன்என்ன வேறில்லை;
சீவனார் சிவனாரை அறிகிலர்;
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவனாயிட் டிருப்பரே.
(திருமந்திரம் 2017)

இந்த மந்திர மொழியைச் சிந்தனை செய்க.

அணியறுபது முற்றுப் பெற்றது.

அணியறுபது ... 15
அயல்சார்ந் ... 72
அற்றவர்க் ... 54
ஆசையறு ... 149
ஆர்ந்ததுற ... 48
ஆவுக்கு ... 93
ஆற்றுக்கு ... 83
ஆழிசூழ் ... 9
ஆன்மஉணர் ... 143
இம்மைக்கு ... 107
இல்லுக்கு ... 39
இவ்வுலக ... 65
ஈகைக் ... 94
உடலுக்கணி ... 120
உயிர்க்கு ... 159
உற்றஉரு ... 108
உற்றமுக ... 37
உற்றமுயற் ... 98
ஊருக்கணி ... 115
எடுத்த ... 162
எழுத்துக் ... 118
ஒற்றுக் ... 111
ஓர்தற்கணி ... 122
கங்கைக் ... 95
கண்ணுக்கு ... 18
கற்றபடி ... 96
கற்றூர்க் ... 32
காலம்கரு ... 117
குடிகளைக் ... 43
குளத்துக் ... 80
கேட்கும்செவி ... 56
கொல்லாமைநோ ... 101
கொல்லாமையே ... 45
கோலமத ... 90
சித்தத் ... 152
செலவுக் ... 69
செல்வர்க் ... 114
சொல்லுக் ... 34
தந்தைதாய் ... 31
தந்தையே ... 14
தன்னைஅறி ... 128
தாய்மொழி ... 105
தானைக் ... 50
தேட்டுக் ... 113
நல்லதை ... 146
நாட்டுக்குக் ... 78
நாட்டுக்குநல் ... 51
நாளுக் ... 102
நிலத்துக் ... 76
நூலுக்கு ... 100
நெஞ்சினி ... 16
நெஞ்சுக் ... 35
பல்லுக் ... 62
புந்திக் ... 103
பூவுக் ... 85
பேசாத ... 133
பொய்கைக் ... 81
பிறப்புக் ... 157
மரபுக் ... 67
மனத்து ... 29
மானம் ... 112
மூக்குக் ... 59
யோகிக்கு ... 137
வேதியர்க்கு ... 41